நித்திய ஜீவ பாதை

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

மெய் வாழ்வுக்கு வழி

யோவான் எழுதின நற்செய்தி நூல்

(புதிய மொழிபெயர்ப்பு)

இந்தியா வேதாகமச் சங்கம்
20 மஹாத்மா காந்தி சாலை
பெங்களூர்

© THE BIBLE SOCIETY OF INDIA 1982

THE WAY OF LIFE—TAMIL—JOHN C. L.

1,77,000/82

The Bible House

P. B. No. 502

Park Town, Madras 600 003

Ramanath Prass, Madras-600 024

யோவான் எழுதின அருட்செய்தி நூல்

முன்னுரை

1 ஆதியிலேயே திருவாக்கு இருந்தார்; அந்த வாக்கு,
கடவுளோடிருந்தார்; அந்த வாக்கு, கடவுளுமாயிருந்
தார். அவர் ஆதியிலேயே கடவுளோடிருந்தார். அவர் 2, 3
மூலமாகவே எல்லாம் உண்டாயின. *உண்டானதெது
வும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. அவருள் 4
ளேயே மெய்வாழ்வு இருந்தது; அந்த வாழ்வே மனிதருக்கு
ஒளியாயிருந்தது. அந்த ஒளி இருளில் சுடர் வீசிக்கொண் 5
டிருக்கிறது. இருளால் அதை அடக்கிவிட இயலவில்லை.†
கடவுளால் அனுப்பப்பட்ட மனிதர் ஒருவர் இருந்தார்; 6
அவருடைய பெயர் யோவான். அவர் அந்த ஒளியைக் 7
குறித்துச் சாட்சிகூற வந்தவர். அவர்மூலம் எல்லாரும்
அந்த ஒளியிடம் நம்பிக்கை கொள்ளும்படி, அவர் அந்த
ஒளியைக் குறித்துச் சாட்சிகூற வந்தார். அவர் அந்த 8
ஒளியல்ல. அந்த ஒளியைக் குறித்துச் சாட்சிகூற
வந்தவரே. ‡எந்த மனிதனுக்கும் ஒளிதருகிற அந்த 9
மெய்யான ஒளி அப்போதே உலகத்துக்கு வந்தார். அவர் 10
உலகத்தில் இருந்தார்; உலகமும் அவர் மூலமாக உண்
டானதுதான்; ஆனால் உலகமோ அவரை அறிந்துகொள்ள
வில்லை. அவர் தமக்குச் சொந்தமாயிருந்த இடத்திற்கே 11
வந்தார்; அவருக்குச் சொந்தமாயிருந்தவர்களோ அவரை
ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனாலும், யார் யார் அவரை 12
ஏற்றுக்கொண்டார்களோ, அதாவது யார் யார் அவரது
திருப்பெயரில் நம்பிக்கை வைத்தார்களோ, அவர்களுக்குக்
கடவுளின் பிள்ளைகளாகும் உரிமையை அவர் அளித்தார்.
இவர்கள் இரத்தத்தினாலோ, இயற்கையான ஆசையி 13
னாலோ, கணவனுடைய விருப்பத்தினாலோ பிறந்தவர்க
ளல்ல, கடவுளாலேயே பெற்றெடுக்கப்பட்டவர்கள்.
திருவாக்கு மானிடனாகிவிட்டார்; அவ்வாறாகி, அருளும் 14
சத்தியமும் நிறைந்தவராய் நம்மிடையே தங்கியிருந்தார்;

---

* 'அவராலேயல்லாமல் எதுவும் உண்டாகவில்லை; (4) உண்டான தெதுவோ அது அவராலே மெய்வாழ்வு பெற்றதாயிருந்தது; அந்த வாழ்வு மனிதருக்கு ஒளியாயிருந்தது' என்பதும் பாடம்.

† 'புரிந்துகொள்ள இயலவில்லை' என்றும் மொழிபெயர்க்கலாம்.

‡ 'உலகத்தில் தோன்றும் எந்த மனிதனுக்கும் ஒளிதருகிற மெய்யான ஒளி அந்த ஒளியே' என்பதும் பாடம்.

அவரது மாட்சிமையை நாங்கள் கண்ணுரக் கண்டோம்.
அம்மாட்சிமை விண்ணகத் தந்தையிடமிருந்து வரும் ஒரே
15 பேறுனவருக்கே உரிய மாட்சிமையாயிருந்தது. யோவா
னும், "எனக்குப்பின் வருகிறவர் என்னைவிடப் பெரியவர்;
நான் பிறப்பதற்கு முன்பிருந்தே அவர் இருக்கிறுர் என்று
நான் சொன்னவர் இவரே'' என வெளிப்படையாக
உரைத்து அவரைக் குறித்துச் சாட்சி கூறியிருக்கிறுர்.
16 அவரது அருளின் நிறைவிலிருந்து நாம் எல்லோரும் அருள்
17 மேல் அருள் பெற்றிருக்கிறோம். மோசேயின்மூலம் நீதிச்
சட்டம் கொடுக்கப்பட்டது; இயேசுகிறிஸ்துவின்மூலம்
18 அருளும் சத்தியமும் கிடைத்தன. கடவுளை ஒருவனும்
ஒருபோதும் கண்டதில்லை, விண்ணகத் தந்தை தம்
மார்போடணைத்துக்கொண்டுள்ள ஒரேபேறுன கடவுளே*
அவரை வெளிப்படுத்திஞர்.

திருமுழுக்குநர் யோவானது சாட்சியம்

(மத். 3:1–12; மாற். 1:7,8; லூக். 3:15–17)

19 எருசலேமிலிருந்து யூதர்கள், ஆசாரியர் சிலரையும்
இலேவியர் சிலரையும் யோவானிடம் அனுப்பி, ''நீர்
யார்?'' என்று கேட்டபோது, ''நான் மேசியா
20 வல்ல'' என்பதே அவர் கூறிய சாட்சியம்; இவ்வாறு
அவர் ஒப்புக்கொண்டு, மறுக்காமல் வெளிப்படையாகவும்
அறிவித்தார்.

21 அப்பொழுது அவர்கள், ''அப்படியானுல் நீர்
யார்? நீர் எலியாவா?'' என்று கேட்க, அவர்,
''இல்லை'' என்றுர். ''வரவேண்டிய இறைவாக்குரை
பவர் நீர்தாமோ?'' என்று கேட்டதற்கும், அவர்
22 ''இல்லை'' என்றுர். எனவே, அவர்கள் அவரிடம், ''நீர்
யார் என்பதைச் சொல்லும், எங்களை அனுப்பினவர்
களுக்கு நாங்கள் பதில் சொல்லவேண்டுமே; உம்மைப்
பற்றி என்னதான் சொல்லுகிறீர்?'' | என்று கேட்டார்
23 ள். அதற்கு அவர்,

'''ஆண்டவரின் வழியைச் செவ்வையாக்குங்கள்
என்று வனந்தரத்தில் கூக்குரலிடுகிறவனுடைய
தொனி'

என்று இறைவாக்குரைப்பவராகிய ஏசாயா குறிப்பிட்ட
24 தொனிதான் நான்'' என்று சொன்னுர். இந்த ஆள்கள்
25 பரிசேயரால் அனுப்பப்பட்டவர்கள். அவர்கள் அவரைப்

* 'மைந்தரே' என்பதும் பாடம்.

பார்த்து, ''நீர் கிறிஸ்துவுமல்ல, எலியாவுமல்ல, வர
வேண்டிய இறைவாக்குரைப்பவருமல்லவென்றால், ஏன்
திருமுழுக்குக் கொடுக்கிறீர்?'' என்று கேட்டார்கள்.
அதற்கு யோவான் அவர்களிடம், ''நான் தண்ணீரினால் 26
திருமுழுக்குக் கொடுக்கிறேன்; நீங்கள் அறியாதிருக்கிற
ஒருவர் உங்களிடையே இருக்கிறார். எனக்குப்பின் வருகிற 27
வர் அவரே; அவருடைய மிதியடியின் வாரை அவிழ்க்க
வும் எனக்குத் தகுதியில்லை'' என்று சொன்னார். இது 28
யோவான் திருமுழுக்குக் கொடுத்துவந்த யோர்தான்
ஆற்றின் அக்கரையிலுள்ள பெத்தானியா என்னும் ஊரில்
நடந்தது.

இதோ, தெய்வ ஆட்டுக்குட்டி!

மறுநாள் யோவான் தம்மிடம் இயேசு வருகிறதைக் 29
கண்டு, ''இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து
நீக்கிடும் தெய்வ ஆட்டுக்குட்டி. எனக்குப்பின் ஒருவர் 30
வருகிறார்; அவர் என்னைவிடப் பெரியவர், நான் பிறப்ப
தற்குமுன்பே அவர் இருக்கிறார் என்று நான் சொன்னவர்
இவரே. இவர் இன்னாரென்பது எனக்குத் தெரியாதிருந்த 31
போதிலும், இஸ்ரவேல் மக்களுக்கு இவர் வெளிப்படுத்தப்
படும்பொருட்டே நான் தண்ணீரினால் திருமுழுக்குக்
கொடுக்கிறவனாய் வந்தேன்'' என்றார். அவர் மேலும் 32
கூறிய சாட்சியமாவது: ''ஆவியானவர் புறாவைப்போல
வானத்தினின்று இறங்கி இவர்மீது தங்குவதை நான்
கண்டேன். இவர் இன்னாரென்பது எனக்குத் தெரியா 33
மலேதான் இருந்தது. ஆனால், தண்ணீரால் திருமுழுக்குக்
கொடுக்கும்படி என்னை அனுப்பினவர், 'ஆவியானவர்
இறங்கி யார்மீது தங்குவதை நீ காண்பாயோ அவரே
தூய ஆவியினால் திருமுழுக்குக் கொடுப்பவர்' என்று
எனக்குச் சொல்லியிருந்தார். அப்படியே நான் கண்டு, 34
'இவரே கடவுளின் மைந்தர்' என்று சாட்சிகூறி
வருகிறேன்'' என்பது.

முதன் முதலாகச் சீடரானவர்கள்

மறுநாள் யோவான் தம்முடைய சீடருள் இருவருடன் 35
நின்றுகொண்டிருந்தபோது, அப்பக்கம் நடந்துசென்ற 36
இயேசுவை உற்று நோக்கி, ''இதோ, தெய்வ ஆட்டுக்
குட்டி!'' என்றார். அந்தச் சீடர் இருவரும் அவர் 37
சொன்னதைக் கேட்டு, இயேசுவுக்குப் பின்னே நடந்து
சென்றனர். இயேசு திரும்பிப் பார்த்து, அவர்கள் தம் 38
பின்னே வருவதைக் கண்டு, அவர்களிடம், ''உங்களுக்கு

என்ன வேண்டும்?'' என்று கேட்டார். அதற்கு அவர்கள்,
''ரபி, நீர் எங்கே தங்கியிருக்கிறீர்?'' என்று கேட்டார்கள்
39 (ரபி என்பதற்குப் போதகர் என்பது பொருள்). அவர்,
''வாருங்கள், நீங்களே அதைக் கண்டுகொள்வீர்கள்''
என்றார். அவர்களும் போய் அவர் தங்கியிருந்த இடத்
தைக் கண்டு, அன்று அவருடன் தங்கினார்கள்.
அப்பொழுது நேரம் ஏறக்குறையப் பிற்பகல் நான்கு
40 மணி* இருக்கும். யோவான் சொன்னதைக் கேட்டு
அவரைப் பின்பற்றிச் சென்ற இருவருள் ஒருவர்
அந்திரேயா என்பவர். அவர் சீமோன் பேதுருவின் உடன்
41 பிறந்தார். அவர் போய் முதலில் தம் உடன்பிறந்தார்
சீமோனைக் கண்டுபிடித்து அவரிடம், ''மேசியாவைக்
கண்டுவிட்டோம்'' என்று சொன்னார் (மேசியா என்ப
42 தற்குக் கிறிஸ்து† என்பது பொருள்). பிறகு அவரை
இயேசுவினிடம் கூட்டிக்கொண்டு வந்தார். இயேசு
அவரை உற்று நோக்கி, ''நீ யோவானுடைய மகன்
சீமோன்; நீ கேபா‡ என்று அழைக்கப்படுவாய்'' என்றார்
(கேபா என்பதற்கும், பேதுரு என்பதற்கும் பொருள்
ஒன்றே).

பிலிப்பு, நாத்தான்வேல் என்றவர்கள் சீடராகும்படி அழைக்கப்படுதல்

43 மறுநாள் இயேசு கலிலேயாவுக்குப் போகத் தீர்மானித்
தார். அப்பொழுது அவர் பிலிப்புவைக் கண்டு,
44 ''என்னைப் பின்பற்றி வா'' என்றார். பிலிப்பு, அந்தி
ரேயாவையும் பேதுருவையும்போல, பெத்சாயிதா
45 ஊரினர். பிலிப்பு நாத்தான்வேலைக் கண்டு, ''மோசே
நீதிச்சட்ட நூலிலும், இறைவாக்குரைப்போர் தம் நூல்
களிலும் யாரைக் குறித்து எழுதியிருக்கிறார்களோ அவரை
நாங்கள் கண்டுவிட்டோம். அவர் யோசேப்பின் மைந்தர்
46 நாசரேத்தூர் இயேசுவே'' என்று சொன்னார். அதற்கு
நாத்தான்வேல், ''நாசரேத்திலிருந்து எந்த நன்மை
யாவது வரக்கூடுமா?'' என்றார். பிலிப்பு, ''நீரே வந்து
47 பாரும்'' என்று சொன்னார். நாத்தான்வேல் தம்மை
நோக்கி வருகிறதை இயேசு கண்டு, அவரைப்பற்றி,

---

* மூலத்தில், யூதர் கணக்குப்படி, பத்தாம் மணி என்றிருக்கிறது.

† மேசியா என்கிற எபிரேயச் சொல்லுக்கும், கிறிஸ்து என்கிற கிரேக்கச் சொல்லுக்கும் 'அபிஷேகம் செய்யப்பட்டவர்' என்பது பொருள்.

‡ அரமேயு பதமான கேபா என்பதும், கிரேக்க பதமான பேதுரு என்பதும் கற்பாறை என்று பொருள்படும் பகுதிகளினடியாகப் பிறந்தவை.

''இவரே உண்மையான இஸ்ரவேலர், இவரிடம் கபடம்
என்பதே இல்லை'' என்றார். நாத்தான்வேல் அவரிடம், 48
''என்னை உமக்கு எப்படித் தெரியும்?'' என்று கேட்டார்.
இயேசு அவரிடம், ''பிலிப்பு உன்னை அழைக்குமுன், நீ
அத்திமரத்தின்கீழ் இருந்தபோதே நான் உன்னைப் பார்த்
தேன்'' என்று சொன்னார். அதற்கு நாத்தான்வேல், 49
''ரபீ, நீரே கடவுளின் மைந்தர், நீரே இஸ்ரவேலின்
அரசர்'' என்றார். இயேசு அவரை நோக்கி, ''உன்னை 50
அத்திமரத்தின் கீழே பார்த்தேனென்று நான் உனக்குச்
சொன்னதால் இப்படி நம்புகிறாயா? இதைவிடப் பெரிய
காரியங்களை நீ பார்க்கப் போகிறாய்'' என்று சொன்னார்.
மேலும் அவர், ''மிகவும் உறுதியாக உங்களுக்குச் 51
சொல்லுகிறேன், வானம் திறந்திருக்கிறதையும், தெய்வ
தூதர் மனுமைந்தர் வழியாக ஏறிச் செல்கிறதையும்
இறங்கிவருகிறதையும் நீங்கள் காண்பீர்கள்'' என்று
அவரிடம் சொன்னார்.

கானாவில் நடந்த திருமணம்

2 மூன்றாம் நாள் கலிலேயாவிலுள்ள கானா என்னும்
ஊரில் திருமணம் ஒன்று நடைபெற்றது; இயேசுவின்
தாயாரும் அங்கே இருந்தார். இயேசுவும் அவருடைய 2
சீடர்களும் அந்தத் திருமணத்துக்கு அழைக்கப்பட்டிருந்
தார்கள். திராட்சை இரசம் போதாமற்போனபோது, 3
இயேசுவின் தாயார் அவரைப் பார்த்து, ''அவர்களிடம்
திராட்சை இரசம் தீர்ந்துபோயிற்று'' என்று சொன்னார்.
அதற்கு இயேசு, ''அம்மணீ, நான் செய்யவேண்டியதை 4
நீ எனக்குச் சொல்லத் தேவையில்லை. என் நேரம்
இன்னும் வரவில்லை'' என்றார். அவருடைய தாயார் 5
பணியாளரிடம், ''இவர் உங்களுக்கு என்ன சொல்லு
கிறாரோ அதைச் செய்யுங்கள்'' என்று சொன்னார்.
யூதரின் சுத்திகரிப்பு முறைமையை முன்னிட்டு ஆறு கற் 6
சாடிகள் அங்கே வைக்கப்பட்டிருந்தன; அவற்றுள் ஒவ்
வொன்றும் இரண்டு மூன்று குடம் தண்ணீர் கொள்ளும்.
இயேசு பணியாளரிடம், ''இந்தச் சாடிகளில் தண்ணீர் 7
நிரப்புங்கள்'' என்று சொன்னார். அவர்கள் அவற்றை
விளிம்புவரை நிரப்பினார்கள். பிறகு அவர் அவர்களிடம், 8
''இப்போது இதை மொண்டு, பந்தி விசாரிக்கிறவனிடம்
கொண்டுபோங்கள்''என்று சொல்ல, அவர்களும் கொண்டு
போனார்கள். திராட்சை இரசமாய் மாறியிருந்த அந்தத் 9
தண்ணீரைப் பந்தி விசாரிக்கிறவன் சுவை பார்த்தான்.
அது எப்படி வந்ததென்பது அவனுக்கு அப்போது

தெரியாது; அது தண்ணீரை மொண்டுவந்த பணி
யாளருக்குத்தான் தெரியும். ஆகையால் பந்தி விசாரிக்
10 கிறவன் மணவாளனை அழைத்து, | அவனிடம், ‘‘எல்லாரும்
உயர்ந்த இரசத்தை முதலில் பரிமாறுவார்கள்; மக்கள்
நன்றாய்க் குடித்தபின் தரத்தில் குறைவானதைக் கொடுப்
பார்கள்; நீயோ உயர்ந்த இரசத்தை இதுவரையிலும்
11 வைத்திருந்தாயே’’ என்று சொன்னான். இவ்வாறு,
இயேசு, தெய்வ ஆற்றலுக்கு அடையாளமாகத் தாம்
செய்த செயல்களுள் முதலாவதான இந்தச் செயலைக்
கலிலேயாவிலுள்ள கானாவூரில் செய்து, தம்
மாட்சிமையை வெளிப்படுத்தினார்; அவருடைய சீடர்கள்
அவரிடம் நம்பிக்கைகொண்டார்கள்.

12 அதன்பின் அவரும் அவருடைய தாயாரும் சகோ
தரரும் சீடர்களும் கப்பர்நகூம் என்னும் ஊருக்குப்
போனார்கள். அங்கே சில நாள்கள் வரையில் தங்கியிருந்
தார்கள்.

இயேசு திருக்கோவிலைப் புனிதமாக்குதல்

(மத். 21:12,13; மாற். 11:15–18; லூக். 19:45,46)

13 யூதரின் பஸ்காப் பண்டிகை* நெருங்கிவிடவே, இயேசு
14 எருசலேமுக்குப் போனார். அங்கே திருக்கோவிலில் ஆடு
மாடு புறா விற்கிறவர்களையும் காசுக்கடை அமைத்துக்
கொண்டு உட்கார்ந்திருக்கிறவர்களையும் கண்டு,
15 கயிற்றினால் ஒரு சாட்டையைச் செய்து, அவர்கள்
எல்லாரையும் ஆடுமாடுகள் அனைத்தையும் திருக்
கோவிலுக்கு வெளியே துரத்தினார்; காசுக்கடைக்கார
ருடைய சில்லறைகளைச் சிந்திச் சிதறிப் பலகைகளையும்
16 கவிழ்த்துப்போட்டார்; பிறகு அவர் புறா விற்றுக்கொண்
டிருந்தவர்களைப் பார்த்து, ‘‘இவற்றை இங்கிருந்து
எடுத்துச் செல்லுங்கள்; என் தந்தையாரின் வீட்டை
வாணிகஞ் செய்யும் நிலையமாக்க வேண்டாம்’’ என்று
17 சொன்னார். அவருடைய சீடர்கள், ‘‘உமது வீட்டைப்
பற்றிய ஆர்வம் என்னை எரித்துவிடும்’’ என்று வேதத்
தில் எழுதியுள்ளதை நினைவுபடுத்திக்கொண்டார்கள்.
18 ஆனால், யூதர்கள் அவரைப் பார்த்து, ‘‘நீர் இப்படிச்
செய்யலாம் என்பதற்கு ஆதாரமாக எங்களுக்குக்
காட்டும் அடையாளம் என்ன?’’ என்று கேட்டார்கள்.
19 அதற்கு இயேசு, ‘‘இந்தக் கோவிலை இடித்துவிடுங்கள்;
நான் மூன்று நாளில் இதை எழுப்புவேன்’’ என்று
20 அவர்களிடம் சொல்ல, | யூதர்கள், ‘‘இந்தக் கோவில்
நாற்பத்தாறு ஆண்டுகளில் கட்டப்பட்டதாயிற்றே;

இதை நீர் மூன்றே நாளில் எழுப்பிவிடுவீரோ?'' என்று
கேட்டார்கள். ஆனால், அவர் சொன்னதோ அவரது 21
உடலாகிய கோவிலைப்பற்றியது. ஆகையால், அவர் 22
இப்படிச் சொன்னதை அவர் இறந்தோரிடமிருந்து
உயிரோடெழுப்பப்பட்டபின் அவருடைய சீடர்கள்
நினைவுபடுத்திக்கொண்டு, வேத வாக்கியத்தையும் இயேசு
சொன்ன சொல்லையும் நம்பினார்கள்.

இயேசு மனிதரை அறிவார்

பஸ்காப் பண்டிகைக் காலத்தில் இயேசு எருசலேமில் 23
இருக்கையில், அவர் செய்த அரிய செயல்களைக் கண்ட
பலர் அவரது திருப்பெயரில் நம்பிக்கை வைத்தனர்.
ஆனால், இயேசுவோ அவர்களை நம்பித் தம்மை அவர்க 24
ளிடம் ஒப்படைத்துவிடவில்லை. ஏனெனில், அவர்
எல்லா மனிதரையும் அறிந்திருந்தார். எந்த ஒரு 25
மனிதனைப்பற்றியும் அவருக்கு யாரும் எதையும் எடுத்துச்
சொல்வது தேவையில்லாதிருந்தது. மனிதன் உள்ளத்தி
லிருப்பதை அவர் தாமாகவே தெரிந்துகொள்ளுகிறவர்.

இயேசுவும் நிக்கொதேமுவும்

3 நிக்கொதேமு என்ற ஒரு மனிதர் இருந்தார்; அவர்
பரிசேயர், யூதருடைய தலைவர்களுள் ஒருவர்.
அவர் ஒரு நாள் இரவு இயேசுவினிடம் வந்து, ''ரபீ, நீர் 2
கடவுளிடமிருந்து வந்த போதகர் என்பது எங்களுக்குத்
தெரியும். கடவுள் தன்னோடு இருந்தாலன்றி ஒருவனாலும்
நீர் செய்யும் இந்த அரிய செயல்களைச் செய்ய முடியாது''
என்றார். அதற்கு இயேசு, ''ஒருவன் மறுபடியும் 3
பிறந்தாலன்றிக் கடவுளின் அரசைக் காண முடியாது
என்று மிகவும் உறுதியாக உனக்குச் சொல்லுகிறேன்''
என்று சொன்னார். அப்பொழுது நிக்கொதேமு, 4
''வயதானபின் ஒருவன் எப்படிப் பிறக்க முடியும்? அவன்
தாயின் வயிற்றில் இரண்டாம் முறை நுழைந்து பிறக்க
முடியுமா?'' என்று கேட்டார். அதற்கு இயேசு, 5
''ஒருவன் தண்ணீரினாலும் ஆவியினாலும் பிறந்தாலன்றி
அவனால் கடவுளின் அரசினுள் செல்ல முடியாது என்று
மிகவும் உறுதியாக உனக்குச் சொல்லுகிறேன். ஊன் 6
இயல்பினால் பிறப்பது ஊன் இயல்புடையது, ஆவியினால்
பிறப்பது ஆவியின் இயல்புடையது. நீங்கள் மறுபடியும் 7
பிறந்தாக வேண்டும் என்று நான் உனக்குச் சொன்ன

* கிரேக்க பதம், 'மேலிருந்து என்றும் பொருள்படும்.

8 தைக் குறித்து வியப்படைய வேண்டாம். *காற்று
தனக்கு விருப்பமான இடத்தில் வீசுகிறது; அதன்
ஓசையை நீ கேட்கிருய்; ஆனால் அது எங்கிருந்து வருகிற
தென்பதும் எங்கே செல்கிறதென்பதும் உனக்குத்
தெரியாது: ஆவியினால் பிறந்தவன் எவனும் அப்படியே
9 தான் இருப்பான்'' என்றார். அதைக் கேட்ட
நிக்கொதேமு, ''இது எப்படி நடக்க முடியும்?'' என்றார்.
10 அதற்கு இயேசு, ''நீ இஸ்ரவேல் மக்களுக்குப் போதகனா
11 யிருந்தும் இது உனக்குத் தெரியவில்லையா? மிகவும் உறுதி
யாக உனக்குச் சொல்லுகிறேன்: எங்களுக்குத் தெரிந்த
தைச் சொல்லுகிறோம்; நாங்கள் கண்டதை எங்கள்
சாட்சியத்தில் கூறுகிறோம்; ஆனால் நீங்களோ எங்கள்
12 சாட்சியத்தை ஏற்றுக்கொள்வதில்லை. மண்ணுலகத்துக்
கடுத்தவற்றை நான் உங்களுக்குச் சொன்னேன்,
நீங்களோ நம்பவில்லை; அப்படியானால் விண்ணுலகத்துக்
கடுத்தவற்றை நான் உங்களுக்குச் சொன்னால் அதை
13 நீங்கள் எப்படி நம்பப்போகிறீர்கள்? †விண்ணுலகி
லிருந்து இறங்கி வந்தவராகிய மனுமைந்தரைத் தவிர
வேறு யாரும் விண்ணுலகிற்கு ஏறிப்போனதில்லை.
14 மோசேயினால் வெண்கலப் பாம்பு பாலைநிலத்தில்
15 உயர்த்தப்பட்டது. அதுபோல, மனுமைந்தரும் அவரிடம்
நம்பிக்கைகொண்டிருக்கிற ஒவ்வொருவனுக்கும் அவரால்
என்றுமுள்ள மெய்வாழ்வு கிடைக்கும்படி உயர்த்தப்பட
வேண்டும்.

16 ''கடவுள், தம்முடைய ஒரேபேறான மைந்தரிடம்
நம்பிக்கை கொள்ளும் எவனும் கெட்டழிந்து போகா
திருந்து என்றுமுள்ள மெய்வாழ்வைப் பெறும்படி,
அவரைத் தந்தருளினார்; இந்த அளவுக்கு அவர் உலகத்
17 தின்மீது அன்புகூர்ந்தார். எனவே, தம் மைந்தர்
உலகத்துக்குக் குற்றத் தீர்ப்பு அளிக்கவேண்டுமென்று
அவரைக் கடவுள் உலகத்துக்கு அனுப்பவில்லை; உலகம்
அவரால் மீட்புப்பெற வேண்டுமென்றே அவரை அனுப்பி
18 னார். அவரிடம் நம்பிக்கை கொண்டிருக்கிறவன்
குற்றவாளி என்ற தீர்ப்புப் பெறுவதில்லை. ஆனால்
அவரிடம் நம்பிக்கைகொண்டிராதவனோ கடவுளின் ஒரே
பேறான மைந்தரின் திருப்பெயரில் நம்பிக்கை வைக்காத
தால், அவன் ஏற்கெனவே குற்றவாளி என்ற தீர்ப்புக்கு

* ஒரே கிரேக்க பதம், 'காற்று' என்றும், 'ஆவி' என்றும் பொருள்
படும்.

† 'விண்ணுலகிலிருந்து இறங்கிவந்தவரும் விண்ணுலகில் உள்ளவரு
மான மனுமைந்தரைத் தவிர' என்பது சில பிரதிகளின் பாடம்.

உள்ளாகிவிட்டான். மனிதருடைய செய்கைகள் 19
பொல்லாதவையானதால், ஒளி உலகத்தில் வந்திருந்தும்,
அவர்கள் அந்த ஒளியை விரும்பாமல் இருளையே
விரும்பினார்கள். அவர்களுக்கு இதுவே தெய்வத் தீர்ப்பு.
தீமை செய்பவன் எவனும் ஒளியை வெறுக்கிறான்; அவன் 20
தன் செய்கைகள் வெளிக்குத் தெரியக்கூடாது என்பதற்
காக ஒளியினிடம் வராமலிருக்கிறான். ஆனால் சத்தி 21
யத்தை நடைமுறையில் கைக்கொள்ளுகிறவனோ தன்
செய்கைகள் கடவுளுக்குட்பட்ட நிலையில் செய்யப்
பட்டவை என்பது வெளிக்குத் தெரியும்படி ஒளியினிடம்
வருகிறான்'' என்று சொன்னார்.

இயேசுவும் யோவானும்

அதன்பின் இயேசுவும் அவருடைய சீடர்களும் யூதேயா 22
நாட்டிற்குப் போனார்கள்; அங்கே அவர் அவர்களோடு
தங்கி மக்களுக்குத் திருமுழுக்குக் கொடுத்தார். யோவா 23
னும் சாலீம் ஊருக்கு அருகிலுள்ள அயினோன் என்னும்
இடத்தில் திருமுழுக்குக் கொடுத்துக்கொண்டிருந்தார்.
அங்கே தண்ணீர் மிகுதியாய் இருந்தது. மக்கள் அவரிடம்
வந்து திருமுழுக்குப் பெற்றார்கள். யோவான் சிறையில் 24
அடைக்கப்படுவதற்கு முன்பு இப்படி நடந்தது.

ஒரு நாள் யோவானுடைய சீடருக்கும் யூதன் ஒருவ 25
னுக்கும் சுத்திகரிப்பு முறைபற்றித் தருக்கம் உண்
டாயிற்று. அவர்கள் யோவானிடம் வந்து, ''ரபீ, 26
யோர்தான் ஆற்றின் அக்கரையில் உம்முடன் ஒருவர்
இருந்தாரே, அவரைக் குறித்து நீர் சாட்சியமும்
சொன்னீரே, இதோ பாரும், அவர் திருமுழுக்குக் கொடுக்
கிறார், எல்லாரும் அவரிடம் போகின்றனர்'' என்று
சொன்னார்கள். அதற்கு யோவான், ''கடவுள் ஒருவ 27
னுக்கு அருளியதைத் தவிர வேறு எதையும் அவன்
தனக்கு உரியதாக்கிக்கொள்ள இயலாது. நான் 28
கிறிஸ்துவல்ல, நான் அவருக்கு முந்தி அனுப்பப்பட்ட
வனே என்று நான் சொன்னதற்கு நீங்களே சாட்சிகள்.
மணவாட்டியை உடையவனே மணவாளன். மணவாள 29
னுடைய தோழன் அவனருகில் நின்று, அவன் சொல்வ
தைக் கேட்கிறான், அவனுடைய குரலைக் கேட்டுப் பெரு
மகிழ்ச்சி அடைகிறான். அந்த மகிழ்ச்சியே என்னுடையது.
அது இப்போது எனக்கு நிறைவாகக் கிடைத்துள்ளது.
அவர் வளர வேண்டும், நானோ குறைய வேண்டும்'' 30
என்றார்.

விண்ணுலகிலிருந்து வருகிறவர்

31 *மேலிருந்து வருகிறவர் எல்லாருக்கும் மேலானவரா
யிருப்பார்; மண்ணிலிருந்து உண்டானவன் மண்ணுலகுக்
குரியவன், அவன் மண்ணுலகுக்குரியவற்றைப் பேசுவான்.
விண்ணுலகிலிருந்து வருகிறவர் எல்லாருக்கும் மேலான
32 வராயிருப்பார். அவர் தாம் கண்டதையும் கேட்டதையுமே
தம் சாட்சியத்தில் கூறுகிறார். என்றாலும், அவருடைய
சாட்சியத்தை ஏற்றுக்கொள்ளுகிறவன் எவனுமில்லை.
33 அவருடைய சாட்சியத்தை ஏற்றுக்கொள்ளுகிறவன்
அதன்மூலம் கடவுள் உண்மையானவர் என்பதை முத்
34 திரையிட்டு உறுதிப்படுத்துகிறான். கடவுளால் அனுப்பப்
பட்டவர் கடவுளின் வார்த்தைகளைச் சொல்லுகிறார்.
ஏனெனில், கடவுள் தம் ஆவியை அளவுபார்த்துக்
35 கொடுப்பதில்லை. விண்ணகத் தந்தையார் தம் மைந்த
ரிடம் அன்புகூர்கிறபடியால், அவருடைய கையில் எல்லா
36 வற்றையும் ஒப்படைத்திருக்கிறார். அந்த மைந்தரிடம்
நம்பிக்கை கொள்ளுகிறவன் இப்போதே என்றுமுள்ள
மெய்வாழ்வை உடையவனாயிருக்கிறான்; மைந்தருக்குக்
கீழ்ப்படியாதவனோ மெய்வாழ்வைக் காணமாட்டான்,
கடவுளின் சினந்தான் அவன்மேல் நிலைத்திருக்கும்.

இயேசுவும் சமாரியா நாட்டுப் பெண்ணும்

4 யோவானைவிட இயேசுவே மிகுதியான சீடரைச்
சேர்த்துக்கொண்டு அவர்களுக்குத் திருமுழுக்குக்
கொடுக்கிறார் எனப் பரிசேயருக்குச் செய்தி எட்டிற்று.
2 ஆனால் உண்மையில் இயேசு தாமே திருமுழுக்குக் கொடுக்க
வில்லை, அவருடைய சீடர்களே கொடுத்தார்கள்.
3 பரிசேயருக்குச் செய்தி எட்டியதை இயேசு அறிந்தபோது,
அவர் யூதேயாவை விட்டு மறுபடியும் கலிலேயாவுக்குப்
4 போனார். போகையில் அவர் சமாரியா நாடு வழியாகச்
5 செல்லவேண்டியதாயிருந்தது. அவர் சமாரியாவிலுள்ள
சீகார் என்னும் ஊரை அடைந்தார். அந்த ஊர்
யாக்கோபு தம்முடைய மகன் யோசேப்புக்குக் கொடுத்த
6 நிலத்துக்கருகில் இருக்கிறது. அங்கே யாக்கோபின்
கிணறும் இருக்கிறது. இயேசு பயணத்தினால் களைப்புற்று,
அந்தக் கிணற்றுக்கருகில் வந்து உட்கார்ந்தார். அப்
பொழுது நேரம் ஏறக்குறையப் பகல் பன்னிரண்டு மணி†
இருக்கும்.

---

* வ. 31–36 வரையிலுமுள்ள பாகத்தையும் யோவான் சொன்ன
தாகக் கொள்ள இடமுண்டு.

† மூலத்தில், யூதர் கணக்குப்படி, ஆறாம் மணி என்றிருக்கிறது.

ஒரு சமாரியப் பெண் தண்ணீர் மொள்ள அங்கே 7
வந்தாள். இயேசு அவளிடம், ''குடிக்கக் கொஞ்சம்
தண்ணீர் கொடு'' என்றார். அந்நேரத்தில் அவருடைய 8
சீடர்கள் உணவு வாங்கி வருவதற்காக ஊருக்குள்ளே
சென்றிருந்தார்கள். சமாரியப் பெண் இயேசுவைப் 9
பார்த்து, ''நீர் யூதர், நானோ சமாரியப் பெண்; நீர்
என்னிடம் குடிக்கத் தண்ணீர் கேட்பது எப்படி?'' என்றாள்.
ஏனெனில், சமாரியர் பயன்படுத்தும் கலன்களை யூதர்கள்
பயன்படுத்தமாட்டார்கள். இயேசு அவளைப் பார்த்து, 10
''கடவுளின் ஈவு இன்னதென்பதும் குடிக்கத் தண்ணீர்
வேண்டும் என்று கேட்கிறவர் இன்னாரென்பதும் உனக்குத்
தெரிந்திருந்தால், நீயே அவரிடம் கேட்டிருப்பாய்,
அவரும் உனக்கு மெய்வாழ்வுதரும் தண்ணீரைக் கொடுத்
திருப்பார்'' என்று சொன்னார். அப்பொழுது அவள், 11
''ஐயா, தண்ணீர் மொள்ள உம்மிடம் ஒன்றுமில்லை,
கிணறும் ஆழமானது. அப்படியிருக்க, உமக்கு எங்கிருந்து
மெய்வாழ்வுதரும் தண்ணீர் கிடைக்கும்? நம்முடைய 12
தந்தையாகிய யாக்கோபுவைவிட நீர் பெரியவரா? அவர்
இந்தக் கிணற்றை எங்களுக்கு வெட்டிக்கொடுத்தார்;
அவரும், அவருடைய பிள்ளைகளும், அவருடைய கால்
நடைகளும் இதிலேதான் தண்ணீர் குடிப்பது வழக்கம்''
என்றாள். அதற்கு இயேசு, ''இந்தத் தண்ணீரைக் 13
குடிக்கும் எவனுக்கும் மீண்டும் தாகமெடுக்கும். ஆனால், 14
நான் கொடுக்கும் தண்ணீரை எவன் குடிக்கிறானோ
அவனுக்கு ஒருபோதும் தாகமெடுக்காது. நான் அவனுக்
குக் கொடுக்கும் தண்ணீர், அவன் என்றுமுள்ள மெய்
வாழ்வைப் பெறும்படி அவனுக்குள்ளே பொங்கியெழும்
நீரூற்றாயிருக்கும்'' என்று சொன்னார். அந்தப் பெண் 15
அவரைப் பார்த்து ''ஐயா, எனக்குத் தாகமெடா
மலும், தண்ணீர் மொள்ள நான் இங்கே வராமலும்
இருக்கும்படி அந்தத் தண்ணீரை எனக்குத் தாரும்''
என்று கேட்டாள்.

அதற்கு அவர், ''நீ போய் உன் கணவனை இங்கே 16
அழைத்துக்கொண்டுவா'' என்றார். அந்தப் பெண், 17
''எனக்குக் கணவன் இல்லையே'' என்று சொல்ல, இயேசு
அவளிடம், '''எனக்குக் கணவன் இல்லை' என்று நீ
சொன்னது சரிதான். உனக்கு ஐந்து கணவர் இருந்தனர்; 18
இப்போது உன்னுடன் இருப்பவன் உன்னுடைய கணவன்
அல்ல; நீ சொன்னது உண்மையே'' என்றார். அப் 19
பொழுது அந்தப் பெண் அவரிடம், ''ஐயா, நீர்

இறைவாக்குரைக்கும் ஒருவர் என்பதைக் கண்டு
20 கொண்டேன். எங்கள் முன்னோர்கள் இந்த மலையில்
தொழுது வந்தார்கள்; நீங்களோ தொழவேண்டிய இடம்
எருசலேமிலேதான் இருக்கிறது என்கிறீர்கள்" என்றாள்.
21 அதற்கு இயேசு, "அம்மா, என்னை நம்பு, காலம் வரு
கிறது, அப்பொழுது நீங்கள் விண்ணகத் தந்தையாரைத்
தொழுவது இந்த மலையிலுமன்று, எருசலேமிலுமன்று.
22 நீங்கள் யாரைத் தொழுகிறீர்கள் என்று தெரியாமலே
தொழுது வருகிறீர்கள்; எங்களுக்கோ நாங்கள் யாரைத்
தொழுகிறோம் என்பது தெரியும். ஏனென்னில், மீட்பும்
23 பெறுதல் யூதரிடமிருந்துதான் தொடங்குகிறது. ஆயினும்,
காலம் வரும்; ஏன், இப்போதே வந்திருக்கிறது; உண்மை
யாய்த் தொழுகிறவர்கள் இனிமேல் விண்ணகத் தந்தை
யாரை ஆவியோடும் உண்மையோடும் தொழுவார்கள்.
இப்படிப்பட்டவர்களே தம்மைத் தொழவேண்டுமென்று
24 விண்ணகத் தந்தையார் விரும்புகிறார். கடவுள் ஆவியா
யிருக்கிறார்; அவரைத் தொழுகிறவர்கள் ஆவியோடும்
25 உண்மையோடும் தொழவேண்டும்" என்றார். அதற்கு
அந்தப் பெண், "கிறிஸ்து எனப்படும் மெசியா வருவார்
என்பது எனக்குத் தெரியும்; அவர் வரும்போது எல்லா
வற்றையும் நமக்கு அறிவிப்பார்" என்று சொல்ல,
26 இயேசு அவளிடம், "உன்னோடு பேசுகிற நானே அவர்"
என்றார்.

27 அந்நேரத்தில் அவருடைய சீடர்கள் திரும்பிவந்தார்கள்.
அவர் ஒரு பெண்ணோடு பேசிக்கொண்டிருந்ததை
அவர்கள் கண்டு திகைப்படைந்தார்கள்; ஆயினும்,
''என்ன விசாரிக்கிறீர்?" என்றாவது, "ஏன் அவளோடு
28 பேசுகிறீர்?'' என்றாவது யாரும் கேட்கவில்லை. அந்தப்
பெண் குடத்தை வைத்துவிட்டு, ஊருக்குள்ளே சென்று,
29 அங்கிருந்த மக்களிடம், "வாருங்கள், ஒருவர் நான்
செய்த ஒவ்வொரு காரியத்தையும் எனக்குச் சொல்லி
விட்டார்; அவரை வந்து பாருங்கள்; ஒருவேளை அவர்
30 மேசியாவாயிருக்கலாம்'' என்று சொன்னாள். அவர்களும்
ஊரைவிட்டுப் புறப்பட்டு அவரிடம் வந்தார்கள்.

31 இதற்கிடையில் சீடர்கள் அவரிடம், "ரபீ, சாப்பிட
32 வாரும்'' என்று கூப்பிட்டார்கள். அதற்கு அவர்,
''உண்பதற்கு உணவு என்னிடம் இருக்கிறது. அதை
33 நீங்கள் அறியீர்கள்'' என்றார். சீடர்கள் அதைக் கேட்டு
ஒருவரையொருவர் பார்த்து, "யாராவது இவருக்கு
உணவு கொண்டுவந்திருப்பார்களோ" என்று பேசிக்
34 கொண்டார்கள். இயேசு அவர்களிடம், "என்னை

அனுப்பினவருடைய திருவுளப்படி செய்து அவருடைய
வேலையை முடிப்பதே என் உணவு. 'இன்னும் நான்கே 35
மாதங்கள் இருக்கின்றன; பிறகு அறுவடை வந்துவிடும்'
என்று நீங்கள் சொல்லுகிறதுண்டல்லவா? ஆனால், நான்
சொல்லுகிறேன்: அதோ, வயல் பக்கமாக ஏறிட்டுப்
பாருங்கள்; பயிர் வெண்மையாகி ஏற்கெனவே அறு
வடைக்குப் பக்குவமாயிருக்கிறது. இப்போதே அறுவடை 36
செய்கிறவன் கூலியை வாங்கிக்கொண்டிருக்கிறான்; என்று
முள்ள மெய்வாழ்வுக்குள் பலனைச் சேகரித்துக்கொண்டு
மிருக்கிறான்; ஆகவே, விதை விதைக்கிறவனும் அறுவடை
செய்கிறவனும் ஒருமிக்க மகிழ்ச்சியடைகிறார்கள். நீங்கள் 37
வருந்தி உழைத்து விளைவிக்காததை அறுவடை செய்ய
உங்களை அனுப்பினேன்; மற்றவர்கள் உழைத்தார்கள்,
அவர்களுடைய உழைப்பின் பலன் உங்களுக்குக் கிடைத்து
விட்டது. இதன்மூலம் 'விதை விதைக்கிறவன் ஒருவன், 38
விளைவை அறுக்கிறவன் வேறொருவன்' என்கிற பழமொழி
யின் உண்மை விளங்குகிறது'' என்றார்.

''நான் செய்த ஒவ்வொரு காரியத்தையும் எனக்குச் 39
சொல்லிவிட்டார்'' என்று அந்தப்பெண் கூறின சாட்சியம்
காரணமாக அந்த ஊர்ச் சமாரியருள் பலர் அவரிடம்
நம்பிக்கை கொண்டனர். ஆகையால், அந்தச் சமாரி 40
யர்கள் அவரிடம் வந்தபோது அவரைத் தங்களுடன்
தங்கியிருக்கும்படி வேண்டிக்கொண்டார்கள்; அவரும்
அங்கே இரண்டு நாள் தங்கினார். அச்சமயம் அவர் 41
கூறிய வார்த்தைகள் காரணமாக இன்னும் பலர்
அவரிடம் நம்பிக்கை கொண்டனர். அவர்கள் அந்தப் 42
பெண்ணிடம், ''இப்போது நாங்கள் நம்புவது நீ
சொன்னதனால் அன்று; அவர் சொன்னதை நாங்களே
நேரில் கேட்டோம். அவர் உண்மையாகவே உலகத்தின்
மீட்பர் என்பதைத் தெரிந்துகொண்டோம்'' என்றார்கள்.

ஓர் அரசாங்க அதிகாரியின் மகனைக் குணமாக்குதல்

(மத். 8:5-13; லூக். 7:1-10)

அந்த இரண்டு நாளும் கழிந்தபின் இயேசு அவ்விடம் 43
விட்டுப் புறப்பட்டுக் கலிலேயாவுக்குப் போனார்.
ஏனென்றால் அவரே, ''இறைவாக்குரைப்பவருக்குத் தம் 44
சொந்த நாட்டில் மதிப்பு இராது'' என்று சொல்லியிருக்
கிறார். கலிலேயர்கள் எருசலேமுக்குப் பண்டிகைக்காகப் 45
போயிருந்தபோது, அங்கே அவர் செய்த யாவற்றையும்
பார்த்திருந்தார்கள். ஆகையால், அவர் கலிலேயாவுக்கு

வந்தபோது, அவர்கள் அவருக்கு நல்ல வரவேற்பு
அளித்தார்கள்.
46 பிறகு அவர் கலிலேயாவிலுள்ள கானா என்னும் ஊருக்கு
மறுபடியும் போனார். முன்பு அவர் தண்ணீரைத்
திராட்சை இரசமாக்கினது அங்கேதான். அரசாங்க
அதிகாரி ஒருவனுடைய மகன் கப்பர்நகூமில் நோயுற்றிருந்
47 தான். இயேசு யூதேயாவிலிருந்து கலிலேயாவுக்கு வந்திருக்
கிறார் என்பதை அந்த மனிதன் கேள்விப்பட்டு, அவரிடம்
போய் அவர் வந்து தன் மகனைக் குணமாக்க வேண்டு
மென்று வேண்டிக்கொண்டான். அவனுடைய மகன்
48 அப்போது இறக்குந்தறுவாயில் இருந்தான். இயேசு
அவனிடம், ''அரிய செயல்களையும் அற்புதங்களையும்
கண்டாலன்றி உங்களுக்கு நம்பிக்கை ஏற்படாது'' என்று
49 சொன்னார். அந்த அதிகாரி, ''ஐயா, என் பிள்ளை
சாவதற்குள் விரைவில் வாரும்'' என்று வேண்டினான்.
50 அதற்கு இயேசு, ''நீ போகலாம், உன் மகன் முழு
நலத்தோடிருக்கிறான்'' என்று சொன்னார். அவன் இயேசு
தனக்குச் சொன்ன இந்தச் சொல்லை நம்பி அங்கிருந்து
51 புறப்பட்டுப் போனான். அவன் போகையில் அவனுடைய
வேலைக்காரர்கள் அவனுக்கு எதிரே வந்து அவனுடைய
பையன் முழுநலத்தோடு இருப்பதாகச் சொன்னார்கள்.
52 அவன், ''எத்தனை மணிக்கு அவனுக்குக் குணம் ஏற்படத்
தொடங்கிற்று?'' என்று அவர்களிடம் விசாரித்தான்.
அவர்கள், ''நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு* அவனுக்குக்
53 காய்ச்சல் விட்டது'' என்றார்கள். அதே நேரத்திலேதான்
''உன் மகன் முழுநலத்தோடிருக்கிறான்'' என்று இயேசு
தன்னிடம் சொன்னார் என்பது அவன் நினைவிற்கு வந்தது.
இதனால் அவனும் அவனுடைய வீட்டார் அனைவரும்
54 அவரிடம் நம்பிக்கை கொண்டவர்களாயினர். இயேசு,
தெய்வ ஆற்றலுக்கு அடையாளமாகத் தாம் செய்த
செயல்களுள் இரண்டாவதான இந்தச் செயலை, யூதேயாவி
லிருந்து கலிலேயாவுக்கு வந்த பிறகு செய்தார்.

பெத்சாதா குளத்தினருகில் நோயாளி ஒருவன் குணமடைதல்

5 இதற்குப்பின் யூதருடைய பண்டிகை ஒன்று வரவே,
2 இயேசு எருசலேமுக்குப் போனார். எருசலேமில்
ஆட்டுவாயிலுக்குப் பக்கத்தில் ஐந்து மண்டபங்களுள்ள
ஒரு குளம் இருக்கிறது; அது எபிரேய மொழியில்

* மூலத்தில், யூதர் கணக்குப்படி, ஏழாம் மணி என்றிருக்கிறது.

பெத்சாதா எனப்படும். அந்த மண்டபங்களில் குருடர் 3
முடவர் சூம்பின உறுப்புடையோர் ஆகிய பிணியாளிகள்
ஏராளமாய்ப் படுத்திருப்பார்கள். [அவர்கள் குளத்து
நீர் கலங்குவதற்காகக் காத்திருப்பார்கள். ஏனெனில், 4
தெய்வதூதன் ஒருவன் சிலவேளைகளில் அந்தக் குளத்தில்
இறங்கி, தண்ணீரைக் கலக்குவான்; தண்ணீர் கலங்கின
பின் யார் அதனுள் முதலில் இறங்குவானோ அவன்
எப்படிப்பட்ட நோயாளியாயிருந்தாலும் குணமடை
வான்.] முப்பத்தெட்டு ஆண்டுகள் நோயுற்றிருந்த 5
ஒருவனும் அங்கே படுத்துக்கிடந்தான். இயேசு அவன் 6
படுத்திருக்கிறதைக் கண்டு, அவன் அந்நிலையில் நெடுங்
காலமாய் இருந்து வந்ததை அறிந்து அவனிடம்,
''உனக்குக் குணமடைய விருப்பந்தானோ?'' என்று
கேட்டார். நோயாளி அவரைப் பார்த்து, ''ஐயா, 7
தண்ணீர் கலக்கப்படும்போது குளத்தில் என்னை இறக்கி
விடுகிறதற்கு ஆள் இல்லை. நான் போவதற்குள் வேறொரு
வன் எனக்குமுன் இறங்கிவிடுகிறான்'' என்றான். இயேசு 8
அவனிடம், ''எழுந்து உன் படுக்கையைத் தூக்கிக்
கொண்டு நடந்துபோ'' என்று சொன்னார். உடனே 9
அவன் குணமடைந்து, தன் படுக்கையைத் தூக்கிக்
கொண்டு நடந்துபோனான்.

அன்று ஓய்வுநாள். | ஆகையால், யூதர்கள் குணமாக்கப் 10
பட்டவனைப் பார்த்து, ''இன்று ஓய்வுநாள்; நீ படுக்கை
யைத் தூக்கிக்கொண்டு நடப்பது சட்ட விரோதம்''
என்றார்கள். அதற்கு அவன், ''என்னைக் குணமாக்கினவரே 11
என்னிடம், 'உன் படுக்கையைத் தூக்கிக்கொண்டு
நடந்துபோ' என்று சொன்னார்'' என்றான். அப்பொழுது 12
அவர்கள், ''படுக்கையைத் தூக்கிக்கொண்டு நடந்துபோ
என்று உனக்குச் சொன்ன அந்த மனிதன் யார்?'' என்று
அவனைக் கேட்டார்கள். ஆனால், குணமடைந்தவனுக்கோ 13
அவர் யாரென்று சொல்லத் தெரியவில்லை. ஏனென்றால்,
அவ்விடத்தில் மக்கள் கூட்டமாயிருந்தார்கள், இயேசுவும்
அவ்விடத்திலிருந்து ஏற்கெனவே போய்விட்டார். சிறிது 14
நேரத்திற்குப்பின் இயேசு அவனைத் திருக்கோவிலில் கண்டு,
''இதோ பார், நீ குணமடைந்திருக்கிறாய்; முன்பு
இருந்ததைவிடக் கேடானதெதுவும் உனக்கு நேரிடா
திருக்க இனிப் பாவம் ஒன்றும் செய்யாதே'' என்றார்.
அவன் அந்த யூதரிடம் போய், தன்னைக் குணமாக்கினவர் 15
இயேசு என்பதை அறிவித்தான். இயேசு ஓய்வுநாளில் 16

---

* இப்பெயர் சில பிரதிகளில் பெதஸ்தா என்றும், வேறு சில பிரதிகளில் பெத்சாய்தா என்றும் காணப்படுகிறது.

இதைப்போன்றவற்றைச் செய்துவந்தபடியால், யூதர்கள்
அவருக்குத் தொல்லை கொடுக்கத் தொடங்கினார்கள்.
17 இயேசு அதை அறிந்து அவர்களிடம், ''என் தந்தையார்
ஓய்வெடாமல் செயலாற்றி வருகிறார்; அவ்வாறே நானும்
18 செயலாற்றுகிறேன்'' என்றார். இவ்வாறு அவர் ஓய்வுநாள்
விதியை மீறினதுமல்லாமல், கடவுளைத் தம்முடைய
சொந்தத் தந்தையென்றும் சொல்லித் தம்மைக்
கடவுளுக்குச் சமமாக்கினதால் யூதர்கள் அவரைக்
கொன்றுவிடப் பெருமுயற்சி செய்தார்கள்.

திருமைந்தருடைய அதிகாரம்

19 அதை அறிந்த இயேசு அவர்களிடம், ''மிகவும் உறுதி
யாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: திருமைந்தர்
தாமாகவே எதையும் செய்ய இயலாது; தந்தையார்
எதைச் செய்கிறாரென்று தாம் காண்கிறாரோ அதை
மட்டுந்தான் அவரால் செய்ய இயலும்; தந்தையார்
எவற்றைச் செய்கிறாரோ அவற்றை மைந்தரும் அப்படியே
20 செய்கிறார். தந்தையார் மைந்தரை நேசித்து, தாம்
செய்கிறவற்றையெல்லாம் அவருக்குக் காட்டுகிறார்;
நீங்கள் வியப்படையும் வகையில், இன்னும் மேலான
21 செயல்களையும் அவருக்குக் காட்டுவார். தந்தையார்
இறந்தோரை எழுப்பி உயிர்ப்பிக்கிறதுபோல, மைந்தரும்
தாம் திருவுளங்கொண்டவர்களை உயிர்ப்பிக்கிறார்.
22 தந்தையார் எவனுக்கும் தீர்ப்பளிப்பதில்லை; தந்தை
யாரைக் கனப்படுத்துவதுபோல, எல்லாரும் மைந்தரை
யும் கனப்படுத்த வேண்டுமென்று, தீர்ப்பளிக்கும்
அதிகாரம் முழுவதையும் அவர் மைந்தரிடம் ஒப்படைத்
23 திருக்கிறார். மைந்தரைக் கனப்படுத்தாதவன் அவரை
அனுப்பின தந்தையாரையும் கனப்படுத்தாதவனாவான்.
24 மிகவும் உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: என்
வார்த்தையைக் கேட்டு என்னை அனுப்பினவரை நம்புகிற
வன் இப்போதே என்றுமுள்ள மெய்வாழ்வு உடையவனு
யிருக்கிறான்; அவன் குற்றத் தீர்ப்புக்குள்ளாகாமல்,
மரணத்திலிருந்து மெய்வாழ்வுக்குள் வந்திருக்கிறான்.
25 இன்னும் ஒன்றை மிகவும் உறுதியாக உங்களுக்குச்
சொல்லுகிறேன்: காலம் வரும். ஏன், இப்போதே
வந்திருக்கிறது. உயிரற்றவர்கள் இதுமுதல் கடவுளின்
மைந்தருடைய குரலைக் கேட்பார்கள். அதற்குச் செவி
26 சாய்ப்பவர்களே மெய்வாழ்வைப் பெறுவார்கள். தாம்
மெய்வாழ்வுக்குப் பிறப்பிடமாயிருக்கிறதுபோல, மைந்
தரும் மெய்வாழ்வுக்குப் பிறப்பிடமாயிருக்கும்படி

தந்தையார் அருள்கூர்ந்திருக்கிறார். மேலும், 27
அவர் மனுமைந்தராயிருக்கிறபடியால், தீர்ப்பளிக்கும்
அதிகாரத்தையும் அவருக்குக் கொடுத்திருக்கிறார்.
இதைக் குறித்து நீங்கள் வியப்படைய வேண்டாம். 28
ஏனெனில், பிணக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய
குரலைக் கேட்டு வெளியே வரும் காலம் வருகிறது.
அப்பொழுது, நல்லவை செய்தவர்கள் மெய்வாழ்வை 29
அடைவதற்கென்றும், தீயவை செய்தவர்கள் தண்டனைத்
தீர்ப்புப் பெறுவதற்கென்றும் உயிர்த்தெழுந்து வெளியே
வருவார்கள்.

இயேசுவைப்பற்றிய சாட்சியங்கள்

''எதையும் நானாகவே செய்ய இயலாது. தந்தையாரிட 30
மிருந்து கேட்டறிகிறதன்படியே நான் தீர்ப்பளிக்கிறேன்.
என் விருப்பத்தை அன்று, என்னை அனுப்பின தந்தையா
ரின் விருப்பத்தை நிறைவேற்றுவதே என் நோக்கமா
யிருப்பதால், என் தீர்ப்பு நியாயமானதாகவே இருக்கும்.
என்னைக் குறித்து நானே சாட்சி கூறினால் என் சாட்சியம் 31
செல்லாது. என்னைக் குறித்துச் சாட்சி கூறுவதற்கு 32
வேறொருவர் இருக்கிறார்; அவர் என்னைக் குறித்துக்
கூறுகிற சாட்சியம் உண்மை என்பது எனக்குத் தெரியும்.
நீங்கள் யோவானிடம் ஆள் அனுப்பிக் கேட்டுப் பார்த் 33
தீர்கள். அவரும் சத்தியத்தைக் குறித்துச் சாட்சி
கூறினார். மனித சாட்சியம் எனக்குத் தேவையில்லை, 34
நீங்கள் மீட்புப் பெறவேண்டும் என்பதற்காக இதைச்
சொல்லுகிறேன். யோவான் எரிந்து சுடர்விடும் விளக்கா 35
யிருந்தார். நீங்களும் விருப்பத்துடன் சிறிது காலம் அவ
ருடைய ஒளியில் அகமகிழ்ந்தீர்கள். ஆனால், எனக்கோ 36
அவருடைய சாட்சியத்தைவிட மேலான சாட்சியம்
ஒன்று உண்டு. நான் செய்து முடிக்கும்படி தந்தையார்
எனக்குக் கொடுத்தருளிய செயல்களே, அதாவது நான்
செய்துவரும் செயல்களே, தந்தையார் என்னை அனுப்
பினாரென்று என்னைக் குறித்துச் சாட்சியளிக்கின்றன.
அல்லாமலும், என்னை அனுப்பின தந்தையாருங்கூட 37
என்னைக் குறித்துச் சாட்சியளித்திருக்கிறார். நீங்களோ
ஒருபோதும் அவர் குரலைக் கேட்டதில்லை, அவர் உருவத்
தைக் கண்டதில்லை; அவர் வார்த்தை உங்களிடம் நிலைத் 38
திருப்பதுமில்லை; ஏனெனில், அவர் அனுப்பினவரை
நீங்கள் நம்பவில்லை. நீங்கள் வேத வாக்கியங்களை 39
ஆராய்ந்து பார்க்கிறீர்கள்; அவற்றின்மூலம் என்றுமுள்ள
மெய்வாழ்வு கிடைப்பதாக நினைக்கிறீர்கள். அந்த வாக்கி

40 யங்களே என்னைக் குறித்துச் சாட்சி கூறுகின்றன. என்ற
லும், மெய்வாழ்வைப் பெறும்படி என்னிடம் வர உங்க
ளுக்கு மனமில்லை.

41 "நான் மனிதருடைய புகழை நாடுவதில்லை:
42 ஆனால், உங்களை நான் நன்கறிவேன், உங்கள் உள்ளத்தில்
43 கடவுளின் அன்பு இல்லை. நான் என் தந்தையாரின் பெய
ரால் வந்திருக்கிறேன்; நீங்களோ என்னை ஏற்றுக்கொள்ள
வில்லை; வேறொருவன் தன் சொந்தப் பெயரால் வருவா
44 னானால் அவனை ஏற்றுக்கொள்வீர்கள். ஒரே ஒன்றான
கடவுளிடமிருந்து வரும் மாட்சிமையை நாடாமல்
ஒருவரிடமிருந்து ஒருவருக்கு வரும் புகழை ஏற்றுக்
45 கொள்ளும் நீங்கள் எப்படி நம்ப இயலும்? தந்தையாரின்
முன்னிலையில் நான் உங்கள்மீது குற்றம் சுமத்தப்போகி
றேன் என்கிற எண்ணத்தை விட்டுவிடுங்கள்; உங்கள்மீது
குற்றம் சுமத்துகிற ஒருவர் இருக்கிறார். அவர் நீங்கள்
46 நம்பியிருக்கிற மோசேயே. மோசேயை நீங்கள் நம்பி
யிருந்தால் என்னையும் நம்பியிருப்பீர்கள். ஏனெனில்,
47 அவர் என்னைக் குறித்து எழுதியிருக்கிறார். அவர்
எழுதினதை நீங்கள் நம்பவில்லையானால், நான் சொல்
வதை நீங்கள் எப்படி நம்புவீர்கள்?" என்று கேட்டார்.

ஐயாயிரம் பேருக்கு உணவளித்தல்

(மத். 14:13–21; மாற். 6:30–44; லூக். 9:10–17)

6 இதன்பின் இயேசு திபேரியாக் கடல் என்கிற கலிலே
2 யாக் கடலின் மறுகரைக்குப் போனார். திரளான
மக்கள் அவருக்குப் பின்னே சென்றார்கள். ஏனென்றால்,
நோயாளிகளிடம் அவர் செய்து வந்த அரிய செயல்களை
3 அவர்கள் கண்டிருந்தார்கள். இயேசு மலையின்மேல் ஏறிச்
4 சென்று தம்முடைய சீடரோடு உட்கார்ந்தார். அது
பஸ்கா என்னும் யூதருடைய பண்டிகை நெருங்கிவரும்
5 காலம். இயேசு நிமிர்ந்து பார்த்து திரளான மக்கள்
தம்மை நோக்கி வருவதைக் கண்டு, பிலிப்புவினிடம்,
"இந்த மக்கள் உண்பதற்கு நாம் எங்கே அப்பம் வாங்க
6 லாம்?" என்று கேட்டார். தாம் செய்யப்போவதை
அவர் அறிந்திருந்தும் பிலிப்புவைப் பரிசோதிப்பதற்காக
7 இப்படிக் கேட்டார். அதற்குப் பிலிப்பு, "ஆளுக்குக்
கொஞ்சம் கொஞ்சம் கொடுத்தாலுங்கூட இருநூறு
திநாரியத்து அப்பமும் போதாதே" என்று சொன்னார்.

அப்பொழுது அவருடைய சீடருள் ஒருவரும், சீமோன் 8
பேதுருவின் உடன்பிறந்தாருமாகிய அந்திரேயா அவ
ரிடம், | ''இங்கே ஒரு பையன் இருக்கிறுன். அவனிடம் 9
ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும்
இருக்கின்றன. ஆனுல் இத்தனே பேருக்கு அவை எப்படிப்
போதும்?'' என்ருர். இயேசு, ''மக்களேப் பந்தியமரச் 10
செய்யுங்கள்'' என்ருர். அங்கே நல்ல புல்தரை இருந்
தது. பந்தியமர்ந்த ஆண் மக்களின் எண்ணிக்கை ஏறக்
குறைய ஐயாயிரம். இயேசு அந்த அப்பங்களே எடுத்து, 11
கடவுளுக்கு நன்றிசெலுத்தி, பந்தியமர்ந்தவர்களுக்குப்
பகிர்ந்தளித்தார்; மீன்களேயும் அவ்வாறே செய்தார்;
அவர்களுக்கு வேண்டிய மட்டும் கிடைத்தது. அவர்கள் 12
வயிருர உண்டபின் அவர் தம்முடைய சீடரிடம்,
''மீந்த துணிக்கைகளுள் ஒன்றும் வீணுகாதபடி அவற்
றைப் பொறுக்கிச் சேருங்கள்'' என்ருர். அவர்களும் 13
அவ்வாறே சேர்த்து, மக்கள் அந்த ஐந்து வாற்கோதுமை
அப்பங்களிலும் மீதமாக விட்ட துணிக்கைகளேப் பன்னி
ரண்டு கூடைகளில் நிரப்பினுர்கள். இயேசு செய்த இந்த 14
அரிய செயலே அந்த மக்கள் கண்டு, ''உலகத்தில் தோன்ற
வேண்டிய இறைவாக்குரைப்பவர் உண்மையில் இவரே''
என்ருர்கள். அவர்கள் வந்து தம்மைப் பிடித்து அரச 15
ராக்கப்போகிருர்கள் என்பதை இயேசு அறிந்து, விலகிக்
கொண்டு தனியராய் மறுபடியும் மலேக்குச் சென்ருர்.

இயேசு கடலின்மீது நடத்தல்

(மத். 14:22-33; மாற். 6:45–52)

மாலே நேரம் வந்ததும், அவருடைய சீடர்கள் கடற் 16
கரைக்குப்போய், ஒரு படகில் ஏறிக் கடலேக் கடந்து 17
கப்பர்நகூமுக்குச் செல்லப் புறப்பட்டார்கள். அதற்குள்
இருட்டிவிட்டது. இயேசுவும் அதுவரையில் அவர்களிடம்
வந்து சேரவில்லே. ஒரு பெருங்காற்று அப்போது வீசிற்று, 18
கடலும் கொந்தளிக்கத் தொடங்கிற்று. அவர்கள் ஏறத் 19
தாழ மூன்று அல்லது நான்கு மைல் தொலேவு படகைச்
செலுத்தியபின், இயேசு கடலின்மீது நடந்துகொண்டே
படகுக்குப் பக்கத்தில் வருகிறதைப் பார்த்தார்கள்;
பார்த்ததும், அவர்களுக்கு மிகுந்த அச்சம் உண்டாயிற்று.
இயேசு அவர்களிடம், ''நான்தான் அஞ்சாதீர்கள்'' 20
என்று சொன்னுர். அப்பொழுது அவர்கள் அவரைப் 21
படகில் ஏற்றிக்கொள்ள வேண்டுமென்று எண்ணினுர்கள்.
ஆனுல், படகு உடனே அவர்கள் சேர வேண்டிய இடம்
போய்ச் சேர்ந்தது.

மெய்வாழ்வு தரும் அப்பம் இயேசுவே

22 மறுநாளும் மக்கள் அடுத்த கரையிலேயே நின்றுகொண்
டிருந்தார்கள். அவர்கள் அங்கே ஒரே ஒரு படகைத் தவிர
வேறு படகுகள் இருந்ததில்லை என்பதையும், அந்தப்
படகில் சீடர்கள் மட்டும் போனார்களேயொழிய, இயேசு
அவர்களோடு போகவில்லை என்பதையும் கண்கூடாகப்
23 பார்த்திருந்தார்கள். அப்பொழுது திபேரியாவிலிருந்து
வேறு படகுகள் வந்து, ஆண்டவர் கடவுளுக்கு நன்றி
செலுத்திக் கொடுத்த உணவை மக்கள் சாப்பிட்ட இடத்
24 திற்குப் பக்கமாகக் கரையோரத்தில் நின்றன. அங்கே
இயேசுவும் இல்லை, அவருடைய சீடரும் இல்லை என்
பதை மக்கள் தெரிந்துகொண்டதால், தாங்களும் அந்தப்
படகுகளில் ஏறிக்கொண்டு, இயேசுவைத் தேடிக் கப்பர்
25 நகூமுக்கு வந்தார்கள். கடலின் மறுகரையில் அவர்கள்
அவரைக் கண்டு, ''ரபீ, நீர் எப்பொழுது இங்கே
26 வந்தீர்?'' என்று கேட்டார்கள். அதற்கு இயேசு,
''நீங்கள் என்னைத் தேடுவது, தெய்வ ஆற்றலுக்கு அடை
யாளமான செயல்களைக் கண்டு புரிந்துகொண்டதனா
லன்று, அப்பங்களை வயிறார உண்டதனாலேதான் என்று
27 மிகவும் திட்டமாகச் சொல்லுவேன். அழிந்துபோகும்
உணவுக்காக உழைக்க வேண்டாம்; என்றுமுள்ள மெய்
வாழ்வுக்கென்றிருக்கிற அழிந்துபோகாத உணவுக்காக
உழையுங்கள்; அதை மனுமைந்தர் உங்களுக்குக் கொடுப்
பார். அவர்மீதே தந்தையாகிய கடவுள் தமது அதிகார
28 முத்திரையைப் பொறித்திருக்கிறார்'' என்றார். அப்
பொழுது அவர்கள் அவரிடம், ''கடவுளுக்கடுத்த செயல்
களை நாங்கள் செய்ய வேண்டுமென்றால், அதற்கு என்ன
29 செய்ய வேண்டும்?'' என்று கேட்டார்கள். இயேசு,
''கடவுள் அனுப்பினவரிடம் நம்பிக்கை கொள்வதே
30 அவருக்கடுத்த செயல்'' என்று சொன்னார். அவர்கள்,
''அப்படியானால், நாங்கள் கண்ணால் கண்டு உம்மை நம்ப
வேண்டுமென்றால் நீர் அதற்காகக் காட்டும் அற்புத அத்
31 தாட்சி என்ன? நீர் செய்யும் செயல்தான் என்ன? 'அவர்கள்
உண்பதற்கு அவர் வானத்திலிருந்து அப்பம் அருளினார்'
என்று வேதத்தில் எழுதியுள்ளபடி, நம்முடைய முன்
னோர்கள் வனாந்தரத்தில் மன்னாவை உண்டார்களே''
32 என்றார்கள். அதற்கு இயேசு, ''மிகவும் உறுதியாக
உங்களுக்குச் சொல்லுகிறேன்: மோசே உங்களுக்குக்
கொடுத்தது வானத்திலிருந்து வந்த அப்பமன்று. வானத்தி
லிருந்து உங்களுக்கு மெய்யான அப்பத்தை அருளுகிறவர்

என் தந்தையாரே. விண்ணுலகிலினின்று இறங்கி வந்து, 33
உலகத்துக்கு மெய்வாழ்வு அருளுகிற அப்பமே கடவுள்
அருளும் அப்பம்'' என்று சொன்னார்.

அப்பொழுது அவர்கள் அவரிடம், ''ஆண்டவரே, இந்த 34
அப்பத்தையே எங்களுக்கு எப்போதும் தரவேண்டும்''
என்று கேட்டார்கள். இயேசு அவர்களிடம், ''நானே 35
மெய்வாழ்வு தரும் அப்பம், என்னை வந்தடைகிறவனுக்குப்
பசியே இராது, என்னிடம் நம்பிக்கை கொள்கிற
வனுக்கு ஒருபோதும் தாகம் இராது. ஆனால், நான் 36
உங்களுக்குச் சொன்னபடி, நீங்கள் என்னைக் கண்
டிருந்தும் என்னிடம் நம்பிக்கை கொள்ளாமல் இருக்கி
றீர்கள். தந்தையார் எனக்குக் கொடுக்கும் 37
யாவரும் என்னிடம் வந்து சேர்வார்கள். என்னை
வந்தடைந்தவனை நான் ஒருபோதும் தள்ளிவிடமாட்
டேன். ஏனென்றால், என் சொந்த விருப்பத்தை நிறை 38
வேற்றுவதற்கன்று, என்னை அனுப்பினவரின் விருப்பத்தை
நிறைவேற்றுவதற்கே நான் விண்ணுலகிலிருந்து வந்
தேன். என்னை அனுப்பினவருடைய விருப்பம் எது 39
வெனில், அவர் எனக்குக் கொடுத்தவர்களுள் ஒருவனை
யும் நான் இழந்துவிடாமல், கடைசி நாளில் அவர்கள்
எல்லாரையும் உயிரோடெழுப்ப வேண்டும் என்பதே.
மைந்தரைக் கண்டு அவரிடம் நம்பிக்கை கொள்ளுகிறவன் 40
எவனுக்கும் என்றுமுள்ள மெய்வாழ்வு கிடைக்கவேண்டும்
என்பதே என் தந்தையாரின் விருப்பம். நான் அவனைக்
கடைசி நாளில் உயிரோடெழுப்புவேன்'' என்று
சொன்னார்.

''விண்ணுலகினின்று இறங்கி வந்த அப்பம் நானே'' 41
என்று அவர் சொன்னதால் யூதர்கள் அவரைப்பற்றி
முணுமுணுத்துப் பேசிக்கொண்டிருந்தார்கள். ''இவன் 42
யோசேப்பின் மகன் இயேசு அல்லவா? இவனுடைய
தகப்பனையும் தாயையும் நமக்குத் தெரியுமே. அப்படி
யிருக்க இவன், 'நான் விண்ணுலகினின்று இறங்கி
வந்திருக்கிறேன்' என்று சொல்வதெப்படி?'' என்று
பேசிக்கொண்டார்கள். அதைக் கேட்ட இயேசு, ''உங்க 43
ளிடையே முணுமுணுப்பு வேண்டாம். என்னை அனுப் 44
பின தந்தையார் யாரை ஈர்த்துக்கொள்வாரோ அவனைத்
தவிர வேறு யாராலும் என்னை வந்தடைய இயலாது.
என்னை வந்தடைந்தவனை நான் கடைசி நாளில் உயிரோ
டெழுப்புவேன். 'எல்லா மக்களும் கடவுளால் போதிக்கப் 45

---

* 'விண்ணுலகினின்று இறங்கி வந்து, உலகத்துக்கு மெய்வாழ்வு அளிக்கிறவரே கடவுள் அருளும் அப்பம்' என்றும் மொழிபெயர்க்கலாம்.

டப்பட்டவர்களாவார்கள்' என்று இறைவாக்கு நூற்பகுதி
யில் எழுதியிருக்கிறது. தந்தையாரிடம் கேட்டுக் கற்றுக்
46 கொள்ளும் எவனும் என்னை வந்தடைவான். இதனுல்
கடவுளிடமிருந்து வந்தவர் மட்டுமன்றி, வேறு சிலரும்
தந்தையாரைக் கண்டிருக்கின்றனர் என்று கொள்ள
லாகாது. தந்தையாரைக் கண்டிருக்கிறவர் இவர்
47 ஒருவரே. மிகவும் உறுதியாக உங்களுக்குச் சொல்லு
கிறேன்: இவரிடம் நம்பிக்கை கொள்கிறவன் என்று
48 முள்ள மெய்வாழ்வை உடையவனுயிருக்கிருன். மெய்
49 வாழ்வைத் தரும் அப்பம் நானே. உங்கள் முன்னேர்கள்
வனந்தரத்தில் மன்னுவை உண்டுவந்தபோதிலும் இறந்து
50 போனுர்கள். ஆனுல் இந்த அப்பத்தை உண்ணும்
எவரும் இறப்பதில்லை. இதற்காகவே நான் விண்ணுலகி
51 லிருந்து வந்திருக்கிறேன். நானே விண்ணுலகினின்று
இறங்கி வந்த மெய்வாழ்வாகிய அப்பம்; இந்த அப்
பத்தை ஒருவன் உண்டால் அவன் என்றைக்கும் மெய்
வாழ்வை உடையவனுயிருப்பான். நான் கொடுக்கப்
போகும் அப்பம் என் மாம்சமே; நான் இதை உலகம்
மெய்வாழ்வைப் பெறுவதற்காகக் கொடுக்கிறேன்''
என்று சொன்னுர்.

52 இதைக்கேட்ட யூதரிடையே ஒரு தருக்கம் உண்டாயிற்று;
''நாம் உண்பதற்கு இவன் தன் மாம்சத்தை எப்படிக்
கொடுக்க இயலும்?'' என்று அவர்கள் பேசிக்கொண்டார்
53 கள். இயேசு அவர்களிடம், ''மிகவும் உறுதியாக உங்க
ளுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள் மனுமைந்தரது மாம்
சத்தை உண்டு அவரது இரத்தத்தைக் குடித்தாலன்றி,
உங்களுக்குள் மெய்வாழ்வு உடையவர்களாயிருக்கமாட்
54 டீர்கள். என் மாம்சத்தைச் சாப்பிட்டு என் இரத்தத்தைக்
குடிப்பவன் என்றுமுள்ள மெய்வாழ்வை உடையவனு
யிருப்பான். நான் அவனைக் கடைசி நாளில் உயிரோ
55 டெழுப்புவேன். என் மாம்சமே மெய்யான உணவு, என்
56 இரத்தமே மெய்யான பானம். என் மாம்சத்தைச் சாப்
பிட்டு, என் இரத்தத்தைக் குடிக்கிறவன் எனக்குள் தங்கி
யிருக்கிருன், நானும் அவனுக்குள் தங்கியிருக்கிறேன்.
57 மெய்வாழ்வுக்குப் பிறப்பிடமாகிய தந்தையார் என்னை
அனுப்பினுர், நான் தந்தையாரால் மெய்வாழ்வு உள்ள
வனுயிருக்கிறேன்; அதுபோல என்னை உண்பவனும்
என்னுல் மெய்வாழ்வைப் பெற்றவனுயிருப்பான். விண்
58 ணுலகினின்று வந்த அப்பம் இதுவே; இது உங்கள் முன்
னேர் சாப்பிட்டதைப் போன்றதன்று; அவர்கள் இறந்து
போனுர்கள். இந்த அப்பத்தைச் சாப்பிடுகிறவன்

என்றைக்கும் மெய்வாழ்வை உடையவனாயிருப்பான்''
என்று சொன்னார். அவர் கப்பர்நகூமிலுள்ள தொழுகைக் 59
கூடத்தில் போதிக்கையில் இந்தக் காரியங்களைச்
சொன்னார்.

என்றுமுள்ள மெய்வாழ்வளிக்கும் வார்த்தைகள்

அவருடைய சீடருள் பலர் இதைக் கேட்டு, ''இது கடின 60
மான போதனை; யாரால் இதை ஏற்றுக்கொள்ள
இயலும்?'' என்றனர். தம்முடைய சீடர்கள் அதைக் 61
குறித்து முணுமுணுப்பதை இயேசு தாமாகவே அறிந்து
கொண்டு அவர்களிடம், ''இதைக் கேட்க உங்களுக்கு
அருவருப்பாய் இருக்கிறதா? அப்படியானால், மனுமைந்தர் 62
தாம் முன்பு இருந்த இடத்திற்கு ஏறிச்செல்வதை நீங்கள்
காண நேரிட்டால் உங்களுக்கு எப்படியிருக்கும்? மெய் 63
வாழ்வை அளிப்பது ஆவியே, மாம்சம் ஒன்றுக்கும் உத
வாதது; நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தைகளே
ஆவி, அவையே மெய்வாழ்வு. அப்படியிருந்தும் என் 64
னிடம் நம்பிக்கை கொள்ளாத சிலர் உங்களிடையே
இருக்கின்றனர்'' என்று சொன்னார். நம்பிக்கை கொள்
ளாதவர் இன்னார் என்பதும், தம்மைக் காட்டிக்கொடுக்கப்
போகிறவன் இன்னான் என்பதும் இயேசுவுக்குத் தொடக்
கத்திலிருந்தே தெரியும். ஆகையால் அவர், ''இதனாலே 65
தான், 'தந்தையார் எவனுக்கு அருள் தந்திருக்கிறாரோ
அவனைத் தவிர வேறெவனும் என்னை வந்தடைய
இயலாது' என்று நான் உங்களுக்கு முன்பு சொன்னேன்''
என்றார்.

இதைக் கேட்டதும், அவருடைய சீடருள் பலர் அவரை 66
விட்டுப் பின்வாங்கத் தொடங்கினர். அதன்பின் அவர்
கள், அவரோடு சேர்ந்து நடந்துபோகவில்லை. அதைக் 67
கண்ட இயேசு பன்னிருவரையும் பார்த்து, ''நீங்களும்
போய்விடமாட்டீர்களோ?'' என்று கேட்டார். அதற்குச் 68
சீமோன் பேதுரு அவரிடம், ''ஆண்டவரே, நாங்கள்
யாரிடம் போவோம்? உம்மிடந்தான் என்றுமுள்ள மெய்
வாழ்வளிக்கும் வார்த்தைகள் உண்டு. நீரே கடவுளின் 69
பரிசுத்தர்* என்று நாங்கள் இப்போது நம்புகிறோம், இதை
அறிந்துகொண்டோம்'' என்று சொன்னார். அதற்கு இயேசு, 70
''பன்னிருவராகிய உங்களை நானே தேர்ந்துகொண்டே
னல்லவா? ஆயினும், உங்களுள் ஒருவன் பிசாசாயிருக்
கிறான்'' என்று சொன்னார். அவர் இதை இஸ்காரியோத் 71

* 'நீர் மெய்வாழ்வுக்குப் பிறப்பிடமாகிய கடவுளின் மைந்தராகிய மேசியா' என்பது சில பிரதிகளின் பாடம்

தார் சீமோனுடைய மகனான யூதாசைக் குறித்துச் சொன்
னார். அவன் அவரைக் காட்டிக்கொடுக்கப்போகிறவனா
யிருந்தான்; அவனும் பன்னிருவருள் ஒருவனே.

இயேசுவின் சகோதரருக்கிருந்த நம்பிக்கையின்மை

7 அதன்பின் இயேசு கலிலேயா நாட்டில் பல இடங்
களுக்குச் சென்றார்; யூதேயா நாட்டிற்குச் செல்ல
அவர் விரும்பவில்லை; ஏனெனில், அங்கிருந்த யூதர்கள்
அவரைக் கொன்றுவிட வழி தேடிக்கொண்டிருந்தார்கள்.
2 ஆனால் யூதரின் கூடாரப் பண்டிகை நெருங்கியிருந்ததால்,
3 அவருடைய சகோதரர்கள் அவரிடம், "நீர் இவ்
விடத்தை விட்டு யூதேயாவுக்குப் போக வேண்டும்; உம்
முடைய சீடர் நீர் செய்யும் செயல்களைப் பார்க்கட்டும்.
4 நாடறிந்தவனாய் இருக்க விரும்பும் எவனும் மறைவில்
எதையும் செய்யமாட்டான்; நீர் இந்தக் காரியங்களைச்
செய்கிறவரென்றால், உலகத்துக்கே உம்மை இன்னா
ரென்று வெளிப்படுத்திவிடலாமே" என்று சொன்னார்
5 கள். அவருடைய சகோதரரும், அவரிடம் நம்பிக்கை
6 கொண்டிராததால் இப்படிச் சொன்னார்கள். இயேசு
அவர்களிடம், "எனக்கேற்ற நேரம் இன்னும் வரவில்லை.
7 உங்களுக்கோ எந்தக் காலமும் ஏற்றதுதான். உலகத்தால்
உங்களைப் பகைக்க இயலாது; என்னையோ அது பகைக்
கிறது. ஏனெனில், அதன் செயல்கள் பொல்லாதவை
என்பதை நான் அதற்கு எடுத்துக்காட்டி வருகிறேன்.
8 நீங்கள் பண்டிகைக்குப் போங்கள்; நான் இந்தப் பண்டி
கைக்கென்று செல்லப்போவதில்லை. ஏனெனில், எனக்
கேற்ற நேரம் இன்னும் வரவில்லை" என்று சொன்னார்.
9 அவர்களுக்கு இப்படிச் சொல்லிவிட்டு அவர் கலிலேயா
விலேயே இருந்துவிட்டார்.

இயேசு கூடாரப் பண்டிகைக்காலத்தில் போதித்தல்

10 என்றாலும், அவருடைய சகோதரர் பண்டிகைக்குப்
போய்விட்ட பின்பு அவரும் போனார். ஆனால் வெளிப்
படையாகப் போகாமல், சற்று மறைவாகப் போனார்.
11 பண்டிகையின்போது யூதர்கள், "அந்த ஆள் எங்கே?"
என்று கேட்டுக்கொண்டே அவரைத் தேடினார்கள்.
12 கூட்டத்தில் பலர் அவரைப்பற்றி முணுமுணுவென்று
பேசிக்கொண்டனர்; சிலர், "அவர் நல்லவர்" என்றனர்;
வேறு சிலரோ, "இல்லை, அவன் மக்களை ஏமாற்று
13 கிறவன்" என்றனர். யூதத் தலைவர்களைப்பற்றிய
அச்சம் காரணமாக அவரைக் குறித்து ஒருவனும்
வெளிப்படையாகப் பேசவில்லை.

பண்டிகை ஆசரிப்பில் பாதி முடிந்ததும், இயேசு திருக் 14
கோவிலுக்குப் போய்ப் போதிக்கலானார். அதைக் கண்ட 15
யூதர்கள் வியப்படைந்து, ''போதனையே பெறாத இந்த
ஆளுக்கு இவ்வளவு கல்வியறிவு எப்படி வந்தது?'' என்
றார்கள். இயேசு அவர்களைப் பார்த்து, ''நான் போதிக் 16
கும் போதனை என்னுடையதன்று, அது என்னை அனுப்
பினவருடையதே. அவரது விருப்பத்தை நிறைவேற்ற 17
ஒருவனுக்கு மனமுண்டானால், அவன் இந்தப் போதனை
கடவுளிடமிருந்து வருகிறதா அல்லது அதை நானாகவே
போதிக்கிறேனா என்று அறிந்துகொள்ளுவான்.
தானாகவே எதையும் சொல்லுகிறவன் தன் சொந்த 18
மாட்சிமையை நாடுகிறவன்; தன்னை அனுப்பினவருடைய
மாட்சிமையை நாடுகிறவனே உண்மையுள்ளவன்; அவ
னிடம் நேர்மைக்கேடு இராது. மோசே உங்களுக்கு 19
நீதிச்சட்டத்தைக் கொடுத்திருக்கிறார் அல்லவா? அப்படி
யிருந்தும் உங்களுள் எவனும் அந்த நீதிச்சட்டத்தைக்
கடைப்பிடிப்பதில்லை. என்னை ஏன் கொல்லப் பார்க்
கிறீர்கள்?'' என்று கேட்டார். அதற்கு அந்த மக்கள், 20
''உன்னை ஏதோ ஒரு பேய் பிடித்திருக்கிறது. யாரும்
உன்னைக் கொல்லப் பார்க்கவில்லையே!'' என்றார்கள்.

ஓய்வுநாளில் குணமாக்கினது நியாயமே

இயேசு அவர்களிடம், ''அன்று நான் ஒரு செயலைச் 21
செய்தேன், அது உங்களெல்லாருக்கும் வியப்பா
யிருந்தது. ஆனால், இதையொட்டியே மோசே உங்க 22
ளுக்கு விருத்தசேதன ஆசரிப்பை நியமித்திருக்கிறார்.
உண்மையில் அது மோசேயினிடமிருந்து வந்ததன்று, நம்
முன்னோரிடமிருந்து வந்ததாகும். அதன்படி நீங்கள்
ஓய்வுநாளிலும் விருத்தசேனம் செய்கிறீர்கள். மோசேயின் 23
நீதிச்சட்டத்தை மீறாதிருப்பதற்காக ஓய்வுநாளில் ஒருவன்
விருத்தசேதனம் செய்யப்படுகிறானென்றால், ஓய்வுநாளில்
நான் ஓர் ஆளை முற்றும் குணப்படுத்தினேன் என்பதற்
காக என்மீது சினங்கொள்ளலாமா? வெளித்தோற்றத் 24
தைப் பார்த்துத் தீர்ப்புக் கூறுவதை விட்டுவிட்டு,
நீதியோடு தீர்ப்பளியுங்கள்'' என்று சொன்னார்.

இந்த ஆள் மேசியாவா?

அப்பொழுது எருசலேம் நகரத்தாருள் சிலர், 25
''இவரைத்தானே கொல்லத் தேடுகிறார்கள்? இவர் 26
இங்கே வெளிப்படையாக நின்று பேசிக்கொண்டிருக்
கிறார். எவனும் இவரிடம் போய் எதையும் சொல்வ

தாகத் தெரியவில்லையே! ஒருவேளை இவரே மேசியா
என்பதை அதிகாரிகள் திட்டமாக அறிந்துகொண்டார்
27 களோ? ஆனால் இவர் எந்த இடத்திலிருந்து வந்தவர்
என்பது நமக்குத் தெரியும். மேசியா வரும்போது,
அவர் எங்கிருந்து வருகிறார் என்பது எவனுக்கும்
28 தெரியாமலல்லவா இருக்கும்'' என்றனர். ஆகவே, இயேசு
திருக்கோவிலில் போதிக்கையில் உரத்த குரலில், ''நான்
யார் என்பதும், எங்கிருந்து வந்திருக்கிறேன் என்பதும்
உங்களுக்குத் தெரியுமென்று சொல்லுகிறீர்கள்? எப்படி
யிருந்தாலும், நானாகவே வரவில்லை; நான் அனுப்பப்பட்
டேன்; என்னை அனுப்பினவர் மெய்ப்பொருளானவரா
யிருக்கிறார். அவரை நீங்கள் அறிந்துகொள்ளவில்லை.
29 நானோ அவரை அறிந்திருக்கிறேன். அவரிடமிருந்தே நான்
வந்திருக்கிறேன், அவர் தாமே என்னை அனுப்பினார்''
30 என்று சொன்னார். இப்படிச் சொன்னதால், அவர்கள்
அவரைப் பிடித்துக்கொண்டுபோக முயன்று பார்த்
தார்கள். ஆனால் அவருடைய நேரம் அதுவரையிலும்
வராததால், ஒருவனும் அவர்மேல் கை வைக்கவில்லை.
31 கூட்டத்தாருள் பலர் அவரிடம் நம்பிக்கைகொண்டனர்;
அவர்கள், ''மேசியா வரும்போது, இவர் செய்திருக்
கிறதைவிடவா மிகுதியான அரிய செயல்களைச் செய்யப்
போகிறார்?'' என்று பேசிக்கொண்டார்கள்.

இயேசுவைப் பிடிக்க ஆள் அனுப்புதல்

32 இப்படி மக்கள் அவரைப்பற்றி முணுமுணுவென்று
பேசிக்கொண்டது பரிசேயர் காதில் விழுந்தது. ஆகை
யால் தலைமை ஆசாரியர்களும் பரிசேயரும் அவரைப்
33 பிடித்துவரும்படி காவலரை அனுப்பினார்கள். இயேசு
இதை அறிந்து, ''நான் இன்னும் சிறிது காலந்தான்
உங்களோடிருப்பேன்; பிறகு என்னை அனுப்பினவரிடம்
34 சென்றுவிடுவேன். நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ஆனால்
கண்டுபிடிக்கமாட்டீர்கள்; நான் இருக்கும் இடத்துக்கு
35 உங்களால் வரவும் இயலாது'' என்று சொன்னார். அதைக்
கேட்ட யூதர்கள், ''நாம் கண்டுபிடிக்க இயலாதபடி
இவர் எங்கே போய்விடுவார்? கிரேக்கரிடையே சிதற
லாக வாழும் யூதரிடம் சென்று கிரேக்கருக்குப் போதனை
36 செய்வாரோ? 'நீங்கள் என்னைத் தேடுவீர்கள், ஆனால்
கண்டுபிடிக்கமாட்டீர்கள்; நான் இருக்கும் இடத்துக்கு
உங்களால் வரவும் இயலாது' என்று சொன்னாரே.
இதற்குப் பொருளென்ன?'' என்று தங்களிடையே பேசிக்
கொண்டார்கள்.

மெய்வாழ்வாகிய தண்ணீர்

பண்டிகையின் கடைசி நாள் மிக முக்கியமான நாளா 37
யிருந்தது; அந்நாளில் இயேசு எழுந்து நின்று, ''ஒருவ
னுக்குத் தாகம் இருந்தால் அவன் என்னிடம் வந்து
பானம் பருகுவானாக. என்னிடம் நம்பிக்கை கொண் 38
டுள்ளவன் எவனோ அவன் உள்ளத்திலிருந்து, வேத
வாக்கியம் சொல்லுகிறபடி, மெய்வாழ்வாகிய தண்ணீர்
ஆறுய்ப் பெருக்கெடுத்து ஓடும்'' என்று உரத்துச்
சொன்னார். தம்மிடம் நம்பிக்கை கொள்ளுகிறவர்களுக்கு 39
அருளப்படவிருக்கும் ஆவியானவரைக் குறித்து அவர்
இப்படிச் சொன்னார். இயேசு அதுவரையிலும் மாட்சி
மைக்கு உயர்த்தப்படாதிருந்ததால், ஆவியானவரும்
அதுவரையிலும் அருளப்படாதிருந்தார்.

மக்களிடையே பிரிவினை

கூட்டத்தாருள் சிலர் இந்த வார்த்தைகளைக் கேட்டு, 40
''மெய்யாகவே இவர்தாம் எதிர்பார்க்கப்படும் இறை
வாக்குரைப்பவர்'' என்றனர். சிலர், ''இவரே 41
மேசியா'' என்றனர்; வேறு சிலரோ, ''கலிலேயா நாட்
டிலிருந்தா மேசியா வருவார்? தாவீதின் மரபிலிருந் 42
தும், தாவீது குடியிருந்த பெத்லெகேம் ஊரிலிருந்தும்
வருவார் என்றல்லவா வேதம் கூறுகிறது?'' என்றனர். 43
எனவே, அவரால் மக்களிடையே பிரிவினை ஏற்பட்டது. 44
அவர்களுள் சிலர் அவரைக் கைதுசெய்ய வேண்டுமென்
றிருந்தனர். ஆனாலும் அவர்மேல் ஒருவனும் கை வைக்க
வில்லை.

யூதத் தலைவரின் நம்பிக்கையின்மை

பிறகு தலைமை ஆசாரியர்களும் பரிசேயரும் அனுப்பி 45
யிருந்த காவலர்கள் அவர்களிடம் திரும்பிவந்தார்கள்.
அவர்கள் காவலர்களைப் பார்த்து, ''நீங்கள் ஏன் அவனைக்
கொண்டுவரவில்லை?'' என்று கேட்க, காவலர்கள், 46
''அந்த மனிதன் பேசுவதுபோல எவனும் ஒருபோதும்
பேசினதில்லை'' என்று சொன்னார்கள். அப்பொழுது 47
பரிசேயர் அவர்களிடம், ''நீங்களுமா மோசம்
போனீர்கள்? அதிகாரிகளுள் யாராவது அவனிடம் 48
நம்பிக்கை கொண்டவர்களாய் இருக்கிறார்களா? அல்லது
பரிசேயருள்ளாவது அப்படிப்பட்டவர் உண்டா? இந்தப் 49
பாமர மக்களுக்கு நீதிச்சட்டம் தெரியாது, இவர்கள்
சபிக்கப்பட்டவர்கள்'' என்றனர். அவர்களுள் ஒருவர் 50
நிக்கொதேமு என்பவர். அவரே முன்பு இயேசுவினிடம்

51 வந்தவர். அவர் அவர்களைப் பார்த்து, | “ஒருவனை
முதலில் விசாரணை செய்யாமலும், அவன் செய்தது
இன்னதென்பதை அறியாமலும் அவனைக் குற்றவாளி
என்று நம்முடைய சட்டம் தீர்ப்பளிக்குமா?” என்று
52 கேட்டார். அதற்கு அவர்கள், “நீர் கலிலேயாவிலிருந்து
வந்தவரல்லவே? வேதத்தை ஆராய்ந்து பாரும்; இறை
வாக்குரைக்கும் எவரும் கலிலேயாவில் தோன்றுவதில்லை
என்பதை அப்போது தெரிந்துகொள்வீர்” என்று
சொன்னார்கள்.

கற்புநெறி தவறிய பெண்

53 [பிறகு எல்லாரும் தத்தம் வீட்டுக்குச் சென்றனர்.
2 **8** இயேசு ஒலிவ மலைக்குப் போனார். விடியற்காலத்தில்
அவர் மறுபடியும் திருக்கோவிலுக்கு வந்தார்;
அங்கிருந்த மக்களெல்லாரும் அவரிடம் வந்தனர். அவர்
3 உட்கார்ந்து அவர்களுக்குப் போதித்தார். அப்பொழுது
கற்புநெறி தவறிய ஒரு பெண்ணை வேத அறிஞரும்
பரிசேயரும் கூட்டிக்கொண்டு வந்து, நடுவில் நிறுத்தி
4 அவரிடம், “போதகரே, இந்தப் பெண் கற்புநெறி தவறி
5 நடக்கும்போதே பிடிக்கப்பட்டாள். இப்படிப்பட்ட
வளைக் கல்லாலடித்துக் கொல்லவேண்டுமென்பது நீதிச்
சட்டத்தில் மோசே நமக்கு இட்டுள்ள கட்டளையா
யிற்றே; நீர் என்ன சொல்லுகிறீர்?” என்றுகேட்டார்கள்.
6 அவரிடம் ஏதாவதொரு குற்றம் கண்டுபிடிக்கவேண்டு
மென்ற நோக்கத்துடன் அவரை இப்படிக் கேட்டுப்
பரிசோதித்தார்கள். இயேசுவோ குனிந்து விரலினால்
7 தரையில் எழுதத் தொடங்கினார். ஆனால் அவர்கள்
அவரை விடாமல் கேட்டுக்கொண்டிருந்ததால், அவர்
நிமிர்ந்து பார்த்து அவர்களிடம், “உங்களுள் எவன் ஒரு
பாவமும் செய்யாதவனோ அவன் முதலில் இவளைக்
8 கல்லாலடிக்கட்டும்” என்று சொல்லிவிட்டு, மறுபடியும்
9 குனிந்து தரையில் எழுதிக்கொண்டிருந்தார். அவர்கள்
அதைக் கேட்டதும், முதலில் முதியோர் அங்கிருந்து
செல்ல, பிறகு ஒவ்வொருவராக எல்லாரும் போய்
விட்டனர். இயேசு தனிமையாய் விடப்பட்டார்; அந்தப்
10 பெண் அங்கேயே நின்றுகொண்டிருந்தாள். இயேசு
நிமிர்ந்து பார்த்து அவளிடம், “பெண்ணே, எங்கே
அவர்கள்? ஒருவரும் நீ குற்றவாளி என்று தீர்ப்புக்கூற
11 வில்லையா?” என்று கேட்டார். அதற்கு அவள், “இல்லை
ஐயா” என்றாள். இயேசு அவளிடம், “நீ குற்றவாளி
என்று நானும் தீர்ப்புக்கூறவில்லை, நீ போகலாம், இனி
ஒருபோதும் பாவம் செய்யாதே” என்று சொன்னார்.]

உலகத்துக்கு ஒளி இயேசுவே

பிறகு இயேசு மறுபடியும் மக்களைப் பார்த்து, ''நானே 12
உலகத்துக்கு ஒளி; என்னைப் பின்பற்றுகிறவன் ஒரு
போதும் இருளில் நடக்கமாட்டான்; அவன் மெய்வாழ்
வாகிய ஒளியைப் பெற்றவனாயிருப்பான்'' என்று சொன்
னார். பரிசேயர் இதைக் கேட்டு அவரிடம், ''நீரே 13
உம்மைக் குறித்துச் சாட்சி கூறுவதால், உமது சாட்சியம்
செல்லாது'' என்றார்கள். அதற்கு இயேசு, ''நானே 14
என்னைக் குறித்துச் சாட்சி கூறினாலும் என் சாட்சியம்
செல்லும்; ஏனெனில், நான் எங்கிருந்து வந்தேன்,
எங்கே செல்கிறேன் என்பது எனக்குத்தான் தெரியும்.
நான் எங்கிருந்து வருகிறேன், எங்கே செல்கிறேன்
என்பது உங்களுக்குத் தெரியாது. நீங்கள் மனிதப் 15
போக்கின்படி தீர்ப்புக் கூறுகிறீர்கள்; நான் ஒருவனைப்
பற்றியும் தீர்ப்புக் கூறுவதில்லை. அப்படி நான் தீர்ப்புக் 16
கூற நேர்ந்தால், என் தீர்ப்பு நீதியுள்ளதாயிருக்கும்.
ஏனெனில், தனிமையாக நான் தீர்ப்புக் கூறுவதில்லை;
என்னை அனுப்பினவராகிய தந்தையாரும் என்னோடு
இருக்கிறார். ஒரே சாட்சியத்தை இருவர் கூறினால் அது 17
உண்மையானதாயிருக்கும் என்று உங்கள் நீதிச்சட்டத்தி
லேயே எழுதியிருக்கிறதே. நானும் என்னைக் குறித்துச் 18
சாட்சி கூறுகிறேன், என்னை அனுப்பினவராகிய தந்தை
யாரும் என்னைக் குறித்துச் சாட்சி கூறுகிறார்'' என்று
சொன்னார். அப்பொழுது அவர்கள் அவரிடம், ''உம் 19
முடைய தந்தையார் எங்கே இருக்கிறார்?'' என்று கேட்
டார்கள். அதற்கு இயேசு, ''நீங்கள் என்னையும் அறிந்து
கொள்ளவில்லை; என் தந்தையாரையும் அறிந்துகொள்ள
வில்லை. என்னை நீங்கள் அறிந்திருந்தால், என் தந்தை
யாரையும் அறிந்திருப்பீர்கள்'' என்று சொன்னார்.
திருக்கோவிலில் அவர் காணிக்கைப் பெட்டிக்கருகிலிருந்து 20
போதிக்கையில், இந்த வார்த்தைகளைச் சொன்னார்.
என்றாலும், ஒருவனும் அவரைக் கைது செய்யவில்லை.
ஏனெனில், அவருடைய நேரம் இன்னும் வரவில்லை.

நான் செல்லும் இடத்துக்கு உங்களால் வர இயலாது

அவர் மறுபடியும் அவர்களைப் பார்த்து, ''நான் 21
செல்லப்போகிறேன்; நீங்கள் என்னைத் தேடுவீர்கள்,
ஆனால் உங்கள் பாவம் நீங்காமலே நீங்கள் சாவீர்கள்.
நான் செல்லும் இடத்துக்கு உங்களால் வர இயலாது''
என்றார். அப்பொழுது யூதர்கள், ''நான் செல்லும் 22
இடத்துக்கு உங்களால் வர இயலாது என்கிறாரே! ஒரு

வேளை தற்கொலை செய்துகொள்ளப் போகிறாரோ!''
23 என்றார்கள். அவர் அவர்களிடம், ''நீங்கள் மண்ணி
னின்று தோன்றியவர்கள், நான் விண்ணினின்று தோன்
றியவன்; நீங்கள் இந்த உலகத்திற்குரியவர்கள், நான்
24 இந்த உலகைத்திற்குரியவனல்ல. அதனாலேதான் நீங்கள்
உங்கள் பாவங்கள் நீங்காமலே சாவீர்கள் என்று உங்க
ளுக்குச் சொன்னேன். நான் யாரோ, அவர்தான் நான்
என்பதை நீங்கள் நம்பாவிட்டால், உங்கள் பாவங்கள்
நீங்காமலே நீங்கள் சாவீர்கள்'' என்று சொன்னார்.
25 அதற்கு அவர்கள், ''நீர் யார்?'' என்று கேட்க, இயேசு
அவர்களிடம், ''நான் யாரென்று தொடக்கத்தில்
உங்களுக்குச் சொல்லிவந்தேனோ அவர்தான் நான்.*
26 உங்களைக் குறித்து நான் சொல்லக்கூடியவையும் தீர்ப்
பளிக்கக்கூடியவையும் பல உண்டு. ஆனால் என்னை
அனுப்பினவரிடம் கேட்டவற்றையே நான் உலகத்துக்குச்
சொல்லுகிறேன்; அவர் சத்திய வாசகர்'' என்று
27 சொன்னார். அவர் தங்களிடம் விண்ணகத் தந்தையா
ரைக் குறித்துப் பேசினாரென்பதை அவர்கள் அறிந்து
28 கொள்ளவில்லை. ஆகையால் இயேசு அவர்களைப்
பார்த்து, ''நீங்கள் மனுமைந்தரை உயர்த்தினபின்,
நான் யாரோ, அவர்தான் நான் என்றும், நானாகவே
எதையும் செய்கிறதில்லை, தந்தையார் எனக்குக் கற்பித்த
படியே நான் இவற்றைச் சொல்லுகிறேன் என்றும்
29 அறிந்துகொள்ளுவீர்கள். என்னை அனுப்பினவர்
என்னோடு இருக்கிறார்; அவருக்கு உகந்தவற்றையே நான்
எப்போதும் செய்கிறபடியால், அவர் என்னைத் தனியே
30 விட்டுவிடவில்லை'' என்று சொன்னார். அவர் இவற்றைச்
சொல்லுகையில், பலர் அவரிடம் நம்பிக்கை
கொண்டனர்.

சத்தியம் விடுதலை அளிக்கும்

31 இயேசு தம்மை நம்பின யூதரைப் பார்த்து, ''உங்கள்
வாழ்க்கை என் வார்த்தையில் வேரூன்றியதாய் இருக்கு
மானால் மெய்யாகவே நீங்கள் என் சீடர்களாயிருப்
பீர்கள்; சத்தியத்தையும் அறிந்துகொள்ளுவீர்கள்,
32 அந்தச் சத்தியம் உங்களை விடுதலைபெற்றவர்களாக்கும்''
33 என்று சொன்னார். அதற்கு அவர்கள், ''நாங்கள் ஆபிர
காமின் மரபினர்கள்; நாங்கள் ஒருபோதும் ஒருவனுக்கும்

---

* 'நான் ஆதியில் யாராயிருந்தேனோ அவராகவே இருக்கிறேன் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்' என்றாவது, 'நான் எதற்காகத் தான் உங்களோடு பேசவேண்டும்?' என்றாவது மொழிபெயர்க்கலாம்.

அடிமைகளாய் இருந்ததில்லை; நீங்கள் விடுதலைபெற்றவர்
களாவீர்கள் என்று நீர் எப்படிச் சொல்லலாம்?'' என்று
கேட்டார்கள். அதற்கு இயேசு அவர்களிடம், ''மிகவும் 34
உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன், பாவம்
செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமை. அடிமையா 35
யிருப்பவன் எப்போதும் வீட்டில் நிலைத்து இருக்க
மாட்டான், மகனே எப்போதும் நிலைத்து இருப்பவன்.
ஆகவே, மைந்தர் உங்களுக்கு விடுதலையளித்துவிட்டால், 36
நீங்கள் மெய்யாகவே விடுதலைபெற்றவர்களாவீர்கள்.
நீங்கள் ஆபிரகாமின் மரபினர்கள் என்பது எனக்குத் 37
தெரியும். ஆயினும், நீங்கள் என்னைக் கொல்ல வழி
தேடுகிறீர்கள். ஏனென்றால், என் வார்த்தை உங்கள்
உள்ளத்தில் இடம்பெறவில்லை. நான் என் தந்தையிடம் 38
கண்டுகொண்டவற்றை எடுத்துரைக்கிறேன், நீங்கள்
உங்கள் தந்தையிடமிருந்து கற்றதை உங்கள் செய்கையில்
காட்டுகிறீர்கள்'' என்றார்.

பிசாசுதான் உங்களுக்குத் தந்தை

அதற்கு அவர்கள், ''ஆபிரகாமே எங்கள் தந்தை'' 39
என்று சொல்ல, இயேசு, ''நீங்கள் உண்மையில் ஆபிர
காமின் பிள்ளைகளாயிருந்தால், ஆபிரகாம் செய்தவற்
றைச் செய்வீர்கள். ஆனால் நீங்களோ, கடவுளிடம் 40
கேட்ட சத்தியத்தை உங்களுக்கு எடுத்துச் சொன்ன
என்னைக் கொல்ல வழி தேடுகிறீர்கள்; ஆபிரகாம்
இப்படிச் செய்யமாட்டாரே. உங்களுக்குத் தந்தையா 41
யிருப்பவனுடைய செயல்களையே நீங்கள் செய்கிறீர்கள்''
என்று சொன்னார். அதற்கு அவர்கள், ''என்ன?
நாங்கள் முறைகேடான வழியில் பிறந்தவர்களா?
இல்லவே இல்லை. எங்களுக்கு ஒரே தந்தைதான் உண்டு,
அவர் கடவுளே'' என்றார்கள். இயேசு அவர்களிடம், 42
''கடவுள் உங்களுக்குத் தந்தையாயிருந்தால், நீங்கள்
என்னிடம் அன்புகொள்ளுவீர்கள். ஏனெனில், நான்
கடவுளிடமிருந்தே வந்திருக்கிறேன்; நானாகவே
வரவில்லை, அவரே என்னை அனுப்பினார். என் பேச்சை 43
நீங்கள் புரிந்துகொள்ளாமலிருப்பதேன்? என் சொல்லுக்
குச் செவிசாய்க்க இயலாத நிலையில் நீங்கள் இருப்பது
தான் காரணம். பிசாசுதான் உங்களுக்குத் தந்தை. 44
உங்கள் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதில்
நீங்கள் ஆர்வம்காட்டிவருகிறீர்கள். அவன் ஆதிமுதல்
மனித கொலைகாரனாகவே இருந்துவருகிறான். சத்தியம்
என்பதே அவனிடம் இல்லாததால், அவன் சத்தியத்தில்

நிலைகொள்ளவில்லை. பொய் பேசும்போது அவன் தன்
இயல்பான குணத்தையே காட்டுகிறான். ஏனெனில்,
அவன் பொய்யன், பொய்க்குத் தந்தையும் அவனே.
45 நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொல்கிறேன்;
அதனாலேதான் நீங்கள் என்னிடம் நம்பிக்கைகொள்ள
46 வில்லை. என்னிடம் பாவம் உண்டென்று உங்களுள்
யாராலாவது மெய்ப்பிக்க இயலுமா? நான் சத்தியத்தைச்
சொல்லியிருக்க, நீங்கள் ஏன் என்னிடம் நம்பிக்கை
47 கொள்ளவில்லை? கடவுளுக்கு உரியவனாயிருப்பவன் கடவு
ளின் சொல்லுக்குச் செவிசாய்ப்பான்; நீங்கள் கடவுளுக்கு
உரியவர்கள் ஆகாததனாலேதான் செவிசாய்க்காமல்
இருக்கிறீர்கள்'' என்றார்

இயேசுவும் ஆபிரகாமும்

48 அப்பொழுது யூதர்கள் அவரிடம், ''நீ ஒரு சமாரியன்,
பேய் பிடித்தவன் என்று நாங்கள் சொல்வது சரிதானே?''
49 என்று கேட்டார்கள். அதற்கு இயேசு, ''நான் பேய் பிடித்
தவன் என்று சொல்வது தவறு, நான் என் தந்தையாரைக்
கனப்படுத்துகிறேன், நீங்களோ என்னை இழிவுபடுத்து
50 கிறீர்கள். நான் என் மாட்சிமையை நாடவில்லை; அதை
நாடுகிறவர் ஒருவர் இருக்கிறார், அவரே தீர்ப்புக் கூறு
51 கிறவர். மிகவும் உறுதியாக உங்களுக்குச் சொல்லு
கிறேன்: ஒருவன் என் சொல்லைக் கடைப்பிடித்து நடந்
தால் அவன் என்றைக்குமே சாகமாட்டான்'' என்றார்.
52 யூதர்கள் அவரைப் பார்த்து, ''நீ பேய் பிடித்தவன்
என்பது இப்போது எங்களுக்குத் திட்டமாய்த் தெரிந்து
விட்டது. ஆபிரகாம் இறந்துபோனார், இறைவாக்
குரைப்பவர்களும் இறந்துபோனார்கள் ஆனால், நீயோ,
'ஒருவன் என் சொல்லைக் கடைப்பிடித்து நடந்தால்
அவன் என்றைக்குமே சாகமாட்டான்' என்கிறாய்.
53 அப்படியானால் எங்கள் தந்தையாகிய ஆபிரகாமைவிட நீ
பெரியவனோ? அவர் இறந்தார், இறைவாக்குரைப்பவர்
களும் இறந்தார்கள். உன்னை நீ யாரென்று சொல்லிக்
54 கொள்ளுகிறாய்?'' என்று கேட்டார்கள். அதற்கு இயேசு,
''நானே எனக்கு மாட்சிமை அளித்துக்கொண்டால் என்
மாட்சிமைக்கு மதிப்பில்லை. எனக்கு மாட்சிமை அளிப்ப
வர் என் தந்தையாரே. அவரை நீங்கள் உங்கள் கடவுள்
55 என்று சொல்லுகிறீர்கள். ஆனால், நீங்கள் அவரை அறிந்து
கொள்ளவில்லை. நான் அவரை அறிந்திருக்கிறேன்.
அவரை அறிந்துகொள்ளவில்லை என்று நான் சொல்வே
னானால், நானும் உங்களைப்போன்ற பொய்யனாவேன்.

நான் அவரை அறிந்திருக்கிறேன், அவருடைய சொல்லைக்
கடைப்பிடித்து நடக்கிறேன். உங்களுடைய தந்தை 56
யாகிய ஆபிரகாம் என் நாளைக் காணப்போகிறவராய்
இருந்ததற்காக அகமகிழ்ந்தார்; அதையும் கண்டு களி
கூர்ந்தார்'' என்று சொன்னார். அப்பொழுது யூதர்கள் 57
அவரிடம், ''உனக்கு இன்னும் ஐம்பது வயதுகூட ஆக
வில்லையே. நீயா ஆபிரகாமைப் பார்த்திருக்கிறாய்?''
என்று கேட்டார்கள். அதற்கு இயேசு, ''ஆபிரகாம் 58
பிறப்பதற்கு முன்பிருந்தே நான் இருந்து வருகிறேன்;
இதை உங்களுக்கு மிகவும் உறுதியாகச் சொல்லுகிறேன்''
என்றார். அப்பொழுது அவர்கள் அவர்மேல் எறிவதற் 59
காகக் கற்களை எடுத்தார்கள். இயேசுவோ மறைந்து
திருக்கோவிலிலிருந்து போய்விட்டார்.

பிறவிக் குருடன் பார்வை பெறுதல்

9 அவர் போகையில் ஒரு பிறவிக் குருடனைக் கண்டார்.
அப்பொழுது அவருடைய சீடர்கள், அவரிடம், 2
''ரபீ,* இவன் குருடனாய்ப் பிறந்ததற்கு யார் செய்த
பாவம் காரணம்? இவன் செய்ததா, இவனுடைய பெற்
றோர் செய்ததா?'' என்று கேட்டார்கள். அதற்கு 3
இயேசு, ''அது இவன் செய்த பாவமுமன்று, இவனுடைய
பெற்றோர் செய்த பாவமுமன்று; கடவுளின் நற்செயல்கள்
இப்போது இவனிடம் விளங்கும்பொருட்டே இவன்
இப்படியிருக்கிறான். பகல் இருக்கும்போதே என்னை 4
அனுப்பினவருடைய செயல்களை நாம்† செய்தாக
வேண்டும்; இரவு வருகிறது; அப்போது ஒருவராலும்
வேலைசெய்ய இயலாது. இப்பொழுது நான் உலகத்தில் 5
இருப்பதால் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்'' என்று
சொன்னார். இப்படிச் சொன்னபின் அவர் தரையில் 6
உமிழ்ந்து, உமிழ்நீரினால் சேறு உண்டாக்கி, அந்தச் சேற்
றைக் குருடனுடைய கண்களின்மேல் பூசினார். பிறகு அவ 7
னிடம், ''சீலோவாம் குளத்துக்குப் போய்க் கண்களைக்
கழுவு'' என்று சொன்னார். (சீலோவாம் என்பதற்கு
அனுப்பப்பட்டவர் என்பது பொருள்.) அவன் போய்க்
கழுவிப் பார்வைபெற்றுத் திரும்பினான்.

அக்கம்பக்கத்தில் உள்ளவர்களும், அவனைப் பிச்சைக் 8
காரனாய் அதற்குமுன் பார்த்திருந்தவர்களும் அவனைக்
கண்டபோது, ''இவன்தானே இங்கே உட்கார்ந்து

---

* போதகரே.

† 'நான்' என்பது ஒரு சில பிரதிகளின் பாடம்.

9 பிச்சை கேட்டுக்கொண்டிருந்தவன்?'' என்றார்கள். சிலர்,
''இவன்தான்'' என்றனர். வேறு சிலரோ, ''இல்லை,
இவன் அவனைப்போல இருக்கிறான்'' என்றனர். அப்
பொழுது அந்த மனிதன்; ''நானே அவன்'' என்று
10 சொன்னான். அவர்கள், ''அப்படியானால் உன் கண்
எப்படிப் பார்வை பெற்றது?'' என்று கேட்டார்கள்.
11 அதற்கு அவன், ''இயேசு என்னப்பட்ட ஒருவர் சேறுண்
டாக்கி, அதை என் கண்களின்மேல் பூசி, 'சீலோவாமுக்
குப் போய்க் கண்களைக் கழுவு' என்றார். நான் போய்க்
கழுவினேன், பார்வை கிடைத்தது'' என்று சொன்னான்.
12 அப்பொழுது அவர்கள் அவனிடம், ''அவர் எங்கே இருக்
கிறார்?'' என்று கேட்க, அவன், ''எனக்குத் தெரியாது''
என்றான்.

பரிசேயர் நடத்திய விசாரணை

13 முன்பு குருடனாயிருந்த அவனை அவர்கள் பரிசேயரிடம்
14 கூட்டிக்கொண்டு போனார்கள். இயேசு சேறுண்டாக்கி
அவனுடைய கண் பார்வை பெறும்படி செய்த நாள் ஓர்
15 ஓய்வுநாள். ஆகையால் பரிசேயரும் அவனைப் பார்த்து,
''எப்படிப் பார்வை பெற்றாய்?'' என்ற கேள்வியையே
கேட்டனர். அதற்கு அவன், ''அவர் என் கண்களின்மேல்
சேற்றைப் பூசினார், நான் கண்களைக் கழுவினேன், இப்
பொழுது பார்வை பெற்றவனாயிருக்கிறேன்'' என்றான்.
16 அப்பொழுது பரிசேயருள் சிலர், ''அந்த ஆள் ஓய்வுநாள்
விதியைக் கைக்கொள்ளாதவன்; ஆகையால் அவன் கடவு
ளிடமிருந்து வந்த மனிதனாய் இருக்க முடியாது'' என்ற
னர். வேறு சிலரோ, ''பாவியாயிருக்கும் ஒரு மனிதனால்
இப்படிப்பட்ட அரிய செயல்களை எப்படிச் செய்ய
இயலும்?'' என்றனர். அவர்களிடையே இவ்வாறு
17 பிரிவினை ஏற்பட்டது. ஆகையால் அவர்கள் மறுபடியும்
அந்தக் குருடனைப் பார்த்து, ''உன் கண்களுக்குப் பார்வை
கொடுத்த அந்த ஆளைக் குறித்து நீ என்ன சொல்லு
கிறாய்?'' என்று கேட்டார்கள். அவன், ''அவர் இறை
வாக்குரைக்கும் ஒரு பெரியார்'' என்று சொன்னான்.

18 அந்த யூதர், அவன் முன்பு குருடனாயிருந்து பிறகு
பார்வை பெற்றான் என்பதை நம்ப மனமில்லாமல்,
பார்வை பெற்றவனுடைய பெற்றோரை வரவழைத்து,
19 அவர்களிடம், ''இவன் உங்களுடைய மகன்தானா? இவன்
குருடனாய்ப் பிறந்தான் என்றா சொல்லுகிறீர்கள்? அப்படி
யானால், இவனுக்கு இப்போது எப்படிக் கண் தெரி
20 கிறது?'' என்று கேட்டனர். அதற்கு அவனுடைய பெற்

ரோர், ''இவன் எங்களுடைய மகன்தான், இவன் குருட
னாய்ப் பிறந்தான், இதுதான் எங்களுக்குத் தெரியும்.
ஆனால், இவனுக்கு இப்போது எப்படிக் கண் தெரிகிற 21
தென்பதோ, இவனுடைய கண்களுக்குப் பார்வை
கொடுத்தது யாரென்பதோ எங்களுக்குத் தெரியாது.
இவனையே கேட்டுக்கொள்ளுங்கள். இவன் வயதுவந்த
வன், தனக்காகத் தானே பேசக்கூடியவன்'' என்று கூறி
னர். யூதத் தலைவருக்குப் பயந்ததனால் அவனுடைய 22
பெற்றோர் இப்படிக் கூறினர். ஏனெனில், எவனாவது
அவரை மேசியா என்று ஒப்புக்கொள்வானானால், அவனைத்
தங்கள் சபையிலிருந்து விலக்கிவிடுவதென்று அந்த யூதர்
கள் ஏற்கெனவே தீர்மானம் செய்திருந்தார்கள்.
அதனாலேதான் அவனுடைய பெற்றோர், ''அவன் வயது 23
வந்தவன், அவனையே கேட்டுக்கொள்ளுங்கள்'' என்று
சொல்லிவிட்டனர்.

ஆகவே, குருடனாயிருந்த அந்த மனிதனை யூதர்கள் 24
மீண்டும் அழைத்து, ''நீ கடவுளுக்கு மாட்சிமை அளி.
இந்த மனிதன் பாவி என்பது எங்களுக்குத் தெரியும்''
என்றார்கள். அதற்கு அவன், ''அவர் பாவியா, 25
இல்லையா என்பது எனக்குத் தெரியாது; ஒன்றுதான்
எனக்குத் தெரியும், நான் குருடனாயிருந்தேன், இப்போது
பார்க்கிறேன்'' என்று சொன்னான். அவர்கள் அவ 26
னிடம், ''அவன் உனக்கு என்ன செய்தான், உன் கண்
களுக்கு எப்படிப் பார்வை கொடுத்தான்?'' என்று கேட்
டார்கள். அதற்கு அவன், ''நான் ஏற்கெனவே உங்க 27
ளுக்குச் சொன்னேன், நீங்களோ அதைச் செவிகொடுத்
துக் கேட்கவில்லை; ஏன் அதை மறுபடியும் கேட்க விரும்பு
கிறீர்கள்? நீங்களும் அவருடைய சீடராக விரும்புகிறீர்
களோ?'' என்று கேட்டான். அதன்பின் அவர்கள் 28
அவனை வைதுவிட்டு, ''நீதான் அவனுடைய சீடன்,
நாங்கள் மோசேயின் சீடர்கள். | மோசேயோடு கடவுள் 29
பேசினார் என்பது எங்களுக்குத் தெரியும். இவன்
எங்கிருந்து வந்தான் என்பது எங்களுக்குத் தெரியாது''
என்று சொன்னார்கள். அதற்கு அந்த மனிதன், ''என்ன 30
ஆச்சரியம்! அவர் என் கண்களுக்குப் பார்வை அளித்திருக்
கிறார்; என்றாலும், அவர் எங்கிருந்து வந்தாரென்பது உங்க
ளுக்குத் தெரியவில்லையே! பாவிகளின் வேண்டுதலுக்குக் 31
கடவுள் செவிசாய்ப்பதில்லை என்பது நமக்குத் தெரியும்;
ஆனால், ஒருவன் தெய்வ பக்தியுள்ளவனாயிருந்து, அவ
ருடைய திருவுளத்தை நிறைவேற்றுவானானால், அவ
னுக்கு அவர் செவிசாய்ப்பார். பிறவியிலேயே குருடனா 32

யிருந்த ஒருவனுடைய கண்களுக்கு யாரும் பார்வை
அளித்ததாக உலகம் உண்டானது முதல் எவரும் கேள்விப்
33 பட்டதேயில்லை. அவர் கடவுளிடமிருந்து வந்திருந்தா
லன்றி அவரால் ஒன்றும் செய்ய இயலாது'' என்று சொன்
34 ஞன். அதைக் கேட்டதும் அவர்கள், ''பிறந்தது முதல்
பாவத்தில் மூழ்கிக்கிடக்கும் நீயா எங்களுக்குப் போதிக்க
வந்தாய்!'' என்று சொல்லி அவனைத் துரத்திவிட்
டார்கள்.

ஆன்மீகக் குருட்டுத்தனமும் அது நீங்கப்பெறுதலும்

35 அவர்கள் அவனைத் துரத்திவிட்டார்கள் என்பதை
இயேசு கேள்விப்பட்டார்; பிறகு அவர் அவனைக் கண்டு
பிடித்தபோது, ''மனுமைந்தரிடம்* உனக்கு நம்பிக்கை
36 உண்டா?'' என்று கேட்டார். அதற்கு அவன், ''ஐயா,
அவர் யாரென்பதைச் சொல்லும்; அப்பொழுது அவரிடம்
37 நம்பிக்கை கொள்கிறேன்'' என்ருன். இயேசு அவனிடம்,
''அவரை நீ பார்த்திருக்கிருய், அவரே இப்போது உன்
ேனுடு பேசிக்கொண்டிருக்கிருர்'' என்று சொன்ஞர்.
38 உடனே அவன், ''நம்புகிறேன், ஆண்டவரே'' என்று
39 சொல்லி அவரை வணங்கிஞன். அப்பொழுது இயேசு,
''பார்வை இல்லாதவர்கள் பார்க்கும்படியும், பார்வை
உள்ளவர்கள் குருடராகும்படியும் தீர்ப்பளிக்கவே நான்
இந்த உலகத்துக்கு வந்தேன்'' என்ருர்.

40 அவரோடிருந்த பரிசேயர் இதைக் கேட்டபோது,
''அப்படியாஞல் நாங்களும் குருடர்களா?'' என்று
41 கேட்டனர். இயேசு அவர்களிடம், ''நீங்கள் குருடர்
களாயிருந்தால் உங்கள்மீது பாவப்பழி சுமராது. ஆனல்,
'எங்களுக்குக் கண் தெரிகிறது' என்று நீங்கள் இப்போது
சொல்லுகிறபடியால், உங்கள் பாவப்பழி உங்களை விட்டு
நீங்காமலிருக்கிறது'' என்ருர்.

ஆட்டுத்தொழுவமாகிய உபமானம்

10 ''மிகவும் உறுதியாக உங்களுக்குச் சொல்லு
கிறேன்: எவஞவது ஆட்டுத்தொழுவம் ஒன்றி
னுள் வாயில் வழியாகச் செல்லாமல் வேறு வழியாக ஏறிச்
செல்வாஞனுல், அவன் திருடஞய் அல்லது கொள்ளைக்
2 காரஞய் இருப்பான். வாயில் வழியாக உள்ளே செல்லு
3 கிறவனே ஆடுகளின் ஆயன். காவற்காரன் அவனுக்குக்
கதவைத் திறப்பான். ஆடுகள் அவனுடைய குரலுக்குச்

* 'கடவுளின் மைந்தர்' என்பதும் பாடம்.

செவிசாய்க்கும். அவன் தன் சொந்த ஆடுகளைப் பெயர்
சொல்லிக் கூப்பிட்டு, அவற்றை வெளியே நடத்திச்
செல்வான். அவன் தன்னுடைய எல்லா ஆடுகளையும் 4
வெளியே ஓட்டி வந்தபின், அவற்றிற்குமுன் போவான்;
ஆடுகளும் அவன் பின்னே செல்லும். ஏனெனில், அவற்
றிற்கு அவனது குரல் தெரியும். வேற்றாள் ஒருவன் 5
பின்னே அவை செல்வதில்லை; அவை அவனை விட்டு ஓடிப்
போகும்; ஏனென்றால், வேற்றாள்களின் குரல் அவற்
றிற்குத் தெரியாது.'' இயேசு அவர்களுக்கு இந்த 6
உபமானத்தைச் சொன்னார். ஆனால், அவர்களோ அவர்
தங்களுக்குச் சொன்னதன் கருத்தைப் புரிந்துகொள்ள
வில்லை.

தொழுவத்தின் வாயில் இயேசுவே

ஆகையால் இயேசு மறுபடியும் அவர்களைப் பார்த்து, 7
''மிகவும் உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்:
தொழுவத்தின் வாயில் நானே. எனக்கு முன்பு வந்தவர்க 8
ளெல்லாரும் திருடர்கள், அவர்கள் கொள்ளைக்காரர்கள்.
அவர்களுக்கு ஆடுகள் செவிசாய்க்கவில்லை. நானே 9
வாயில்; என்னை வழியாகக் கொண்டு ஒருவன் உட்சென்
றால் அவனை நான் காத்தருளுவேன். அவன் உள்ளேயும்
வருவான், வெளியேயும் செல்வான்; சென்று மேய்ச்சலைக்
காண்பான். திருடன் ஆடுகளைத் திருடுவதற்கும் கொல்வ 10
தற்கும் அழிப்பதற்குமே வருவான். நானோ அவை என்று
முள்ள மெய்வாழ்வைப் பெறும் பொருட்டும், அதை முழு
நிறைவாகப் பெறும் பொருட்டும் வந்திருக்கிறேன்.

மெய்யான ஆயன் இயேசுவே

''மெய்யான ஆயன் நானே. மெய்யான ஆயன் ஆடு 11
களுக்காகத் தன் உயிரையும் கொடுப்பான். கூலிக்கு 12
மேய்ப்பவனோ ஓநாய் வரும்போது அதைக் கண்டு, ஆடு
களை விட்டுவிட்டு ஓடிப்போவான்; ஏனெனில், அவன்
உண்மையான ஆயனுமல்ல; ஆடுகளுக்குச் சொந்தக்
காரனும் அல்ல. ஓநாய் ஆடுகளை இழுத்துச் சென்று
அவற்றைச் சிதறடிக்கும். அவன் கூலிக்கு மேய்ப்பவனாய் 13
இருப்பதால் ஓடிப்போகிறான், ஆடுகளைப்பற்றி அவனுக்கு
அக்கறை இல்லை. நானோ மெய்யான ஆயன். விண்ணகத் 14
தந்தை என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான்
விண்ணகத் தந்தையை அறிந்திருக்கிறதுபோலவும், நான் 15
என்னுடைய ஆடுகளை அறிந்திருக்கிறேன். அவையும்
என்னை அறிந்திருக்கின்றன. என் ஆடுகளுக்காக என்

16 உயிரையும் கொடுப்பேன். எனக்குச் சொந்தமான வேறு
ஆடுகளும் உண்டு. அவை இந்தத் தொழுவத்தில் இல்லை.
அவற்றையும் நான் நடத்திக்கொண்டு வரவேண்டும்.
அவை என் குரலுக்குச் செவிசாய்க்கும். அப்பொழுது
எல்லாம் ஒரே மந்தையாய் இருக்கும்; அதற்கு ஆயனும்
17 ஒருவனே. நான் என் உயிரைக் கொடுக்கிறபடியால்
விண்ணகத் தந்தையார் என்னிடம் அன்புகொள்ளுகிறார்.
18 நான் அதை மீண்டும் பெற்றுக்கொள்ளும்படி கொடுக்
கிறேன். வேறொருவன் அதை என்னிடமிருந்து பறிப்ப
தில்லை; நானாகவே தான் அதைக் கொடுக்கிறேன். அதைக்
கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மீண்டும்
பெற்றுக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. இவ்
வாறு செய்யும்படி தான் என் தந்தையார் எனக்குக்
கட்டளையிட்டிருக்கிறார்'' என்றார்

19 இந்த வார்த்தைகள் காரணமாக யூதர்களிடையே
20 மறுபடியும் பிரிவினை ஏற்பட்டது. அவர்களுள் பலர்,
''இவனை ஒரு பேய் பிடித்திருக்கிறது. ஏதேதோ பிதற்று
கிறான்; இவன் சொல்வதை ஏன் கேட்டுக்கொண்டிருக்
21 கிறீர்கள்?'' என்றனர். வேறு சிலர், ''இந்த வார்த்தை
கள் பேய் பிடித்த ஒருவன் சொல்லக்கூடியவை அல்ல.
குருடருடைய கண்களுக்குப் பார்வை கொடுக்கப் பேயால்
இயலுமா?'' என்றனர்.

யூதர்கள் இயேசுவை ஏற்க மறுத்தல்

22 அப்பொழுது எருசலேமில் பீட அர்ப்பணிப்புப்
பண்டிகை நடைபெற்றுக்கொண்டிருந்தது; அது மாரிக்
23 காலம். இயேசு திருக்கோவிலில் சாலொமோன் மண்டபத்
24 தில் உலாவிக்கொண்டிருந்தார். யூதர்கள் அவரைச்
சூழ்ந்துகொண்டு, ''எவ்வளவு காலம் இப்படி எங்களை நீர்
காக்க வைப்பீர்? நீர் மேசியாவாயிருந்தால் அதை எங்க
ளுக்குத் தெளிவாகச் சொல்லிவிடும்'' என்றார்கள்.
25 அதற்கு இயேசு, ''நான் உங்களுக்குச் சொல்லியிருக்
கிறேன், ஆனால் நீங்கள் நம்பாமலிருக்கிறீர்கள். என்
தந்தையாரின் பெயரால் நான் செய்கிற செயல்களே
என்னைக் குறித்துச் சாட்சி கூறுகின்றன. என்றாலும்
26 நீங்கள் நம்பாமலிருக்கிறீர்கள். ஏனென்றால், நீங்கள்
27 என் மந்தையைச் சேராத ஆடுகள். என் ஆடுகள் என்
குரலுக்குச் செவிசாய்க்கும். நான் அவற்றை அறிந்திருக்
28 கிறேன், அவை என்னைப் பின்பற்றி வருகின்றன. நான்
அவற்றிற்கு என்றுமுள்ள மெய்வாழ்வைக் கொடுக்
கிறேன். அவை ஒருபோதும் அழியப்போவதில்லை; எவ

னும் அவற்றை என் கையிலிருந்து பறித்துக்கொள்ளப்
போவதுமில்லை. அவற்றை எனக்கு அருளிய என் தந்தை 29
யார் எல்லாரையும்விடப் பெரியவர்.* அவற்றை அவர்
கையிலிருந்து பறித்துக்கொள்ள எவராலும் இயலாது.
நானும் என் தந்தையாரும் ஒன்றே'' என்றார். 30

அப்பொழுது அவரைக் கல்லாலடிப்பதற்காக யூதர்கள் 31
மறுபடியும் கல்லை எடுத்தார்கள். இயேசு அதைக் கண்டு, 32
''விண்ணகத் தந்தையினுடைய பல நல்ல செயல்களை
உங்களுக்குச் செய்து காட்டியிருக்கிறேன். அவற்றுள்
எந்தச் செயலுக்காக என்னைக் கல்லாலடிக்கப் பார்க்கிறீர்
கள்?'' என்று கேட்டார். அதற்கு யூதர்கள், "நல்ல செயல் 33
எதற்காகவும் அன்று, தெய்வ நிந்தனைக்காகக் கல்லா
லடிக்கப்போகிறோம். நீ ஒரு மனிதனாயிருந்தும் உன்னைக்
கடவுளாக்கிக்கொள்ளுகிறாய்'' என்று சொன்னார்கள்.
இயேசு அவர்களை நோக்கி, ''உங்கள் நீதிச்சட்ட நூலில், 34
'நீங்கள் தேவர்கள் எனச் சொன்னேன்' என்று எழுதி
யிருக்கிறதல்லவா? கடவுளின் வார்த்தை யாருக்கு 35
உரைக்கப்பட்டதோ அவர்களை அவர் தேவர்கள் என்று
சொல்லி அழைத்திருக்கிறார். வேதம் கூறுவதைத்
தள்ளிவிட இயலாது. அப்படியானால், விண்ணகத் தந்தை 36
யார் தமக்கு உரிமையாக்கிக்கொண்டு உலகத்திற்கு
அனுப்பியிருக்கிற என்னைக் கடவுளின் மைந்தர் என்று
நான் சொன்னதால், 'தெய்வ நிந்தனை கூறுகிறாய்'
என்று நீங்கள் சொல்லலாமா? என் தந்தையாரின் 37
செயல்களை நான் செய்யவில்லையென்றால், நீங்கள் என்னை
நம்பவேண்டாம். ஆனால், அவற்றை நான் செய்கிறே 38
னென்றால், என்னை நீங்கள் நம்பாமற்போனாலும், அந்தச்
செயல்களையாவது நம்புங்கள்; அதன்மூலம் விண்ணகத்
தந்தையார் எனக்குள்ளும் நான் விண்ணகத் தந்தையாருக்
குள்ளும் இருக்கிறதைக் கண்டறிந்துகொள்வீர்கள்'' என்று
சொன்னார். அதனால் அவர்கள் அவரைப் பிடித்துக் 39
கொண்டுபோக மறுபடியும் முயன்றார்கள். அவரோ
அவர்கள் கையில் அகப்படாமல் விலகிவிட்டார்.

அவர் மறுபடியும் யோர்தான் ஆற்றைக் கடந்து, 40
யோவான் முதலில் திருமுழுக்குக் கொடுத்து வந்த இடத்
திற்குப் போய் அங்கே தங்கினார். பலர் அவர் இருந்த
இடத்திற்கு வந்தனர். அவர்கள், ''யோவான் அரிய 41
செயல் ஒன்றையும் செய்யவில்லை; ஆனால், யோவான்
இவரைப்பற்றிச் சொன்னதெல்லாம் உண்மையே'' என்று

* 'என் தந்தையார் எனக்கு அளித்தவை, எல்லாவற்றையும்விடப் பெரியவை' என்பதும் பாடம்.

42 பேசிக்கொண்டார்கள். அங்கே பலர் அவரிடம்
நம்பிக்கை கொண்டனர்.

இலாசருவின் மரணம்

11 பெத்தானியா என்னும் ஊரில் வாழ்ந்து வந்த
இலாசரு என்பவன் நோயால் வருந்திக்கொண்டிருந்
தான்; அவ்வூரிலேயே மரியாளும் அவளுடைய உடன்பிறந்
2 தாளாகிய மார்த்தாளும் வாழ்ந்து வந்தார்கள். ஆண்டவ
ருக்கு நறுமணத் தைலம் பூசி, தன் கூந்தலினால் அவ
ருடைய பாதங்களைத் துடைத்தவள் இந்த மரியாளே.
நோயால் வருந்திய இலாசரு இவளுடைய உடன்
3 பிறந்தான். அந்தச் சகோதரிகள் இயேசுவினிடம்
ஆளனுப்பி, ''ஆண்டவரே, உம்முடைய அன்பார்ந்த
நண்பன் நோயால் வருந்திக்கொண்டிருக்கிறான்'' என்று
4 தெரிவித்தார்கள். அவர் அதைக் கேட்டதும், ''இந்த
நோயினால் ஏற்படப்போகும் முடிவு அவனது மரணமன்று;
இது கடவுளின் மாட்சிமை விளங்குவதற்கும், இதன்
மூலமாக கடவுளின் மைந்தர் மாட்சிமை பெறுவதற்கும்
5 வந்திருக்கிறது'' என்று சொன்னார். இயேசு மார்த்தா
ளிடமும் அவளுடைய உடன்பிறந்தாளிடமும் இலாசருவி
6 னிடமும் அன்புகொண்டிருந்தார். அவன் நோயால்
வருந்திக்கொண்டிருக்கிறான் என்பதை அவர் கேள்விப்
பட்ட பிறகு அங்கேயே இரண்டு நாள் தங்கியபின்,
7 சீடரைப் பார்த்து, ''நாம் யூதேயாவுக்குத் திரும்பிப்
8 போவோம் வாருங்கள்'' என்று சொன்னார் அதற்குச்
சீடர்கள், ''ரபீ, இப்போதுதானே யூதர்கள் உம்மைக்
கல்லாலடிக்க முயன்றார்கள்? மறுபடியுமா நீர் அங்கே
9 போகிறீர்?'' என்று கேட்டார்கள். அதற்கு இயேசு,
''பகலொளி பன்னிரண்டு மணிநேரம் வீசுமன்றோ?
பகலில் நடக்கும் ஒருவன் உலகத்தின் ஒளியைக் கண்டு
10 நடப்பதால் இடறி விழமாட்டான்; இரவில் நடப்பவனே
இடறி விழுவான்; ஏனென்றால், அவனுள் அந்த ஒளி
11 இல்லை'' என்று சொன்னார். இப்படிச் சொன்னபின்
அவர் அவர்களிடம், ''நம்முடைய நண்பன் இலாசரு
தூங்குகிறான்; நான் அவனை எழுப்புவதற்காகப்
12 போகிறேன்'' என்றார். அதற்குச் சீடர்கள், ''ஆண்டவரே,
அவன் தூங்குவதாயிருந்தால், பிழைத்துக்கொள்ளு
13 வான்'' என்றார்கள். இயேசு அவன் இறந்ததைக் குறித்து
இவ்வாறு பேசியிருக்க, அவர்கள் அவன் தூங்கி இளைப்
பாறுகிறான் என்று அவர் சொன்னதாக நினைத்துக்
14 கொண்டார்கள் அப்பொழுது இயேசு, ''இலாசரு
இறந்துபோனான்'' என்று வெளிப்படையாகச் சொல்லி

விட்டு, ''நான் அங்கே இல்லாமற்போனதால், நீங்கள் 15
என்னிடம் நம்பிக்கைகொள்வதற்கு உங்களுக்கு ஒரு
வாய்ப்புக் கிடைக்கப்போகிறது. உங்களுக்குக் கிடைக்கப்
போகும் இந்த நன்மைக்காக நான் மகிழ்ச்சியடைகிறேன்.
வாருங்கள்; அவனிடம் போவோம்'' என்றார். திதிமு 16
என்று வழங்கப்பட்ட தோமா அதைக் கேட்டுத் தம்
உடன் சீடரைப் பார்த்து, ''அவரோடு சாகிறதற்கு
நாமும் போவோம் வாருங்கள்'' என்று சொன்னார்.

உயிர்த்தெழுதலும் மெய்வாழ்வும் இயேசுவே

இயேசு போய்க்கொண்டிருக்கையில், இலாசருவைக் 17
கல்லறையில் வைத்து நான்கு நாள் ஆயிற்று என்பது
அவருக்குத் தெரியவந்தது. பெத்தானியா எருசலேமுக் 18
குப் பக்கத்தில் ஏறத்தாழ இரண்டு மைல் தொலைவி
லிருந்தது. மார்த்தாள், மரியாள் என்பவர்களின் உடன் 19
பிறந்தான் இறந்துபோனதால் அவர்களுக்கு ஆறுதல்
சொல்ல யூதர் பலர் அங்கே வந்திருந்தனர். இயேசு வந்து 20
கொண்டிருக்கிறாரென்று கேள்விப்பட்டதும் மார்த்தாள்
அவரை எதிர்கொள்ளச் சென்றாள்; மரியாள் வீட்டிலேயே
தங்கிவிட்டாள். மார்த்தாள் இயேசுவினிடம் வந்து, 21
''ஆண்டவரே, நீர் இங்கே இருந்திருந்தால் என் தம்பி
செத்திருக்கமாட்டான். இப்போதுங்கூட நீர் கடவுளிடம் 22
கேட்கிறவை எவையோ அவற்றையெல்லாம் கடவுள்
உமக்கு அருளுவார் என்பது எனக்குத் தெரியும்'' என்று
சொன்னாள். இயேசு அவளிடம், ''உன் தம்பி மீண்டும் 23
உயிர்பெற்றெழுவான்'' என்றார். அதற்கு மார்த்தாள், 24
''கடைசி நாளில் நடைபெறும் உயிர்த்தெழுதலின்போது
அவனும் உயிர்பெற்றெழுவான் என்பது எனக்குத்
தெரியும்'' என்று சொன்னாள். இயேசு அவளிடம், 25
''உயிர்த்தெழுதலும் நானே; மெய்வாழ்வும் நானே; என்
னிடம் நம்பிக்கை கொண்டிருப்பவன் இறந்துவிட்டாலும்
மெய்வாழ்வை உடையவனாய் இருப்பான். உயிரோடிருக் 26
கும் ஒருவன் என்னிடம் நம்பிக்கை கொண்டால், அவன்
என்றைக்குமே இறக்கமாட்டான். இதை நம்புகிறாயா?''
என்று கேட்டார். அதற்கு அவள், ''நீரே மேசியா. 27
கடவுளின் மைந்தர், இவ்வுலகில் தோன்றுவாரென எதிர்
பார்க்கப்பட்டவர் என்பதை நம்புகிறேன்'' என்று
சொன்னாள்.

இயேசு கண்ணீர் சிந்துதல்

இப்படிச் சொன்னபின்பு அவள் தன் உடன் பிறந்தா 28
ளாகிய மரியாளிடம் போய் அவளைத் தனியாக அழைத்து,

''போதகர் வந்திருக்கிறார், உன்னை அழைக்கிறார்'' என்று
29 சொன்னாள். அவள் அதைக் கேட்டவுடனே புறப்பட்டு
30 அவரிடம் சென்றாள். இயேசு அதுவரையிலும் ஊருக்குள்
வரவில்லை; மார்த்தாள் அவரைக் கண்டுபேசின இடத்தி
31 லேயே இருந்தார். வீட்டில் மரியாளோடிருந்து அவளுக்கு
ஆறுதல் சொல்லிக்கொண்டிருந்த யூதர்கள் அவள்
புறப்பட்டு விரைவாக வெளியே போவதைக் கண்டு,
அவள் கல்லறைக்கு அழுவதற்காகப் போகிறாள் என்று
32 நினைத்து, அவள் பின்னே சென்றார்கள். மரியாள் இயேசு
இருந்த இடத்துக்கு வந்து, அவரைக் கண்டு, அவர்
காலடியில் விழுந்து, ''ஆண்டவரே, நீர் இங்கே இருந்
திருந்தால் என் தம்பி செத்திருக்கமாட்டான்'' என்றாள்.
33 அவள் அழுவதையும் அவளோடு வந்த யூதர் அழுவதை
யும் இயேசு கண்டபோது, உள்ளந் துடிதுடித்து, தமக்
34 குள்ளே பெரிதும் கலக்கமுற்று, ''அவனை எங்கே வைத்
திருக்கிறீர்கள்?'' என்று கேட்டார். அவர்கள், ''வந்து
35 பாரும், ஆண்டவரே'' என்றார்கள். அதைக் கேட்டு
36 இயேசு கண்ணீர் விட்டழுதார். யூதர்கள் அதைக் கண்டு,
''இவர் அவனை எவ்வளவு நேசித்து வந்திருக்கிறார்
37 பாருங்கள்'' என்று பேசிக்கொண்டார்கள். அவர்களுள்
சிலர், ''குருடனுடைய கண்களுக்குப் பார்வை அளித்த
இவர், இவன் சாகாமலிருக்கவும் செய்திருக்கக்கூடாதா?''
என்றனர்.

இலாசரு உயிர்பெறுதல்

38 மறுபடியும் இயேசுவின் உள்ளம் துடித்தது, அவர்
கல்லறையண்டை சென்றார். அது ஒரு குகை; அதை ஒரு
39 கல் மூடியிருந்தது. இயேசு, ''கல்லை எடுத்துவிடுங்கள்''
என்றார். இறந்துபோனவனுடைய உடன்பிறந்தாளாகிய
மார்த்தாள் அவரிடம், ''ஆண்டவரே, நான்கு நாளாகி
40 விட்டது, இப்போது நாறுமே'' என்றாள். இயேசு,
''உனக்கு நம்பிக்கை இருந்தால், நீ கடவுளின் மாட்சிமை
யைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லி
41 யிருக்கிறேனல்லவா?'' என்றார். அப்பொழுது கல்லை
எடுத்துவிட்டார்கள். இயேசு அண்ணாந்து பார்த்து,
''தந்தையே, நீர் எனக்குச் செவிசாய்த்ததற்காக உமக்கு
42 நன்றிசெலுத்துகிறேன். நீர் எப்போதும் எனக்குச் செவி
சாய்க்கிறீர் என்பது எனக்குத் தெரியும். என்றாலும்,
நீரே என்னை அனுப்பினீர் என்பதைச் சூழ நிற்கும் இம்
மக்கள் நம்பவேண்டுமென்று அவர்களுக்காகவே இதைச்
43 சொல்லுகிறேன்'' என்றார். இவ்வாறு சொன்னபின்

அவர் உரத்த குரலில், ''இலாசருவே, வெளியே வா''
என்று கூப்பிட்டார். இறந்தவன் வெளியே வந்தான். 44
அவனுடைய கால்கள்மேலும் கைகள்மேலும் பிரேதத்
துணிகள் சுற்றிக் கட்டப்பட்டிருந்தன. முகத்திலும் ஒரு
துணி சுற்றியிருந்தது. இயேசு அவர்களிடம், ''கட்டுகளை
அவிழ்த்து இவனைப் போகவிடுங்கள்'' என்று சொன்னார்.

இயேசுவைக் கொன்றுவிடச் சதித்திட்டம்

(மத். 26:1–5; மாற். 14:1,2; லூக். 22:1,2)

மரியாளைப் பார்க்க வந்திருந்த யூதருள் பலர் இயேசு 45
செய்தவற்றைக் கண்டபோது அவரிடம் நம்பிக்கை
கொண்டனர். சிலரோ புறப்பட்டுப் பரிசேயரிடம் போய் 46
இயேசு செய்தவற்றை அவர்களுக்குத் தெரிவித்தனர்.
அதன்பேரில் தலைமை ஆசாரியர்களும் பரிசேயரும் 47
தலைமைச் சங்கத்தைக் கூட்டி, ''இந்த மனிதன் பல
அற்புதச் செயல்களைச் செய்துகொண்டிருக்கிறான்; நாம்
சும்மா இருக்கிறோமே! இவனை இப்படியே விட்டு 48
விட்டால், எல்லாரும் இவனிடம் நம்பிக்கைகொள்வர்.
அப்பொழுது ரோமர்கள் வந்து நம்முடைய திருத்
தலத்தையும் இனத்தையும் கைப்பற்றி அழித்து விடு
வார்கள்'' என்று சொன்னார்கள். காய்பா என்பவர் 49
அவர்களுள் ஒருவர். அவர் அந்த ஆண்டில் தலைமை
ஆசாரியராய் இருந்தார். அவர் அவர்களைப் பார்த்து,
''உங்களுக்கு ஒன்றுமே தெரியவில்லை. ஓர் இனம் 50
முழுவதும் அழிந்துபோவதைவிட மக்கள் பொருட்டு ஒரே
ஒரு மனிதன் சாவது உங்களுக்கு நலம் என்பதைக்கூட
நீங்கள் சிந்திக்காமற்போனீர்கள்'' என்று சொன்னார்.
இதை அவர் தாமாக யோசித்துச் சொல்லவில்லை. அவர் 51
அந்த ஆண்டில் தலைமை ஆசாரியராய் இருந்ததால்,
''இயேசு யூத மக்களுக்காக மரணமடையப் போகிறார்.
அவர் அந்த மக்களுக்காக மட்டுமன்றி, சிதறலாக 52
வாழ்கிற கடவுளின் பிள்ளைகளை ஒன்றுசேர்த்து ஒரே
கூட்டமாக்க வேண்டுமென்று இவர்களுக்காகவும் மரண
மடையப்போகிறார்'' என்பதை இறைவாக்காக
உரைத்தார். ஆகவே, அவரைக் கொன்றுவிடவேண்டும் 53
என்பதே அன்றுமுதல் அவர்களது தீர்மானமாய்
இருந்தது.

ஆகையால் இயேசு அதன்பின் யூதரிடையே வெளிப் 54
படையாக நடமாடவில்லை; அவ்விடம் விட்டுப் புறப்பட்டு
அவர் வனந்தரத்துக்கு அருகிலுள்ள நாட்டில் எப்பிராயீம்

என்னும் ஊருக்குப் போய், அங்கே தம்முடைய சீடருடன்
தங்கியிருந்தார்.

55 யூதரின் பஸ்காப் பண்டிகையும் நெருங்கி வந்தது.
பண்டிகைக்குமுன் தம்மை முறைப்படி சுத்தி செய்து
கொள்வதற்காகப் பலர் நாட்டுப்புறங்களிலிருந்து
56 எருசலேமுக்குச் சென்றனர். அங்கே அவர்கள் இயேசு
வைத் தேடினார்கள். அவர்கள் திருக்கோவிலில் நிற்கையில்
ஒருவரையொருவர் பார்த்து, ''உங்களுக்கு எப்படித்
தோன்றுகிறது? அவர் பண்டிகைக்கு வரமாட்டார்
போலத் தோன்றுகிறதே'' என்று பேசிக்கொண்டார்கள்.
57 தலைமை ஆசாரியர்களும் பரிசேயரும் அவரைப் பிடிக்க
நினைத்து, அவர் இருக்கும் இடம் யாருக்காவது தெரிந்
திருந்தால் அதைத் தங்களுக்குத் தெரிவிக்க வேண்டு
மென்று கட்டளையிட்டிருந்தார்கள்.

பெத்தானியாவில் இயேசுவுக்கு நறுமணத் தைலம் பூசுதல்

(மத். 26:6–13; மாற். 14:3–9)

12 பஸ்காப் பண்டிகைக்கு ஆறு நாளுக்குமுன்பு
இயேசு பெத்தானியா என்னும் ஊருக்குப்
போனார். அது அவர் உயிரோடெழுப்பின இலாசருவின்
2 ஊர். அங்கே அவருக்கு விருந்து செய்தார்கள்;
மார்த்தாள் பணிவிடை செய்தாள். அவரோடு பந்தியில்
3 அமர்ந்தவர்களுள் இலாசருவும் ஒருவன். அப்பொழுது
மரியாள் கலப்பற்றதும் விலையுயர்ந்ததுமான நளதம்
என்னும் தைலத்தில் ஓர் இராத்தல் கொண்டுவந்து,
இயேசுவின் பாதங்களில் பூசி, தன் கூந்தலினால்
4 அவருடைய பாதங்களைத் துடைத்தாள். அந்தத்
தைலத்தின் நறுமணம் வீடெங்கும் கமழ்ந்தது.
அவருடைய சீடருள் ஒருவனும் அவரைக் காட்டிக்
கொடுக்க இருந்தவனுமான யூதா இஸ்காரியோத்து,
5 ''இந்தத் தைலத்தை முந்நூறு திநாரியத்துக்கு விற்று,
அப்பணத்தை ஏழைகளுக்குக் கொடுத்திருக்கலாமே''
6 என்றான். அவன் இப்படிச் சொன்னது ஏழைகளுக்காகக்
கவலைப்பட்டதனாலன்று; அவன் ஒரு திருடன். பணப்
பெட்டி அவனிடம் இருந்ததால், அதில் போடப்படுவதி
லிருந்து அவன் எடுத்துக்கொள்வதுண்டு, அதனாலேதான்
7 இப்படிச் சொன்னான். அப்பொழுது இயேசு, ''இவளைத்
தடைசெய்யாதே, அப்படியே விட்டுவிடு; என் அடக்க
8 நாளை முன்னிட்டு இதைச் செய்யட்டும். ஏழைகள் உங்க
ளிடையே எப்போதும் இருக்கிறார்கள். ஆனால் நானோ
உங்களிடையே எப்போதும் இருக்கப்போவதில்லை''
என்றார்.

இலாசருவைக் கொன்றுவிடச் சதித்திட்டம்

அவர் அங்கே இருந்ததை அறிந்த யூதர்கள் ஒரு பெருங் 9
கூட்டமாய் வந்தார்கள்; அவர்கள் இயேசுவை முன்னிட்டு
மட்டும் வரவில்லை; அவர் இறந்தோரிடமிருந்து உயிரோ
டெழுப்பின இலாசருவைப் பார்ப்பதற்காகவும்
வந்தார்கள். அதைக் கண்ட தலைமை ஆசாரியர்கள் 10
இலாசருவையும் கொன்றுவிடுவதென்று தீர்மானித்தார்
கள். ஏனெனில், அவன் காரணமாகப் பல யூதர்கள் 11
இயேசுவினிடம் போய் அவரிடம் நம்பிக்கைகொள்ள
லானார்கள்.

இயேசு எருசலேமுக்குள் அரசகோலத்துடன் செல்லுதல்

(மத். 21:1–11; மாற். 11:1–11; லூக். 19:28–40)

மறுநாள், பண்டிகைக்கு வந்த திரளான மக்கள் 12
இயேசு எருசலேமுக்கு வருகிறார் என்பதைக் கேள்விப்
பட்டார்கள். அவர்கள் குருத்தோலைகளை எடுத்துக் 13
கொண்டு, அவரை எதிர்கொள்ளப் புறப்பட்டுப்போய்,

''ஓசன்னா,* ஆண்டவரின் திருப்பெயரால் வருகிறவர்
கடவுளின் ஆசி பெறுவாராக!
இஸ்ரவேலின் அரசர்
கடவுளின் ஆசி பெறுவாராக!''

என்று ஆர்ப்பரித்தார்கள்.

இயேசு அங்கே ஒரு கழுதைக்குட்டியைக் கண்டு அதன் 14
மேல் ஏறிச் சென்றார்.

''சீயோன் மகளே, அஞ்சவேண்டாம்; 15
இதோ! உன் அரசர் வருகிறார்;
அவர் கழுதைக் குட்டியின்மேல்
ஏறி வருகிறார்''

என்று வேதத்தில் எழுதியுள்ளதற்கிசைய இப்படி
நடந்தது. இவற்றின் கருத்தை அவருடைய சீடர் அந் 16
நேரத்தில் புரிந்துகொள்ளவில்லை. இயேசு மாட்சிமைக்கு
உயர்த்தப்பட்ட பிறகுதான், இவை அவரைக் குறித்து
எழுதப்பட்டவை என்பதும், இவற்றையே அவருக்குச்
செய்தார்கள் என்பதும் அவர்கள் நினைவிற்கு வந்தன.
அவர் இலாசருவைக் கல்லறையை விட்டு வெளியே 17
வரும்படி கூப்பிட்டு, அவனை இறந்தோரிடமிருந்து உயிரோ

* ''காத்தருளும்'' என்று பொருள்படும் இச்சொல் வழக்கத்தில் ஒரு வாழ்த்துச் சொல்லாக மாறிற்று.

டெழுப்பினபோது அவரோடிருந்த மக்கள் அங்கே
18 நடந்ததைக் குறித்துச் சாட்சி கூறி வந்தார்கள். அவர்
அந்த அரியசெயலைச் செய்தார் என்று மக்கள் கேள்விப்
பட்டிருந்ததால், அவர்கள் அவரை எதிர்கொள்ளப்
19 போனார்கள். அதைக் கண்ட பரிசேயர், ''பாருங்கள்,
இதோ, உலகமே அவன் பின்னே போய்விட்டது,
நம்மால் ஒன்றும் செய்ய இயலவில்லையே'' என்று
தங்களிடையே பேசிக்கொண்டனர்.

கிரேக்கர் சிலர் இயேசுவைக் காண விரும்புதல்

20 பண்டிகையின்போது தொழுவதற்காக வந்தவர்களுள்
21 சிலர் கிரேக்கர். அவர்கள் கலிலேயா நாட்டுப் பெத்
சாயிதா ஊரானாகிய பிலிப்புவினிடம் வந்து, ''ஐயா,
இயேசுவைக் கண்டு பேச விரும்புகிறோம்'' என்று சொன்
22 னார்கள். அவர் அந்திரேயாவினிடம் போய் அதைச்
சொன்னார். பிறகு அந்திரேயாவும் பிலிப்புவும் இயேசுவி
23 னிடம் வந்து அதைத் தெரிவித்தார்கள். இயேசு அவர்
களுக்கு மறுமொழியாக, "மனுமைந்தர் மாட்சிமை அடை
24 யும் நேரம் வந்துவிட்டது. மிகவும் உறுதியாக உங்க
ளுக்குச் சொல்லுகிறேன்: கோதுமை மணி மண்ணில்
விழுந்து மடியாவிட்டால், அது தனி மணியாகவே இருக்
கும். அது மடிந்தாலோ மிகுந்த பலனைக் கொடுக்கும்.
25 தன் உயிரை நேசிப்பவன் அதை இழந்துவிடுவான்; இந்த
உலகத்தில் இருக்கும்போது தன் உயிரை வெறுப்பவனோ
அதை என்றுமுள்ள மெய்வாழ்வுக்கென்று காத்துக்
26 கொள்ளுவான். ஒருவன் எனக்குப் பணிவிடை செய்ய
வேண்டுமென்று இருப்பானானால், அவன் என்னைப் பின்
பற்றி வரட்டும்; அப்பொழுது நான் எங்கே இருக்கிறேனோ
அங்கே எனக்குப் பணிவிடை செய்கிறவனும் இருப்பான்.
ஒருவன் எனக்குப் பணிவிடை செய்வானானால் அவனுக்கு
விண்ணகத் தந்தையார் மேன்மை அருளுவார்.

இயேசு தம் மரணத்தைப்பற்றிக் கூறுதல்

27 ''இப்பொழுது என் ஆன்மா கலங்குகிறது. நான் என்ன
சொல்வேன்? தந்தையே, இந்த நேரத்திலிருந்து என்னைக்
காத்தருளும் என்பேனோ? இல்லை, . இதற்காகத்தானே
நான் இந்த நேரத்திற்குள்ளாக வந்திருக்கிறேன்.
28 தந்தையே, உம்முடைய பெயரின் மாட்சிமை விளங்கும்
படி செய்யும்'' என்றார். அப்பொழுது, "மாட்சிமை விளங்
கும்படி செய்தேன், மீண்டும் விளங்கும்படி செய்வேன்''
29 என்று வானத்தினின்று ஒரு வாக்குப் பிறந்தது. அங்கே

நின்று அதைக் கேட்ட மக்கள், ''இடியொலி முழங்
கிற்று'' என்றார்கள். ஆனால் சிலர், ''தெய்வதூதன்
ஒருவன் அவரோடு பேசினான்'' என்றனர். இயேசுவோ, 30
''இந்த வாக்கு என் பொருட்டன்று, உங்கள் பொருட்டே
பிறந்தது. இப்போதே இந்த உலகத்தின்மீது தீர்ப்புக் 31
கூறப்படுகிறது, இப்போதே இந்த உலகத்திற்கடுத்த
வற்றின் தலைவன் புறம்பே தள்ளப்படப்போகிறான். நான் 32
பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும்போது, எல்லா
ரையும் என்னிடம் ஈர்த்துக்கொள்ளுவேன்'' என்றார்.
தாம் இன்னவிதமாக மரணம் அடையப்போகிறார் என்ப 33
தைக் குறித்துக்காட்ட இப்படிச் சொன்னார். அதைக் 34
கேட்ட மக்கள் அவரிடம், ''மேசியா என்றென்றைக்கும்
இருக்கிறார் என்று திருச்சட்ட நூலில் கூறியுள்ளதை
நாங்கள் கேட்டிருக்கிறோம்; அப்படியிருக்க, மனுமைந்தர்
உயர்த்தப்பட வேண்டும் என்று நீர் எப்படிச் சொல்லு
வீர்? இந்த மனுமைந்தர் யார்?'' என்று கேட்டார்கள்.
அப்பொழுது இயேசு அவர்களிடம், ''இன்னும் சிறிது 35
காலம் ஒளி உங்களோடு இருக்கும். இருளில் நீங்கள்
அகப்பட்டுக்கொள்ளாதபடி, ஒளி உங்களோடு இருக்கும்
போது நடந்துகொண்டேயிருங்கள்; இருளில் நடந்து
செல்பவன் எவனுக்கும் தான் செல்வது எங்கே என்பது
தெரியாது. நீங்கள் ஒளியின் மக்களாகும்படி ஒளி 36
உங்களோடு இருக்கையில் ஒளியில் நம்பிக்கை
வையுங்கள்'' என்று சொன்னார்.

யூதர்களின் நம்பிக்கையின்மை

இப்படிச் சொன்னபின் இயேசு அவர்களை விட்டகன்று
மறைந்துகொண்டார். தெய்வ ஆற்றலுக்கு அடையாள 37
மாக அவர் இத்தனை செயல்களை அவர்கள் கண் காணச்
செய்திருந்தும், அவர்கள் அவரிடம் நம்பிக்கைகொள்ள
வில்லை. இறைவாக்குரைப்பவராகிய ஏசாயா, 38

''ஆண்டவரே, எங்கள் மூலமாகக் கேள்விப்பட்டதை
எவன் நம்பினான்?
ஆண்டவருடைய புயம் வெளிப்படுத்தப்பட்டது
எவனுக்கு விளங்கிற்று?''

என்று சொன்ன சொல் இவ்வாறு நிறைவேறிற்று.

மேலும் இறைவாக்குரைப்பவராகிய ஏசாயா, 39
''அவர்கள் தங்கள் கண்களால் காணாமலும், 40
உள்ளத்தால் உணராமலும்,
நான் அவர்களைக் குணமாக்கும்படி அவர்கள்
மனமாற்றமடையாமலும் இருப்பதற்காக,

அவர்கள் கண்களை அவர் குருடாக்கி,
அவர்கள் உள்ளத்தை மந்தமாக்கினார்'

என்று சொல்லியிருக்கிறாரே. அவர்களால் நம்பிக்கை
41 கொள்ள இயலாமற்போயிற்று. ஏசாயா அவருடைய
மாட்சிமையைக் கண்டிருந்ததால் இவ்வாறு சொன்னார்;
மேசியாவைக் குறித்தே இப்படிப் பேசினார்.

42 அப்படிப்பட்ட நிலையிலும், அதிகாரிகளிலுங்கூடப் பலர்
அவரிடம் நம்பிக்கை கொள்ளலாயினர். ஆனால், அவர்கள்
பரிசேயருக்கு அஞ்சி அதை வெளிப்படையாக ஒப்புக்
கொள்ளாதிருந்தார்கள்; அப்படி ஒப்புக்கொண்டால்
அவர்களுடைய சபையிலிருந்து விலக்கப்படுவார்கள்.
43 இவ்வாறு அவர்கள் கடவுளால் ஏற்றுக்கொள்ளப்
படுவதைவிட மனிதரால் ஏற்றுக்கொள்ளப்படுவதையே
மிகுதியாக விரும்பினார்கள்.

இயேசு சொன்ன வார்த்தையே தீர்ப்பளிக்கும்

44 பிறகு இயேசு உரத்த குரலில், "என்னிடம்
நம்பிக்கை கொள்பவன் என்னிடமன்று, என்னை அனுப்
45 பினவரிடமே நம்பிக்கை கொள்கிறான். என்னைக் காண்ப
46 வனும் என்னை அனுப்பினவரையே காண்கிறான். என்
னிடம் நம்பிக்கை கொள்பவன் எவனும் இருளிலிருந்து
என்றும் நீங்கியிருக்க வேண்டுமென்றே நான் ஒளியாய்
47 இவ்வுலகத்திற்கு வந்திருக்கிறேன். ஒருவன் என் வார்த்
தைகளைக் கேட்டு அவற்றைக் கடைப்பிடித்து நடவாதிருந்
தால்,, அவனுக்குத் தீர்ப்பளிப்பவன் நானல்ல;
ஏனென்றால், நான் உலகத்துக்குக் குற்றத் தீர்ப்பு அளிப்ப
தற்காக வரவில்லை; உலகத்தை மீட்பதற்காகவே
48 வந்தேன். என்னைப் புறக்கணித்து, என் வார்த்தைகளை
ஏற்றுக்கொள்ளாதவன் குற்றவாளி என்று தீர்ப்புச்
செய்ய ஒன்று இருக்கிறது; நான் உரைத்த வாக்கே
அவன் குற்றவாளி என்று கடைசி நாளில் தீர்ப்புச் செய்
49 யும். ஏனெனில், அதை நானாகவே உரைக்கவில்லை.
என்னை அனுப்பின தந்தையார் நான் எதைச் சொல்ல
வேண்டும், எதைப் போதிக்கவேண்டும் என்பதை எனக்குக்
50 கட்டளையிட்டிருக்கிறார். அவரது கட்டளையே என்று
முள்ள மெய்வாழ்வு என்பது எனக்குத் தெரியும். ஆகை
யால், நான் சொல்லுகிறவை எவையென்றால்,
தந்தையார் என்னைச் சொல்லும்படி சொன்னவையே"
என்று கூறினார்.

இயேசு தம் சீடரின் பாதங்களைக் கழுவுதல்

13 பஸ்காப் பண்டிகைக்குச் சற்றுமுன்பு இயேசு, தாம் இவ்வுலகத்தை விட்டுத் தந்தையாரிடம் செல்வதற்கான வேளை வந்துவிட்டதென்பதைத் தெரிந்துகொண்டார். இந்த உலகத்திலிருந்த தம்முடையவர்களிடம் எப்போதுமே அன்புகொண்டிருந்த அவர், அவர்களிடம் தாம்கொண்டிருந்த அன்பின் பூரணத் தன்மையை அப்போது அவர்களுக்குக் காட்டினார்

இயேசுவைக் காட்டிக்கொடுக்கும்படி இஸ்காரியோத் 2
தூர் சீமோனுடைய மகனாகிய யூதாசின் உள்ளத்தைப்
பிசாசு ஏற்கெனவே ஏவிவிட்டிருந்தான். அவர்கள் சாப்
பிட்டுக்கொண்டிருந்தபோது, இயேசு, தந்தையார் எல்லா 3
வற்றையும் தம் கையில் ஒப்புவித்திருப்பதையும், தாம்
கடவுளிடமிருந்து வந்து கடவுளிடமே திரும்பிச் செல்வ
தையும் அறிந்திருந்ததால், பந்தியை விட்டெழுந்து, 4
மேலாடையைக் கழற்றி வைத்துவிட்டு, ஒரு துண்டை
எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டு, ஒரு கலத்தில் 5
தண்ணீரை ஊற்றி, சீடருடைய பாதங்களைக் கழுவி,
தாம் இடுப்பில் கட்டியிருந்த துண்டினால் துடைத்துக்
கொண்டு வந்தார். அவர் சீமோன் பேதுருவினிடம் 6
வந்தபோது அவர் அவரிடம், ''ஆண்டவரே, என் பாதங்
களை நீர் கழுவலாமா?'' என்று கேட்டார். அதற்கு 7
இயேசு, ''நான் செய்வது இன்னதென்பது உனக்கு இப்
போது தெரியாது, இனிமேல் புரிந்துகொள்ளுவாய்''
என்று சொன்னார், பேதுரு அவரிடம், ''நீர் ஒருபோதும் 8
என் பாதங்களைக் கழுவலாகாது'' என்றார். அதற்கு
இயேசு, ''நான் உன்னைக் கழுவாவிட்டால், நீ என்
னுடையவற்றில் பங்குகொள்ளுகிறவனாய் இருக்க இய
லாது'' என்று சொன்னார். அப்பொழுது சீமோன் 9
பேதுரு, ''ஆண்டவரே, அப்படியானால் என் பாதங்களை
மட்டுமன்றி, என் கைகளையும் என் தலையையுங்கூடக்
கழுவ வேண்டும்'' என்று கேட்டுக்கொண்டார். இயேசு 10
அவரிடம், ''குளித்தவன் தன் பாதங்களை மட்டும் கழு
வினால் போதும், மற்றப்படி அவன் முழுதும் தூய்மையாய்
இருக்கிறான். நீங்களும் தூய்மையாய் இருக்கிறீர்கள்;
ஆனால் எல்லாரும் தூய்மையாயில்லை'' என்றார். | தம்மைக் 11
காட்டிக்கொடுப்பவன் யாரென்பது அவருக்குத் தெரிந்
திருந்ததால் அவர்கள் எல்லாரும் தூய்மையாயில்லை
என்று அவர் சொன்னார்.

12 அவர்களுடைய பாதங்களைக் கழுவின பின்பு அவர் தம்
முடைய மேலாடையை அணிந்துகொண்டு, மீண்டும் பந்தி
யில் அமர்ந்து, அவர்களைப் பார்த்து, ''நான் உங்களுக்குச்
செய்தது இன்னதென்பதைப் புரிந்துகொண்டீர்களா?
13 நீங்கள் என்னைப் போதகரென்றும் ஆண்டவரென்றும்
சொல்லுகிறீர்கள்; நீங்கள் சொல்வது சரியே. நான்
14 போதகர்தான், ஆண்டவர்தான். ஆண்டவரும் போத
கருமாகிய நானே உங்கள் பாதங்களைக் கழுவியிருப்பதால்,
நீங்களும் ஒருவருடைய பாதங்களை ஒருவர் கழுவக்
15 கடமைப்பட்டிருக்கிறீர்கள். நான் உங்களுக்குச் செய்
ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரி
16 காட்டினேன். மிகவும் உறுதியாக உங்களுக்குச் சொல்லு
கிறேன்: வேலைக்காரன் தன் தலைவனைவிடப் பெரியவ
னல்ல; தூதுவனாக அனுப்பப்படுகிறவன் தன்னை அனுப்
17 பினவரைவிடப் பெரியவனல்ல. இவை உங்களுக்குத்
தெரிந்திருப்பதால், இவற்றை நடைமுறையிலும் காட்டு
வீர்களானால் நீங்கள் நற்பேறு பெற்றவர்களாயிருப்பீர்
18 கள். உங்கள் எல்லாரையும்பற்றி நான் பேசவில்லை. நான்
தேர்ந்துகொண்டவர்கள் இன்னாரென்பது எனக்குத்
தெரியும். ஆனாலும், 'என்னுடைய அப்பத்தை உண்
டவன் எனக்கு இரண்டகமாகத் தன் குதிகாலைத் தூக்கி
னான்' என்கிற வேதவாக்கியம் நிறைவேறியாக
19 வேண்டுமே! அது நடக்கும்போது, நான் யாரோ, அவரே
நான் என்று நீங்கள் நம்பும்பொருட்டு, இப்போதே, அது
நடப்பதற்கு முன்னதாகவே, அதை உங்களுக்குச் சொல்லு
20 கிறேன். நான் அனுப்புகிறவனை ஏற்றுக்கொள்ளுகிறவன்
என்னை ஏற்றுக்கொள்ளுகிறான், என்னை ஏற்றுக்கொள்ளு
கிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான்
என்று மிகவும் உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்''
என்று சொன்னார்.

உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான்

(மத். 26:20–25; மாற். 14:17–21; லூக். 22:21–23)

இப்படிச் சொன்னபின் இயேசு உள்ளம் கலங்கியவராய்,
21 ''மிகவும் திட்டமாக உங்களுக்குச் சொல்லுகிறேன்:
உங்களுள் ஒருவனே என்னைக் காட்டிக்கொடுக்கப்
போகிறான்'' என்று வெளிப்படையாகக் கூறினார். அவர்
22 யாரைக் குறித்துச் சொன்னார் என்பது சீடருக்குத் திட்ட
மாகத் தெரியாததால், அவர்கள் ஒருவரையொருவர்
பார்த்தார்கள் இயேசுவின் சீடருள் அவருக்கு அன்பார்ந்
23 தவராயிருந்த ஒருவர் அவருடைய மார்பருகில்

சாய்ந்துகொண்டிருந்தார். அவர் யாரைக் குறித்துச் 24
சொல்லுகிறார் என்று கேட்கும்படி சீமோன் பேதுரு
அவருக்குச் சைகை காட்டினார். அந்தச் சீடர் தாம் 25
இருந்தபடியே பின்புறமாக இயேசுவின் மார்பில் சாய்ந்து
கொண்டு அவரிடம், ''அவன் யார், ஆண்டவரே?''
என்று கேட்டார். அதற்கு இயேசு, ''நான் யாருக்கு 26
இந்த அப்பத் துண்டைத் தோய்த்துக் கொடுக்கிறேனோ
அவன்தான்'' என்று சொல்லிவிட்டு, அந்த அப்பத்
துண்டைத் தோய்த்தெடுத்து, இஸ்காரியோத்தூர் சீமோ
னுடைய மகன் யூதாசுக்குக் கொடுத்தார். அவன் 27
அப்பத் துண்டை வாங்கினான்; சாத்தானும் அவனுக்குள்
புகுந்தான். அப்பொழுது இயேசு அவனிடம், ''செய்
கிறதை விரைவில் செய்'' என்று சொன்னார். எதற்காக 28
அவனிடம் இப்படிச் சொன்னார் என்பதைப் பந்தியி
லிருந்தவர்களுள் ஒருவரும் புரிந்துகொள்ளவில்லை. பணப் 29
பெட்டி யூதாசின் பொறுப்பில் இருந்ததால், இயேசு
அவனிடம், பண்டிகைக்குத் தேவையானதை வாங்கவோ,
ஏழைகளுக்கு ஏதாவது கொடுக்கவோ சொன்னதாகச்
சிலர் நினைத்துக்கொண்டனர். அப்பத் துண்டை 30
வாங்கிக்கொண்டு அவன் வெளியே போனான். அது
இராக்காலம்.

புதிய நெறி

அவன் வெளியே போனபின் இயேசு, ''இப்பொழுதே 31
மனுமைந்தர் மாட்சிமை பெற்றுவிட்டார்; கடவுளும்
அவரால் மாட்சிமை பெற்றுவிட்டார். இவ்வாறு கடவுள் 32
அவரால் மாட்சிமை பெற்றிருப்பதால், கடவுளும் அவ
ருக்குத் தம் முன்னிலையில் மாட்சிமை அளிப்பார், விரைவில்
அவருக்கு மாட்சிமை அளிப்பார். சீடப் பிள்ளைகளே, 33
நான் இன்னும் சிறிது காலந்தான் உங்களோடிருப்பேன்.
நீங்கள் என்னைத் தேடுவீர்கள்; ஆனால், அந்த யூதருக்கு
நான் சொன்னதையே, அதாவது நான் செல்லுகிற
இடத்துக்கு உங்களால் வர இயலாது என்பதையே உங்
களுக்கும் சொல்லுகிறேன். நான் உங்களுக்குப் புதிய 34
தொரு நெறியை அருளுகிறேன்; நீங்கள் ஒருவரிட
மொருவர் அன்புடையவர்களாயிருங்கள். நான் உங்க
ளிடம் அன்புகொண்டிருந்தபடியே நீங்களும் ஒருவரிட
மொருவர் அன்புடையவர்களாயிருங்கள். நீங்கள் ஒருவ 35
ரிடமொருவர் அன்புடையவர்களாயிருப்பதைக்கொண்டு
நீங்கள் என்னுடைய சீடர் என்பதை எல்லாரும் அறிந்து
கொள்ளுவார்கள்'' என்றார்.

பேதுருவின் மறுதலிப்பைப்பற்றிய முன்னறிவிப்பு
(மத். 26:31–35; மாற். 14:27–31; லூக். 22:31–34)

36 சீமோன் பேதுரு அவரைப் பார்த்து, ''ஆண்டவரே,
நீர் எங்கே செல்கிறீர்?'' என்று கேட்டார் அதற்கு
இயேசு, ''நான் செல்கிற இடத்துக்கு என்னைப் பின்பற்றி
வர இப்போது உன்னால் இயலாது; பிறகுதான் வருவாய்''
37 என்றார். அப்பொழுது பேதுரு, ''ஆண்டவரே, ஏன்
இப்போது என்னால் பின்தொடர்ந்து வர இயலாது? நான்
உமக்காக என் உயிரையும் கொடுப்பேனே'' என்று
38 சொன்னார். அதற்கு இயேசு, ''நீ எனக்காக உன்
உயிரையும் கொடுப்பாயோ? மிகவும் திட்டமாக
உனக்குச் சொல்லுகிறேன்: சேவல் கூவுமுன்னே, என்னைத்
தெரியாதென நீ மூன்று முறை மறுதலிக்கப்போகிறாய்''
என்றார்.

விண்ணகத் தந்தையிடம் செல்லும் வழி இயேசுவே

14 ''உங்கள் மனத்தில் கலக்கம் வேண்டாம். *கடவு
ளிடம் நம்பிக்கை உள்ளவர்களாயிருங்கள், என்
2 னிடமும் நம்பிக்கை உள்ளவர்களாயிருங்கள். என்
தந்தையாரின் வீட்டில் ஏராளமான அறைகள் உண்டு.
அப்படி இல்லாதிருந்தால், உங்களுக்கென்று ஓர் இடம்
ஆயத்தம் செய்வதற்காகச் செல்லுகிறேன் என்று உங்க
3 ளிடம் சொல்லியிருப்பேனா? நான் சென்று உங்களுக்
கென்று ஓர் இடத்தை ஆயத்தம் செய்தபின் திரும்பி
வந்து, நான் இருக்கும் இடத்திலேயே நீங்களும்
இருக்கும்படி உங்களை என்னிடம் அழைத்துக்
4 கொள்ளுவேன். நான் செல்லும் இடத்துக்கு வழி உங்க
5 ளுக்குத் தெரியும்'' என்றார். தோமா அவரிடம்,
''ஆண்டவரே, நீர் செல்லும் இடமே எங்களுக்குத்
தெரியாதிருக்கும்போது, அதற்கு வழியை நாங்கள்
எப்படி அறிந்திருக்க முடியும்?'' என்று கேட்டார்.
6 அதற்கு இயேசு, ''வழியும் சத்தியமும் மெய்வாழ்வும்
நானே; என்னை வழியாகக்கொண்டாலன்றி, எவராலும்
7 விண்ணகத் தந்தையாரிடம் வந்தடைய இயலாது. நீங்கள்
என்னை இன்னாரென்று அறிந்தவர்களாய் இருப்பீர்க
ளானால், என் தந்தையாரையும் அறிந்தவர்களாய்
இருப்பீர்கள்; இப்போதிருந்தே நீங்கள் அவரை அறிந்த
வர்களாய் இருக்கிறீர்கள்; அவரைக் கண்டவர்களாயும்
8 இருக்கிறீர்கள்'' என்று சொன்னார். அப்பொழுது

* 'கடவுளிடம் நம்பிக்கை உள்ளவர்களாயிருக்கிறீர்களே' என்று
மொழிபெயர்ப்பதுமுண்டு.

பிலிப்பு அவரிடம், ''ஆண்டவரே, தந்தையாரை எங்
களுக்குக் காட்டியருளும், அதுவே எங்களுக்குப் போதும்''
என்று சொல்ல, | இயேசு, “பிலிப்புவே, இவ்வளவு காலம் 9
நான் உங்களோடிருந்தும் நீ என்னை அறிந்துகொள்ள
வில்லையா? என்னைக் கண்டவன் தந்தையாரைக் கண்ட
வனுயிருக்கிறான். அப்படியிருக்க, ‘தந்தையாரை எங்
களுக்குக் காட்டியருளும்’ என்று நீ கேட்பதேன்? நான் 10
தந்தையாருக்குள்ளும் தந்தையார் எனக்குள்ளும் இருப்
பதை நீ நம்பவில்லையா? நான் உங்களுக்குக் கூறும்
வார்த்தைகளை நானாகக் கூறவில்லை. தந்தையார் தாமே
எனக்குள் இருந்துகொண்டு தமமுடைய செயல்களைச்
செய்து வருகிறார். நான் தந்தையாருக்குள் இருக்கிறேன், 11
தந்தையார் எனக்குள் இருக்கிறார் என்று நான் சொல்
வதை நம்புங்கள். அல்லாவிட்டால் இந்தச் செயல்களின்
பொருட்டாவது அதை நம்புங்கள். மிகவும் திட்டமாக 12
உங்களுக்குச் சொல்லுகிறேன்: என்னிடம் எவன்
நம்பிக்கை கொள்கிறானோ அவனும் நான் செய்யும்
செயல்களைச் செய்வான்; இவற்றைவிடப் பெரியவற்றை
யும் செய்வான்; ஏனெனில், நான் தந்தையாரிடம்
செல்கிறேன். நீங்கள் என் பெயரால் கேட்பது எதுவா 13
யினும், தந்தையாரின் மாட்சிமை மைந்தரிடம் வெளிப்
படவேண்டும் என்பதற்காக அதை நான் செய்வேன்.
என் பெயரால் நீங்கள் என்னிடம் எதைக் கேட்டுக் 14
கொண்டாலும் அதை நான் செய்வேன்.

தூய ஆவியானவரைப்பற்றிய வாக்குறுதி

''நீங்கள் என்னிடம் அன்புடையவர்களாயிருந்தால் 15
நான் அருளும் நெறிகளைக் கைக்கொள்வீர்கள். நானும் 16
தந்தையாரை வேண்டிக்கொள்வேன்; அப்பொழுது அவர்
இன்னொரு சகாயரை* உங்களோடு என்றைக்கும் இருப்ப
தற்காக உங்களுக்குத் தந்தருளுவார். அவரே சத்திய 17
ராகிய ஆவியானவர். அவரை உலகத்தால் ஏற்றுக்
கொள்ள இயலாது. ஏனெனில், அது அவரைக் காணா
மலும் அறியாமலும் இருக்கிறது. நீங்களோ அவரை
அறிந்திருக்கிறீர்கள்; ஏனெனில், அவர் உங்களோடு தங்கி
யிருக்கிறார், உங்களுக்குள்ளும் இருக்கிறார். நான் உங்களைத் 18
திக்கற்றவர்களாக விட்டுமாட்டேன்; உங்களிடம் மீண்டும்
வருவேன். இன்னும் சிறிது காலந்தான் இருக்கிறது; 19
பிறகு உலகம் என்னைக் காணாது, நீங்களோ என்னைக்

* கிரேக்க பதத்திற்கு, ஆலோசனை கூறுகிறவர், தேற்றுகிறவர், பரிந்துபேசுகிறவர் என்கிற பொருள்களும் உண்டு.

காண்பீர்கள்; ஏனென்றால், நான் மெய்வாழ்வு உள்ள
வனாயிருக்கிறேன், நீங்களும் அந்த வாழ்வை உடையவர்
20 களாயிருப்பீர்கள். நான் என் தந்தையாருக்குள்ளும்
நீங்கள் எனக்குள்ளும் நான் உங்களுக்குள்ளும் இருப்பதை
21 நீங்கள் அந்த நாளில் அறிந்துகொள்வீர்கள். நான்
அருளும் நெறிகளை ஏற்றுக்கொண்டு அவற்றைக் கைக்
கொள்கிறவனே என்னிடம் அன்புகொள்கிறவன். என்
னிடம் அன்புகொள்கிறவன்மீது என் தந்தையார் அன்பு
கொள்வார். நானும் அவனிடம் அன்புகொண்டு
அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன்'' என்றார்.
22 யூதாஸ் என்பவன்—இவன் இஸ்காரியோத்தூர் யூதா
சல்ல—அவரிடம், ''ஆண்டவரே, உம்மை நீர் உலகத்
துக்கு வெளிப்படுத்தாமல் எங்களுக்கு மட்டும் வெளிப்
படுத்துவதாகச் சொல்லுகிறீரே, இதன் பொருள்
23 என்ன?'' என்று கேட்டான். அதற்கு இயேசு, ''ஒருவன்
என்னிடம் அன்புகொண்டிருந்தால் அவன் என் வார்த்தை
யைக் கடைப்பிடித்து நடப்பான்; என் தந்தையார்
அவனிடம் அன்புகொள்வார்; நாங்கள் அவனிடம் வந்து
24 அவனோடு வாசம் செய்வோம். என்னிடம் அன்புகொள்
ளாதவன் என் வார்த்தையைக் கடைப்பிடித்து நடக்க
மாட்டான். நீங்கள் கேட்கும் வார்த்தை என்னுடைய
தன்று, என்னை அனுப்பின தந்தையாருடையதே.

25 ''நான் உங்களோடு இருக்கும் இந்தக் காலத்தில்
26 இவற்றை உங்களுக்குச் சொல்லிவிட்டேன். தந்தையார்
என் பெயரால் அனுப்பப்போகிற தூய ஆவியாகிய சகாயர்
எல்லாவற்றையும் உங்களுக்குப் போதிப்பார்; அவரே
நான் உங்களுக்குச் சொன்ன யாவற்றையும் உங்களுக்கு
27 நினைவூட்டுவார். சமாதானத்தை உங்களுக்கு அளித்து
விட்டுச் செல்லுகிறேன். என்னுடைய சமாதானத்தையே
நான் உங்களுக்கு அளிக்கிறேன். உலகம் அளிப்பதுபோல
நான் இதை உங்களுக்கு அளிக்கவில்லை. உங்கள் மனத்தில்
கலக்கம் வேண்டாம், நீங்கள் மருளவும் வேண்டாம்.
28 'நான் போகிறேன், ஆனால், உங்களிடம் திரும்பி
வருவேன்' என்று நான் உங்களுக்குச் சொன்னதைக்
கேட்டீர்களே. நீங்கள் என்னிடம் அன்புகொண்டிருந்
தால், நான் தந்தையாரிடம் செல்கிறேன் என்றதற்காக
மகிழ்ச்சியடைவீர்கள். .ஏனெனில், தந்தையார் என்னை
29 விடப் பெரியவர். இப்பொழுது, இவை நடக்குமுன்,
இதை உங்களுக்குச் சொல்லிவைக்கிறேன். இவை
நடக்கும்போது நீங்கள் நம்பவேண்டும் என்பதற்காக
30 இவ்வாறு சொல்லுகிறேன். நான் இன்னும் மிகுதியாக

உங்களோடு பேசப்போவதில்லை. ஏனெனில், இந்த
உலகத்திற்கடுத்தவற்றின் தலைவன் வருகிறான். அவனுக்கு
என்னிடம் எந்த உரிமையும் இல்லை. ஆனால், நான் 31
தந்தையாரிடம் அன்புகொண்டிருக்கிறேன் என்பதையும்,
தந்தையார் எனக்குக் கட்டளை இட்டபடியே நான்
செய்கிறேன் என்பதையும் உலகம் அறிய வேண்டும் என்
பதற்காக இப்படி நடக்கும். எழுந்திருங்கள், புறப்பட்டுப்
போவோம்'' என்றார்.

மெய்யான திராட்சைச் செடி இயேசுவே

15 ''நானே மெய்யான திராட்சைச் செடி: என்
தந்தையார் தோட்டக்காரர். என்னிடமுள்ள கனி 2
கொடாத கொடி ஒவ்வொன்றையும் அவர் தறித்துவிடு
வார், கனி கொடுக்கும் கொடிகள் மிகுதியாகக் கனி
கொடுக்கும்படி அவற்றை அவர் கழித்துத் துப்புரவு
செய்வார். நான் உங்களோடு பேசிவந்திருக்கும் 3
வார்த்தை காரணமாக நீங்கள் இப்போதே துப்புரவாகி
விட்டீர்கள். நான் உங்களுக்குள் நிலைத்து இருப்பதுபோல 4
நீங்களும் எனக்குள் நிலைத்திருங்கள். திராட்சைக் கொடி
யால் தானாகக் கனி கொடுக்க இயலாது; அது செடியில்
நிலைத்திருந்தாலன்றிக் கனி கொடாது. அவ்வாறே,
நீங்களும் எனக்குள் நிலைத்திருந்தாலன்றி உங்களால் கனி
கொடுக்க இயலாது. நான் திராட்சைச் செடி, நீங்கள் 5
அதன் கொடிகள். ஒருவன் எனக்குள்ளும் நான் அவனுக்
குள்ளும் நிலைத்திருந்தால் அவன் மிகுதியாகக் கனி
கொடுப்பான். என்னுடன் இருந்தாலன்றி உங்களால்
ஒன்றும் செய்ய இயலாது. ஒருவன் எனக்குள் நிலைத்து 6
இராவிட்டால் அவன் வெளியே எறியப்பட்ட கொடியைப்
போல இருக்கிறான்; அவன் உலர்ந்துபோவான்; அப்படிப்
பட்ட கொடிகளை ஒன்றுசேர்த்து நெருப்பில் போட்டு
எரித்துவிடுவார்கள். நீங்கள் எனக்குள்ளும் என் 7
வார்த்தை உங்களுக்குள்ளும் நிலைத்து இருந்தால், நீங்கள்
விரும்பிக்கேட்பது எதுவாயினும் அது அப்படியே நடக்கும்.
நீங்கள் மிகுதியாகக் கனிகொடுத்து என் சீடராய் இருப் 8
பதன் மூலம் என் தந்தையாரின் மாட்சிமையை விளங்கச்
செய்வீர்கள். தந்தையார் என்னிடம் அன்புகொண் 9
டிருப்பதுபோல நானும் உங்களிடம் அன்புகொண்டிருக்
கிறேன். என் அன்பிலேயே நிலைத்து இருங்கள். என் 10
தந்தையார் தந்த நெறிகளை நான் கடைப்பிடித்து
வருகிறேன், அவருடைய அன்பிலேயே நிலைத்திருக்கிறேன்;

அவ்வாறே நீங்களும் நான் தந்த நெறிகளைக் கடைப்
பிடித்தால் என் அன்பில் நிலைத்திருப்பீர்கள்.

11 ''என் மகிழ்ச்சியே உங்களுக்குள் இருக்கவேண்டு
மென்றும், உங்கள் மகிழ்ச்சி நிறைவானதாக இருக்க
வேண்டுமென்றும் இவற்றை உங்களுக்குச் சொன்னேன்.
12 நான் உங்களிடம் அன்புகொண்டிருப்பதுபோல நீங்களும்
ஒருவரிடமொருவர் அன்புகொள்ளுங்கள்; இதுவே நான்
13 தரும் நெறி. தன் நண்பர்களுக்காகத் தன் உயிரைக்
கொடுக்கிறவனுடைய அன்பைவிட மேலான அன்பு
14 எவரிடமும் இருக்க முடியாது. நான் உங்களுக்குக்
கட்டளையிடுவதை நீங்கள் செய்தால், நீங்கள் எனக்கு
15 நண்பர்கள். இனி நான் உங்களை வேலைக்காரர் என்று
சொல்லமாட்டேன். ஏனெனில், தன் தலைவன் செய்வது
இன்னதென்பது ஒரு வேலைக்காரனுக்குத் தெரியாது.
உங்களை நண்பர்கள் என்றேன். ஏனென்றால், உங்களுக்கு
நான் என் தந்தையாரிடமிருந்து கேட்ட யாவற்றையும்
16 அறிவித்துவிட்டேன். நீங்கள் என்னைத் தேர்ந்துகொள்ள
வில்லை; நானே உங்களைத் தேர்ந்துகொண்டேன். நீங்கள்
போய்க் கனி கொடுக்க வேண்டுமென்றும், நிலைத்திருக்கும்
கனியைக் கொடுக்க வேண்டுமென்றும் உங்களை நியமித்
திருக்கிறேன். நீங்கள் விண்ணகத் தந்தையை என்
பெயரால் வேண்டிக்கொள்வது எதுவோ அதை அவர்
17 உங்களுக்கு அருளும்படி இப்படிச் செய்தேன். நீங்கள்
ஒருவரிடமொருவர் அன்புகொள்ள வேண்டுமென்றே
இவற்றை நான் உங்களுக்கு வலியுறுத்திக் கூறுகிறேன்.

உலகத்தாரின் பகைமை

18 ''உலகம் உங்களைப் பகைக்கிறதென்பது உண்மை
தான். ஆனால், அது உங்களைப் பகைக்கு முன்பே என்னைப்
19 பகைத்தது என்பதை அறிந்துகொள்ளுங்கள். நீங்கள்
உலகத்திற்குச் சொந்தமானவர்களாய் இருந்திருந்தால்,
உலகம் தனக்குச் சொந்தமான உங்களை நேசித்திருக்கும்.
ஆனால், நீங்கள் உலகத்திற்குச் சொந்தமல்லாத மக்கள்.
நான் உங்களை உலகத்தினின்று தேர்ந்தெடுத்துவிட்டேன்.
20 ஆகையால் உலகம் உங்களைப் பகைக்கிறது. | 'வேலைக்
காரன் தன் தலைவனைவிடப் பெரியவனல்ல' என்று
நான் உங்களுக்குச் சொன்னதை நினைவில் வைத்துக்
கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்புறுத்தினார்க
ளென்றால், உங்களையும் துன்புறுத்துவார்கள்;
அவர்கள் என் வார்த்தையைக் கடைப்பிடித்து
நடந்திருந்தால், உங்களுடைய வார்த்தையையும்

கடைப்பிடித்து நடப்பார்கள். என் பெயரின் 21
பொருட்டே அவர்கள் இப்படியெல்லாம் உங்களை நடத்து
வார்கள். ஏனெனில், என்னை அனுப்பினவரை அவர்கள்
அறிந்துகொள்ளவில்லை. நான் வந்து அவர்களுக்குப் 22
போதிக்கவில்லையென்றால், அவர்கள்மேல் பாவம் சுமந்
திராது. இப்பொழுதோ தங்கள் பாவத்திற்குச் சாக்குப்
போக்குச் சொல்ல அவர்களுக்கு வழியே இல்லை. என்னைப் 23
பகைக்கிறவன் என் தந்தையாரையும் பகைக்கிறான்.
வேறெவரும் செய்யாத செயல்களை நான் அவர்களிடையே 24
செய்யவில்லையென்றால், அவர்கள்மேல் பாவம் சுமந்
திராது. இப்பொழுதோ அவர்கள் அவற்றைப் பார்த்
திருக்கிறார்கள்; என்னையும் என் தந்தையாரையும்
பகைக்கவும் செய்கிறார்கள். 'காரணமில்லாமல் என்னைப் 25
பகைத்தார்கள்' என்று அவர்களுடைய நீதிச்சட்ட நூலில்
எழுதியுள்ள வாக்கியம் இவ்வாறு நிறைவேறிற்று.

"தந்தையாரிடமிருந்து நான் அனுப்பப்போகிற சகாயர் 26
உங்களிடம் வருவார்; அவரே தந்தையாரிடமிருந்து
வெளிப்பட்டு வரும் சத்தியராகிய ஆவியானவர்; அவர்
வந்து எனக்காகச் சாட்சி கூறுவார். நீங்களும் சாட்சி 27
கூறுவீர்கள்; ஏனெனில், நீங்கள் தொடக்கத்திலிருந்தே
என்னோடு இருந்து வருகிறீர்கள்.

16 "நீங்கள் நம்பிக்கையினின்று வழுவி விடாதிருக்கும்
படி நான் இந்தக் காரியங்களை உங்களுக்குச்
சொன்னேன். உங்களைத் தொழுகைக்கூடத்திலிருந்து 2
விலக்கிவிடுவார்கள். மேலும், உங்களைக் கொல்லுகிற
எவனும் தான் கடவுளுக்குத் திருத்தொண்டு புரிவதாக
எண்ணிக்கொள்ளும் காலமும் வருகிறது. அவர்கள் 3
தந்தையாரையும் என்னையும் அறிந்துகொள்ளாமலிருப்ப
தால் இப்படியெல்லாம் செய்வார்கள். இவை நடை
பெறும் காலம் வரும்போது, நான் உங்களுக்குச்
சொன்னதை நீங்கள் நினைவுபடுத்திக்கொள்வதற்காகவே
இவற்றை உங்களுக்குச் சொன்னேன்.

தூய ஆவியானவரின் செயல்

"தொடக்கத்திலேயே நான் இந்தக் காரியங்களை
உங்களுக்குச் சொல்லவில்லை. ஏனெனில், நான் உங்க
ளோடு கூடவே இருந்தேன். இப்போதோ நான் என்னை 5
அனுப்பினவரிடம் செல்கிறேன். உங்களுள் எவனும்
என்னை 'எங்கே செல்கிறீர்?' என்று கேட்கிறதாகத்

6 தெரியவில்லை. நான் இந்தக் காரியங்களை உங்களுக்குச்
சொன்னதால் உங்கள் உள்ளம் வருத்தத்தினால் நிறைந்
7 திருக்கிறது. எனினும், நான் உங்களுக்குச் சொல்வதே
உண்மை. நான் போவதால் உங்களுக்கு நன்மையே
உண்டாகும். நான் போகாதிருந்தால், சகாயர் உங்களிடம்
வரமாட்டார். நான் போவேனானால், அவரை உங்களிடம்
8 அனுப்புவேன். அவர் வந்து பாவம், நீதி, தெய்வத்
தீர்ப்பு ஆகியவை சம்பந்தமாக உலகத்தாரிடம் காணப்
படும் தவறுகளை எடுத்துக்காட்டி அவற்றை அவர்களுக்கு
9 உணர்த்துவார். அவர்கள் என்னிடம் நம்பிக்கை
கொள்ளாததால் அவர்களிடமுள்ள பாவத்தையும்,
10 இனிமேல் நான் உங்கள்முன் இராமல் தந்தையாரிடம்
போகிறதால், கடவுளுக்கேற்கும் நீதி எத்தகைய
11 தென்பதையும், இந்த உலகத்திற்கடுத்தவற்றின் தலைவ
னுக்குக் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டிருப்பதால், தெய்வத்
தீர்ப்பு எத்தகையதென்பதையும் எடுத்துக்காட்டி அவர்
12 களுக்கு உணர்த்துவார். நான் உங்களுக்குச் சொல்ல
வேண்டிய காரியங்கள் இன்னும் பல உண்டு; ஆனால்,
13 இப்போது அவற்றை உங்களால் தாங்க இயலாது. சத்திய
ராகிய ஆவியானவர் வரும்போது முழுச் சத்தியத்தையும்
நீங்கள் அறியும்படி உங்களை வழிநடத்துவார். அவர்
தாமாக எதையும் சொல்லாமல் தாம் கேட்டறிவது
எதுவோ அதையே உங்களுக்குச் சொல்லி, வரப்போகிற
14 காரியங்களையும் அறிவிப்பார். எனக்கே உரிமையான
வற்றிலிருந்து எடுத்து அவர் உங்களுக்கு அறிவிப்பதன்
15 மூலம் என் மாட்சிமை விளங்கும்படி செய்வார். தந்தையா
ருடையவை யாவும் என்னுடையவையே. அதனாலே
தான், 'எனக்கே உரிமையானவற்றிலிருந்து எடுத்து அவர்
உங்களுக்கு அறிவிப்பார்' என்றேன்.

துயரம் மகிழ்ச்சியாக மாறும்

16 ''சிறிது காலந்தான்; பிறகு என்னைப் பார்க்கமாட்டீர்
கள். பின்னும் சிறிது காலம்; அப்போது என்னைக்
17 காண்பீர்கள்'' என்றார். அவருடைய சீடருள் சிலர்,
''சிறிது காலந்தான்; பிறகுஎன்னைப் பார்க்கமாட்டீர்கள்.
பின்னும் சிறிது காலம்; அப்போது என்னைக் காண்பீர்கள்'
என்று சொல்லுகிறாரே. மேலும், 'நான் தந்தையாரிடம்
செல்கிறபடியால்' என்கிறாரே. அவர் சொல்லுவதுதான்
என்ன?'' என்று ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு,
18 ''அவர் சொல்லும் இந்தச் சிறிது காலம் என்பது எது?
அவர் என்ன சொல்லுகிறார் என்பதே நமக்குத் தெரிய

வில்லையே'' என்றார்கள். அவர்கள் தம்மிடம் அதைப் 19
பற்றிக் கேட்க விரும்புவதை இயேசு அறிந்து, அவர்களைப்
பார்த்து, ''சிறிது காலந்தான்; பிறகு என்னைப் பார்க்க
மாட்டீர்கள். இன்னும் சிறிது காலம்; அப்போது என்னைக்
காண்பீர்கள் என்று நான் சொன்னதைப்பற்றித்தானே
நீங்கள் ஒருவரையொருவர் கேட்டுக்கொண்டிருக்
கிறீர்கள்? மிகவும் திட்டமாக உங்களுக்குச் சொல்லு 20
கிறேன்: நீங்கள் அழுவீர்கள், புலம்புவீர்கள்; உலகமோ
மகிழ்ச்சியோடிருக்கும். நீங்கள் துயரப்படுவீர்கள்; ஆனால்
உங்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறும். குழந்தையைப் 21
பெறும்போது தாயானவள் தனக்குப் பேறுகாலம் வந்து
விட்டபடியால் துயரப்படுகிறாள்; ஆனால் குழந்தையைப்
பெற்றெடுத்தபின், ஒரு குழந்தை உலகத்தில் தோன்றி
னது என்கிற மகிழ்ச்சியினால் தன் வேதனையை மறந்துவிடு
கிறாள். அதுபோலவே, நீங்கள் இப்போது துயரப்படு 22
கிறீர்கள். ஆனால் மறுபடியும் நான் உங்களைக் காண்பேன்.
அப்போது உங்கள் உள்ளம் மகிழ்ச்சியடையும்; உங்கள்
மகிழ்ச்சியை ஒருவனாலும் உங்களைவிட்டு நீக்கிவிட
இயலாது. அந்த நாளில் நீங்கள் என்னிடம் கேள்வி 23
கேட்டுக்கொண்டிருக்கமாட்டீர்கள். மிகவும் உறுதியாக
உங்களுக்குச் சொல்லுகிறேன்: நீங்கள் தந்தையாரிடம்
என் பெயரால் கேட்பது எதுவோ அதை அவர் உங்க
ளுக்குத் தந்தருளுவார். இதுவரையிலும் நீங்கள் என் 24
பெயரால் எதையும் கேட்டதில்லை. உங்கள் மகிழ்ச்சி
நிறைவுபெறவேண்டும். ஆகையால் கேளுங்கள், அப்
பொழுது நீங்கள் பெற்றுக்கொள்ளுவீர்கள்.

நான் உலகத்தை வென்றுவிட்டேன்

''நான் உங்களுக்குச் சொன்னவற்றை உபமானங்கள் 25
மூலம் சொன்னேன். ஒரு காலம் வரும்; அப்போது
நான் உங்களோடு உபமானங்கள் மூலம் பேசாமல்,
தந்தையாரைப்பற்றித் தெளிவாக உங்களுக்கு அறிவிப்
பேன். அந்த நாளில் என் பெயரால் நீங்கள் வேண்டுதல் 26
செய்வீர்கள். உங்களுக்காகத் தந்தையாரிடம் அப்போது
மன்றாடுவேன் என்று நான் சொல்லாதிருப்பது, தந்தையார் 27
தாமே உங்களை நேசிக்கிறார் என்பதாலேதான். அவர்
உங்களை நேசிப்பதற்குக் காரணம், நீங்கள் என்னை நேசித்து,
நான் கடவுளிடமிருந்து வந்தேனென்பதை நம்புவதே
யாகும். நான் தந்தையாரின் முன்னிலையினின்று புறப் 28
பட்டு உலகத்துக்கு வந்தேன்; இப்போது உலகத்தைவிட்டு
தந்தையாரிடம் செல்கிறேன்'' என்று சொன்னார்.

29 அப்பொழுது அவருடைய சீடர்கள், ''இதோ, இப்போது
தான் தெளிவாகச் சொல்லுகிறீர் உபமானமாக ஒன்றும்
30 சொல்லவில்லை உமக்கு எல்லாம் தெரியும்;
யாரும் உம்மைக் கேள்வி கேட்கத் தேவையில்லை
என்பது இப்போது எங்களுக்குத் தெரிகிறது. இதனால்
நீர் கடவுளிடமிருந்து வந்தீரென்பதை நம்புகிறோம்''
31 என்று சொன்னார்கள். அதற்கு இயேசு, ''இப்போது
32 நம்புகிறீர்களா? சரி, இதைக் கேளுங்கள்: | நீங்கள்
சிதறடிக்கப்படுவீர்கள். ஒவ்வொருவனும் தன் தன்
வீட்டுக்குச் செல்ல நேரிடும்; என்னைத் தனியே விட்டு
விடுவீர்கள். அந்தக் காலம் வரும்; ஏன், இப்போதே
வந்திருக்கிறது. ஆனால் நான் தனிமையாயில்லை.
33 தந்தையார் என்னுடன் இருக்கிறார். | நீங்கள் எனக்குள்
நிலைத்திருந்து சமாதானத்தைப் பெறும் பொருட்டு
இவற்றை உங்களுக்குச் சொன்னேன். உலகத்தில்
உங்களுக்குத் துன்பம் இருக்கும்; ஆனாலும் மனச்சோர்
வடையாதீர்கள்; நான் உலகத்தை வென்று
விட்டேன்'' என்று சொன்னார்.

இயேசுவின் மன்றாட்டு

17 இப்படிப் பேசினபின் இயேசு வானத்தை அண்
ணாந்து பார்த்து, ''தந்தையே, நேரம் வந்து
விட்டது: உம்முடைய மைந்தரால் உமது மாட்சிமை
விளங்கும்படி நீர் அவரது மாட்சிமையை விளங்கச்
2 செய்தருளும். ஏனெனில், நீர் உம்முடைய மைந்தரிடம்
ஒப்புவித்த அனைவருக்கும் அவர் என்றுமுள்ள மெய்வாழ்
வைக் கொடுக்கும் பொருட்டு மனுமக்கள் அனைவர்
மேலும் நீர் அவருக்கு அதிகாரம் அளித்திருக்கிறீர்.
3 உண்மையான ஒரே கடவுளாகிய உம்மையும் நீர் அனுப்
பினவராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிந்துகொள்வதே
4 என்றுமுள்ள மெய்வாழ்வு. நான் செய்யும்படி நீர்
எனக்குத் தந்த வேலையை நான் செய்து முடித்ததன்
மூலம் உலகத்தில் உமது மாட்சிமையை விளங்கச் செய்
5 கிறேன். தந்தையே, உலகம் உண்டானதற்குமுன் உமது
முன்னிலையில் எனக்கு இருந்த அதே மாட்சிமையை
அருளி, இப்போதும் உமது முன்னிலையில் எனக்கு
மாட்சிமை அளித்தருளும்.

6 ''உலகத்தினின்று தேர்ந்தெடுத்து நீர் என்னிடம்
ஒப்புவித்த மனிதருக்கு நான் உமது திருப்பெயரை
வெளிப்படுத்தினேன். உம்முடையவர்களாயிருந்த அவர்

களை நீர் என்னிடம் ஒப்புவித்தீர். அவர்கள் உமது
வார்த்தையைக் கடைப்பிடித்து நடக்கிறார்கள். நீர் 7
எனக்குத் தந்தவையெல்லாம் உம்மிடமிருந்தே
வருகின்றன என்பதை அவர்கள் இப்போது அறிந்திருக்
கிறார்கள், நீர் எனக்கு அருளிய வாசகத்தை நான் அவர் 8
களுக்கு அருளினேன். அவர்கள் அதை ஏற்றுக்கொண்
டார்கள். நான் உமது முன்னிலையினின்று வந்தேன்
என்பதை அவர்கள் தெரிந்துகொண்டார்கள் என்பது
திண்ணம், நீர் என்னை அனுப்பினீர் என்பதையும்
நம்பினார்கள். நான் அவர்களுக்காக மன்றாடுகிறேன். 9
உலகத்திற்காக அன்று, நீர் என்னிடம் ஒப்படைத்தவர்
களுக்காக மன்றாடுகிறேன்; ஏனெனில், அவர்கள் 10
உம்முடையவர்கள்—என்னுடையவை யாவும் உம்மு
டையவை, உம்முடையவை என்னுடையவை—அவர்
களால் நான் மாட்சிமை அடைந்திருக்கிறேன். இனி 11
நான் உலகத்தில் இருக்கப்போவதில்லை, அவர்களோ
உலகத்தில் இருப்பார்கள். நான் உம்மிடம் வருகிறேன்.
தூயரான தந்தையே, நாம் ஒன்றாயிருப்பதுபோல அவர்
களும் இருக்கும்படி நீர் எனக்கு ஒப்புவித்த உமது
திருப்பெயரின் பாதுகாப்பிலேயே அவர்களையும் வைத்துப்
பாதுகாத்தருளும். நான் அவர்களோடு இருக்கையில் 12
நீர் எனக்கு ஒப்புவித்த உமது திருப்பெயரின் பாதுகாப்பில்
அவர்களை வைத்துக் காத்துவந்தேன். அவர்களுள் ஒருவ
னும் அழியவில்லை. வேதாகமம் நிறைவேறும்படி
'அழிவின் மகன்' மட்டும் அழிந்தான். இப்பொழுது
நான் உம்மிடம் வருகிறேன். என் மகிழ்ச்சி அவர்கள் 13
உள்ளத்தில் நிறைவாயிருக்கும்படி நான் உலகத்தில்
இருக்கையிலேயே இவ்வாறு சொல்லுகிறேன். உமது 14
வார்த்தையை நான் அவர்களிடம் ஒப்படைத்தேன்.
நான் உலகத்துக்குரியவனாய் இல்லாததுபோல அவர்
களும் உலகத்துக்குரியவர்களாய் இல்லை; அதனால் உலகம்
அவர்களைப் பகைத்தது. நீர் அவர்களை உலகத்தினின்று 15
பிரித்துவிடவேண்டுமென்று நான் கேட்கவில்லை; அவர்
களைத் தீயோனிடமிருந்து* காத்தருள வேண்டுமென்று
தான் கேட்கிறேன். நான் உலகத்துக்குரியவனாய் இல்லா 16
ததுபோல அவர்களும் உலகத்துக்குரியவர்களாய்
இல்லை. சத்தியத்தைக்கொண்டு அவர்களை உமக்கு 17
உரியவர்களாக்கியருளும். உமது வார்த்தையே சத்தியம்.
நீர் என்னை உலகத்திற்குள் அனுப்பினதுபோல நானும் 18
அவர்களை உலகத்திற்குள் அனுப்பினேன். அவர்களும் 19

* 'தீமையினின்று' என்றும் மொழிபெயர்க்கலாம்.

மெய்யாகவே உமக்கு உரியவர்களாயிருக்கும்படி, அவர்
களுக்காக நான் என்னையே உமக்கு உரியவனாக்குகிறேன்.
20 "நான் அவர்களுக்காக மட்டுமன்றி, அவர்களது
வார்த்தையின் மூலம் என்னிடம் நம்பிக்கை கொள்ளு
21 கிறவர்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறேன். நீர்
என்னை அனுப்பினீர் என்பதை உலகம் நம்புவதற்காக,
அவர்கள் எல்லாரும் ஒன்றாயிருக்கவேண்டுமென்று வேண்
டிக்கொள்ளுகிறேன். தந்தையே, நீர் எனக்குள்ளும்
நான் உமக்குள்ளும் இருக்கிறதுபோல அவர்களும்
நமக்குள் இருக்கவேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளு
22 கிறேன். நாம் ஒன்றாயிருக்கிறதுபோல,' அவர்களும்
ஒன்றாயிருக்கும்படியும், நான் அவர்களுக்குள்ளும் நீர்
எனக்குள்ளும் இருப்பதால் அவர்கள் ஒன்றாவதில் முழு
வளர்ச்சி அடையும்படியும், நீர் எனக்கு அளித்த மாட்சி
23 மையை நான் அவர்களுக்கு அளித்தேன். நீர் என்னை
அனுப்பினீர் என்பதையும், நீர் என்னிடம் அன்பு
கொண்டதுபோல அவர்களிடமும் அன்புகொண்டீர்
என்பதையும் உலகம் அறிந்துகொள்வதற்காக இப்படிச்
24 செய்தேன். தந்தையே, உலகத் தோற்றத்திற்குமுன்
நீர் என்னிடம் அன்புகொண்டு எனக்கு மாட்சிமை அளித்
தீர். நீர் என்னிடம் ஒப்படைத்தவர்கள் என் மாட்சிமை
யைக் காணும்படி, நான் எங்கே இருக்கிறேனோ அங்கே
அவர்களும் இருக்கவேண்டுமென்று விரும்புகிறேன்.
25 நீதியுள்ள தந்தையே, உலகம் உம்மை அறிந்துகொள்ள
வில்லை; நானோ உம்மை அறிவேன்; நீர் என்னை அனுப்பி
னீர் என்பதை இவர்களும் அறிந்துகொண்டார்கள்.
26 நீர் என்னிடம் கொண்டிருந்த அன்பு இவர்களுக்குள்
இருக்கவும், நானும் இவர்களுக்குள் இருக்கவும், உம்மை
இவர்கள் அறிந்துகொள்ளும்படி செய்தேன்; இன்னமும்
அறிந்துகொள்ளும்படி செய்வேன்" என்று மன்றாடினார்.

இயேசு பிடிபடுதல்

(மத். 26:47–56; மாற். 14:43–50; லூக். 22:457-53)

18 இப்படிப்பேசினபின் இயேசு தம்முடைய சீடரோடு
வெளியே வந்து, கெதரோன் என்னும் நீரோடை
யைக் கடந்து சென்றார். அங்கே ஒரு தோட்டம் இருந்
தது. அவரும் அவருடைய சீடரும் அதனுள் சென்றார்
2 கள். இயேசுவும் அவருடைய சீடரும் அடிக்கடி அங்கே
போய்க் கூடுவதுண்டு. அவரைக் காட்டிக்கொடுத்த
3 யூதாசுக்கும் அந்த இடம் தெரியும். எனவே, யூதாஸ்

படைவீரரையும், தலைமை ஆசாரியர்களும் பரிசேயரும்
அனுப்பின காவலரையும் கூட்டிக்கொண்டு, கைப்
பந்தங்கள், விளக்குகள், படைக்கலன்கள் ஆகியவற்றோடு
அவ்விடத்திற்கு வந்தான். இயேசு தமக்கு நேரிடப் 4
போகும் யாவற்றையும் அறிந்தவராய் வெளியே வந்து
அவர்களைப் பார்த்து, ''யாரைத் தேடுகிறீர்கள்?'' என்று
கேட்டார். அவர்கள் அவரிடம், ''நாசரேத்தூர் 5
இயேசுவை'' என்று சொன்னார்கள். இயேசு, ''நான்தான்
அவர்'' என்றார். அவரைக் காட்டிக்கொடுத்த யூதாசும்
அவர்களோடு நின்றுகொண்டிருந்தான். ''நான்தான் 6
அவர்'' என்று இயேசு அவர்களிடம் சொன்னதும்,
அவர்கள் பின்வாங்கித் தரையிலே விழுந்தார்கள்.
''யாரைத் தேடுகிறீர்கள்?'' என்று அவர் அவர்களை 7
மீண்டும் கேட்டார். அவர்கள், ''நாசரேத்தூர்
இயேசுவை'' என்று சொன்னார்கள். இயேசு, ''நான்தான் 8
அவர் என்று உங்களுக்குச் சொன்னேனே; நீங்கள்
என்னைத்தான் தேடி வந்தீர்கள் என்றால் இவர்களைப்
போகவிடுங்கள்'' என்றார். ''நீர் என்னிடம் ஒப்புவித்த 9
வர்களுள் ஒருவனையும் நான் இழந்துவிடவில்லை'' என்று
தாம் அளித்த வாக்கை நிறைவேற்ற இப்படிச் சொன்
னார். சீமோன் பேதுருவினிடம் ஒரு வாள் இருந்தது. 10
அவர் அதை உருவித் தலைமை ஆசாரியருடைய வேலைக்
காரனைத் தாக்கி, அவனுடைய வலக் காதைத் துண்டித்
தார். அந்த வேலைக்காரன் பெயர் மல்குஸ் என்பது.
அப்பொழுது இயேசு பேதுருவைப் பார்த்து, ''உன் 11
வாளை உறையில் போடு. இது தந்தையார் எனக்குக்
கொடுத்துள்ள துன்பக் கலம். இதை நான் பருகாமல்
இருப்பேனா?'' என்று சொன்னார்.

அன்னாவின் முன்னிலையில்

(மத். 26:57,58; மாற். 14:53,54; லூக். 22:54)

படைவீரரும் படைத்தலைவனும் யூதருடைய காவலரும் 12
இயேசுவைப் பிடித்துக் கட்டி, அவரை முதலில் அன்னா 13
விடம் நடத்திச் சென்றார்கள். அந்த ஆண்டில் தலைமை
ஆசாரியராயிருந்த காய்பாவுக்கு அவர் மாமன். இந்தக் 14
காய்பா தான், ''மக்கள் பொருட்டு ஒரே ஒரு மனிதன்
சாவது நலம்'' என்று யூதருக்கு ஆலோசனை கூறினவர்.

பேதுருவின் மறுதலிப்பு
(மத் 26:69-70; மாற் 14:66-68; லூக் 22:55-57)

15 சீமோன் பேதுருவும் வேறொரு சீடரும் இயேசுவைப்
பின்தொடர்ந்து சென்றார்கள். அந்தச் சீடர் தலைமை
ஆசாரியருக்கு அறிமுகமானவர். எனவே, அவர் இயேசு
வோடு தலைமை ஆசாரியரது மாளிகை முற்றத்திற்குள்
போனார். பேதுரு வெளியில் வாயிலருகே நின்று
16 விட்டார். அப்பொழுது தலைமை ஆசாரியருக்கு
அறிமுகமாயிருந்த அந்தச் சீடர் வெளியே வந்து,
வாயில் காப்பவளிடம் சொல்லி, பேதுருவை உள்ளே
17 அழைத்துக்கொண்டு போனார். அப்பொழுது வாயில்
காக்கும் வேலைக்காரி பேதுருவிடம், "நீயும் அந்த
மனிதனுடைய சீடருள் ஒருவனல்லவா?" என்று
18 கேட்டாள். அவர், "இல்லை" என்றார். அது குளிர்
காலமாயிருந்தபடியால் வேலைக்காரரும் காவலரும்
கரியினால் நெருப்பு உண்டாக்கி, அங்கே நின்று குளிர்
காய்ந்துகொண்டிருந்தார்கள்; பேதுருவும் அவர்களோடு
நின்று குளிர்காய்ந்துகொண்டிருந்தார்.

தலைமை ஆசாரியரது விசாரணை
(மத் 26:59-66; மாற் 14:55-64; லூக் 22:66-71)

19 தலைமை ஆசாரியர் இயேசுவிடம் அவருடைய
சீடரைப்பற்றியும் அவருடைய போதனையைப்பற்றியும்
20 விசாரித்தார். இயேசு மறுமொழியாக, "உலகமே
அறிய நான் வெளிப்படையாகப் பேசியிருக்கிறேன். யூதரெல்
லாரும் கூடிவரும் தொழுகைக்கூடங்களிலும் திருக்
கோவிலிலும்தான் நான் எப்பொழுதும் போதித்தேன்.
21 மறைவாக ஒன்றும் பேசவில்லை. என்னிடம் ஏன் இதை
விசாரிக்கிறீர்? நான் சொன்னதைக் கேட்டவர்களிடம்
விசாரித்துப்பாரும்; நான் அவர்களுக்கு என்ன சொன்
னேன் என்பது அவர்களுக்குத் தெரியும்" என்று சொன்
22 னார். அவர் இப்படிச் சொன்னதும் பக்கத்தில் நின்று
கொண்டிருந்த காவலருள் ஒருவன், "தலைமை ஆசாரிய
ருக்கு இப்படித்தானா பதில் சொல்லுவது?" என்று
சொல்லிக்கொண்டே இயேசுவை ஓர் அறை அறைந்தான்.
23 இயேசு அவனைப் பார்த்து, "நான் பேசியது தவறாயிருந்
தால், தவறு என்னவென்பதை எடுத்துக்காட்டு; நான்
பேசியது சரியென்றால் ஏன் என்னை அடிக்கிறாய்?"
24 என்று கேட்டார். அதன்பின் அன்னா அவரைக்

கட்டுண்டவராகவே தலைமை ஆசாரியராகிய காய்பா
விடம் அனுப்பினார்.

பேதுரு மறுபடியும் மறுதலித்தல்

(மத். 26:71–75; மாற். 14:69–72; லூக். 22:58–62)

சீமோன் பேதுரு குளிர்காய்ந்துகொண்டு நிற்கையில் 25
சிலர் அவரிடம், ''நீயும் அவருடைய சீடருள் ஒருவ
னல்லவா?'' என்று கேட்டார்கள். அவர், ''இல்லை''
என்று மறுதலித்தார். தலைமை ஆசாரியருடைய வேலைக் 26
காரருள் ஒருவன், ''தோட்டத்தில் நான் உன்னை
அவனோடு பார்த்தேனல்லவா?'' என்று கேட்டான்.
இவன் பேதுருவினால் காது துண்டிக்கப்பட்டவனுக்கு
உறவினன். பேதுரு மீண்டும் மறுதலித்தார். உடனே 27
சேவல் கூவிற்று.

பிலாத்துவின் முன்னிலையில்

(மத். 27:1,2,11–14; மாற். 15:1–5; லூக். 23:1–5)

பிறகு அவர்கள் இயேசுவைக் காய்பாவினிடமிருந்து 28
மாநிலத் தலைவனின் மாளிகைக்கு அழைத்துச்
சென்றார்கள். அது பொழுது விடியும் வேளை. பஸ்கா
விருந்தை உண்ணுமுன் தீட்டுப்படாமலிருக்கவேண்டும்
என்பதற்காக அவர்கள் அந்த மாளிகைக்குள் நுழைய
வில்லை. ஆகையால் பிலாத்து வெளியே அவர்களிடம் வந்து, 29
''இந்த மனிதன்மீது நீங்கள் சுமத்தும் குற்றமென்ன?''
என்று கேட்டான். அதற்கு அவர்கள், ''இவன் குற்றம் 30
செய்திராவிட்டால் இவனை உம்மிடம் ஒப்புக்கொடுக்க
வந்திருக்கமாட்டோமே'' என்றார்கள். அப்பொழுது 31
பிலாத்து அவர்களைப் பார்த்து, ''இவனைக் கொண்டு
போய் உங்கள் சட்டப்படி நீங்களே விசாரணை செய்து
கொள்ளுங்கள்'' என்றான். அதற்கு யூதர்கள், ''யாருக்
கும் மரண தண்டனை அளிக்க எங்களுக்கு அதிகாரம்
இல்லையே'' என்று சொன்னார்கள். இவ்வாறு சொல்லி, 32
இயேசு தமக்கு இன்னவகையான மரணம் வரும் என்று
குறிப்பிட்டுச் சொன்னது நிறைவேறும்படி செய்து
விட்டார்கள்.

பிலாத்து மீண்டும் மாளிகைக்குள் சென்று இயேசுவை 33
வரவழைத்து, ''நீ யூதருக்கு அரசனா?'' என்று கேட்
டான். அதற்கு இயேசு, ''நீரே இப்படிக் கேட்கிறீரா, 34
அல்லது மற்றவர்கள் என்னைப்பற்றி உம்மிடம் கூறினார்

35 களா?'' என்று கேட்டார். பிலாத்து, ''என்ன? நான்
ஒரு யூதனா? உன்னுடைய இனத்தவரும் தலைமை ஆசாரி
யர்களுமே உன்னை என்னிடம் ஒப்புக்கொடுத்திருக்
கிறார்கள். நீ என்ன செய்தாய்?'' என்று கேட்டான்.
36 அப்பொழுது இயேசு, ''என் அரசு இவ்வுலகத்தின்
இயல்புடையதன்று; என் அரசு இவ்வுலகத்தின் இயல்
புடையதாயிருந்தால், நான் யூதரிடம் ஒப்புக்கொடுக்கப்
படாதபடி என் ஆள்கள் எதிர்த்துப் போராடியிருப்
பார்கள்; இல்லை, என் அரசு இவ்வுலகத்தின் இயல்
37 புடையதன்று'' என்று சொன்னார். அப்பொழுது
பிலாத்து, ''அப்படியானால், நீ ஓர் அரசன்தானே?''
என்று கேட்க, இயேசு, ''நான் அரசனென்று நீரே
சொல்லுகிறீர்; சத்தியத்தைக் குறித்துச் சாட்சி கூறவே
நான் பிறந்தேன். அதற்காகவே இந்த உலகத்துக்கு
வந்தேன்; தனக்குள்ளே சத்தியத்தை உடையவன்
ஒவ்வொருவனும் என் குரலுக்குச் செவிசாய்க்கிறான்''
38 என்று கூறினார். பிலாத்து அவரிடம், ''சத்தியம் என்பது
என்ன?'' என்று கேட்டான்.

மரணத்தீர்ப்பு அளித்தல்

(மத். 27:15–31; மாற். 15:6–20; லூக். 23:13–25)

இப்படிக் கேட்டுவிட்டு அவன் மறுபடியும் வெளியே
யூதரிடம் வந்து, ''நான் அவனிடம் ஒரு குற்றத்தையும்
39 காணவில்லை. பஸ்காப் பண்டிகையின்போது உங்களுக்
காக ஒரு கைதியை விடுதலை செய்யும் வழக்கம் இருக்
கிறதே, அதன்படி நான் உங்களுக்காக யூதருக்கு
அரசனாகிய இவனை விடுதலை செய்வது உங்களுக்கு
40 விருப்பந்தானா?'' என்று கேட்டான். அதற்கு அவர்கள்,
''அவன் வேண்டாம், பரபாஸ்தான் வேண்டும்'' என்று
அடுத்தடுத்துக் கூச்சலிட்டார்கள். பரபாஸ் என்றவன்
ஒரு கொள்ளைக்காரன்.

19 அதன்பின், பிலாத்து இயேசுவைப் பிடித்து
2 வாரினால் அடிக்கும்படி செய்தான். படைவீரர்
முள்ளால் ஒரு முடியைப் பின்னி அதை அவர் தலையில்
வைத்து, செந்நிற மேலாடை ஒன்றை அவருக்கு அணிந்
3 தனர்; பிறகு அவரிடம் மீண்டும் மீண்டும் வந்து,
''யூதருடைய அரசனே, வாழ்க!'' என்று சொல்லி
4 அவரை அறைமேல் அறை அறைந்தனர். பிலாத்து
மறுபடியும் வெளியே வந்து மக்களை நோக்கி, ''நான்

அவனிடம் ஒரு குற்றத்தையும் காணவில்லை என்பதை
உங்களுக்குத் தெரிவிக்கும்படி அவனை வெளியில் உங்க
ளிடமே கொண்டுவருகிறேன்'' என்று சொன்னான்.
இயேசு முள்முடியும் செந்நிற மேலாடையும் அணிந்தவ 5
ராய் வெளியே வந்தார். பிலாத்து அவர்களைப் பார்த்து,
''இதோ, மனிதன்!'' என்றான். அவரைக் கண்டதும் 6
தலைமை ஆசாரியர்களும் காவலரும், ''சிலுவையில்
அறையும், சிலுவையில் அறையும்'' என்று கூக்குரலிட்
டார்கள். பிலாத்து அவர்களிடம், ''நீங்களே இவனைக்
கொண்டுபோய்ச் சிலுவையில் அறையுங்கள். நான்
இவனிடம் ஒரு குற்றத்தையும் காணவில்லை'' என்று
சொன்னான். அதற்கு யூதர்கள், ''இவன் தன்னைக் 7
கடவுளின் மைந்தன் என்று கூறிக்கொள்ளுகிறான்.
எங்களுக்கு ஒரு சட்டம் உண்டு. அந்தச் சட்டத்தின்படி
இவன் சாகவேண்டும்'' என்று சொன்னார்கள்.

இந்த வார்த்தையைக் கேட்டதும் பிலாத்து இன்னும் 8
மிகுதியாக அஞ்சினான். அவன் மறுபடியும் மாளிகைக் 9
குள் சென்று இயேசுவினிடம், ''நீ எங்கிருந்து வந்தவன்?''
என்று கேட்டான். இயேசுவோ அவனுக்குப் பதிலளிக்க
வில்லை. அப்பொழுது பிலாத்து, ''என்னோடு பேசமாட் 10
டாயா? உன்னை விடுதலை செய்யவும் எனக்கு அதிகார
முண்டு, உன்னைச் சிலுவையில் அறையவும் எனக்கு
அதிகாரமுண்டு; இது உனக்குத் தெரியுமல்லவா?''
என்று கேட்டான். அதற்கு இயேசு, ''விண்ணிலிருந்து 11
உமக்கு அதிகாரம் அளிக்கப்படாதிருந்தால் என்மேல்
உமக்கு எந்த அதிகாரமும் இல்லை. இப்படியிருப்பதால்,
என்னை உம்மிடம் ஒப்புக்கொடுத்தவன்மேல் பெரும் பழி
சுமரும்'' என்று சொன்னார். அதன்பேரில் பிலாத்து 12
அவரை எப்படியாவது விடுதலை செய்ய வேண்டுமென்று
எண்ணினான். ஆனால் யூதர்களோ, ''இவனை விடுதலை
செய்தால், நீர் ரோமப் பேர்ரசருடைய நண்பர் என்று
சொல்வதற்கில்லை; தன்னை அரசனாக்கிக்கொள்ளும்
எவனும் பேரரசருக்கு எதிரியே'' என்று கூக்குரலிட்
டார்கள்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் பிலாத்து இயேசுவை 13
வெளியே அழைத்துக்கொண்டு வந்தான்; பிறகு கல்தளம்
என்று சொல்லப்படும் இடத்திலுள்ள நீதிபதி இருக்கை
மீது உட்கார்ந்தான். அந்த இடம் எபிரேயு மொழியில்
கபத்தா எனப்படும். அன்று பஸ்காப் பண்டிகைக்கு
ஆயத்த நாள். மணியும் கிட்டத்தட்டப் பகல் பன்னி 14

ரண்டு* ஆகிவிட்டிருந்தது. பிலாத்து யூதரை நோக்கி,
15 "இதோ, உங்கள் அரசன்" என்று சொன்னான். அவர்
களோ, "தொலைத்துவிடும், தொலைத்துவிடும், சிலுவை
யில் அறையும்" என்று கூக்குரலிட்டார்கள். பிலாத்து,
"உங்கள் அரசனையா நான் சிலுவையில் அறைவது?"
என்று கேட்டான். அதற்குத் தலைமை ஆசாரியர்கள்,
"ரோமப் பேரரசரைத் தவிர வேறு அரசர் எங்களுக்கு
16 இல்லை" என்று சொன்னார்கள். எனவே, முடிவில்
பிலாத்து அவரைச் சிலுவையில் அறையும்படி அவர்க
ளிடம் ஒப்புக்கொடுத்தான்.

சிலுவையில் அறைதல்

(மத். 27:32-44; மாற். 15:25-32; லூக். 23:26-43)

அவர்கள் இயேசுவைப் பிடித்துக்கொண்டு போனார்கள்.
17 அவர் தமது சிலுவையைத் தாமே சுமந்துகொண்டு,
நகரத்துக்கு வெளியே இருந்த தலைபோட்டிடம் என்னும்
இடத்துக்குப் போனார். அது எபிரேய மொழியில்
18 கொல்கொதா எனப்படும். அங்கே இயேசுவைச் சிலுவை
யில் அறைந்தார்கள்; அவரோடு வேறு இருவரை இரு
பக்கங்களிலும், அவரை நடுவிலும் சிலுவையில் அறைந்
19 தார்கள். பிலாத்து ஓர் அறிக்கையை எழுதி அதைச்
சிலுவையில் பொருத்தும்படி செய்தான். அதில்,
"நாசரேத்தூர் இயேசு யூதரின் அரசன்" என்று எழுதி
20 யிருந்தது. இயேசுவைச் சிலுவையில் அறைந்த இடம்
நகரத்துக்குப் பக்கத்தில் இருந்ததால் யூதர் பலர் அந்த
அறிக்கையைப் படித்தனர். அது எபிரேய இலத்தீன்
21 கிரேக்க மொழிகளில் எழுதப்பட்டிருந்தது. யூதருடைய
தலைமை ஆசாரியர்கள் பிலாத்துவினிடம், "யூதரின்
அரசன் என்று எழுதவேண்டாம், 'நான் யூதரின் அரசன்'
என்று அவன் சொல்லிக்கொண்டதாக எழுதவேண்டும்"
22 என்று கேட்டுக்கொண்டார்கள். அதற்குப் பிலாத்து,
"நான் எழுதினது எழுதினதே" என்று சொன்னான்.

23 இயேசுவைச் சிலுவையில் அறைந்தபின் படைவீரர்கள்
அவருடைய உடைகளை எடுத்து அதை நான்கு பாகங்க
ளாக்கி ஆளுக்கு ஒரு பாகம் எடுத்துக்கொண்டார்கள்.
உள்ளங்கியையும் எடுத்தார்கள். ஆனால் அது தையலே
இல்லாமல் மேலிருந்து அடிவரை ஒரே துணியாய்
24 நெய்யப்பட்டிருந்தது. ஆகையால் அவர்கள், "நாம்
இதைக் கிழிக்காமல், இது யாருக்குக் கிடைக்கும் என்று

* மூலத்தில், யூதர் கணக்குப்படி, ஆறாம் மணி என்றிருக்கிறது.

பார்க்கச் சீட்டுக் குலுக்கிப் போடுவோம்'' என்று
ஒருவரோடொருவர் பேசிக்கொண்டு, அவ்வாறே
செய்தார்கள்.

''என் ஆடைகளைத் தங்களுக்குள் பங்கிட்டுக்கொண்டு
என் உடையின்பேரில் சீட்டுக் குலுக்கினார்கள்''

என்கிற வேதவாக்கியமும் இவ்வாறு நிறைவேறிற்று.
இயேசுவின் தாயாரும் அவருடைய தாயாரின் சகோதரி 25
யும் கிலெயோப்பாவின் மனைவியாகிய மரியாளும்,
மகதலேனா மரியாளும் அவரது சிலுவையருகில் நின்று
கொண்டிருந்தார்கள். தம்முடைய தாயாரும் தாம் 26
நேசித்த சீடரும் அருகே நிற்கிறதை இயேசு கண்டு, தம்
தாயாரிடம், ''அம்மணீ, அதோ உன் மகன்'' என்றார்.
பிறகு அந்தச் சீடரை நோக்கி, ''அதோ உன் தாய்'' 27
என்றார். அந்நேர முதல் அந்தச் சீடர் அவரை ஏற்றுக்
கொண்டு தம் வீட்டில் ஆதரித்து வந்தார்.

இயேசுவின் மரணம்

(மத். 27:45–56; மாற். 15:33–41; லூக். 23:44–49)

அதன்பின், எல்லாம் முடிந்தன என்பதை இயேசு 28
அறிந்து, ''தாகமாயிருக்கிறேன்'' என்றார். நிறைவேற
வேண்டிய வேதவாக்கியம் முற்றிலும் நிறைவேறிற்று.
அங்கே ஒரு பாத்திரம் நிறைய காடி இருந்தது. அந்தக் 29
காடியில் கடற்காளானைத் தோய்த்து, அதை ஈசோப்புத்
தண்டில் பொருத்தி, அவர் வாயருகில் பிடித்தார்கள்.
காடியை வாயில் வாங்கினபின் இயேசு, ''முடிந்தது'' 30
என்றார்; பிறகு தலையைச் சாய்த்து ஆவியை ஒப்புக்
கொடுத்தார்.

ஈட்டியால் குத்துதல்

அன்று ஆயத்த நாளாகிய வெள்ளிக்கிழமை; அடுத்த 31
நாள் தனிச் சிறப்புடைய ஓர் ஓய்வுநாள். அந்த ஓய்வு
நாளில் உடல்கள் சிலுவையில் இராதபடி காலெலும்பு
களை முறித்து அவற்றை எடுத்துவிடும்படி பிலாத்துவி
னிடம் யூதர்கள் கேட்டுக்கொண்டார்கள். எனவே, படை 32
வீரர்கள் போய், இயேசுவோடு சிலுவையில் அறையப்
பட்டவர்களுள் ஒருவன் காலெலும்புகளை முதலிலும்,
பிறகு அடுத்தவன் காலெலும்புகளையும் முறித்
தார்கள். இயேசுவினிடம் அவர்கள் வந்தபோதோ, 33
அவர் ஏற்கெனவே மரணமடைந்திருப்பதைக் கண்ட
தால், அவருடைய காலெலும்புகளை முறிக்கவில்லை.

34 ஆனால் அவரது விலாப்புறத்தில் படைவீரருள் ஒருவன்
ஈட்டியால் குத்தினான்; உடனே இரத்தமும் தண்ணீரும்
35 வெளிவந்தன. அதை நேரில் கண்டவனே இதற்குச்
சாட்சி கூறியிருக்கிறான். அவனது சாட்சியும் உண்மை
யானதே. தான் கூறுவது உண்மையென்பது அவனுக்குத்
தெரியும்; நீங்களும் நம்பவேண்டுமென்றே இதைக் கூறி
36 யிருக்கிறான். “அவருடைய எலும்புகளுள் ஒன்றும்
முறிக்கப்படுவதில்லை” என்று வேதவாக்கியம் சொல்லு
37 கிறபடியே இப்படி நடந்தது. மேலும், “தாங்கள்
ஊடுருவக் குத்தினவரை உற்றுநோக்குவார்கள்” என்று
வேறொரு வேதவாக்கியமும் கூறுகிறது.

அடக்கம் செய்தல்

(மத். 27:57-61; மாற். 15:42-47; லூக். 23:50-56)

38 அதற்குப்பின், அரிமத்தியா ஊர் யோசேப்பு என்பவர்
இயேசுவின் உடலை எடுத்துக்கொண்டு போகப் பிலாத்துவி
னிடம் அனுமதி கேட்டார். அந்த யோசேப்பும்
இயேசுவின் சீடரே. ஆனால் அவர் யூதருக்கு அஞ்சி
அந்தரங்க சீடராகவே இருந்தார். பிலாத்து அனுமதி
கொடுக்கவே, அவர் வந்து இயேசுவின் உடலை எடுத்துக்
39 கொண்டு போனார். முன்பு ஒருநாளிரவு இயேசுவினிடம்
வந்த நிக்கொதேமு என்பவரும் அங்கே வந்தார். அவர்
வெள்ளைப்போளமும், அகில் தூளும் சேர்ந்த வாசனைக்
கலவையை ஏறக்குறைய நூறு ராத்தல் கொண்டுவந்
40 திருந்தார். அவர்கள் இயேசுவின் உடலை எடுத்து, யூதர்
அடக்கம் செய்யும் முறைமைப்படி சுகந்தவர்க்கங்களோடு
41 அதைத் துணிகளில் சுற்றிக் கட்டினார்கள். அவர் சிலுவை
யில் அறையப்பட்ட இடத்தில் ஒரு தோட்டம் இருந்தது.
அந்தத் தோட்டத்தில் அதுவரையிலும் யாரையும்
அடக்கம் செய்யப் பயன்படுத்தாத புதிய கல்லறை ஒன்று
42 இருந்தது. அன்று யூதரின் பண்டிகைக்கு ஆயத்த
நாளாயிருந்ததாலும், அந்தக் கல்லறை அருகிலிருந்த
தாலும், இயேசுவை அதில் வைத்தார்கள்.

இயேசு உயிர்த்தெழுந்தார்

(மத். 28:1-10; மாற். 16:1-8; லூக். 24:1-12)

20 வாரத்தின் முதல் நாளன்று மகதலேனா மரியாள்
விடியற்காலையில் இருட்டு நீங்குமுன் கல்லறைக்குப்
போய், கல்லறையின் வாயிலை அடைத்திருந்த கல்
2 அகற்றப்பட்டிருந்ததைக் கண்டாள். கண்டதும், அவள்

விரைந்து ஓடிச் சீமோன் பேதுருவினிடமும், இயேசு
நேசித்த அந்த மற்றச் சீடரிடமும் வந்து அவர்களிடம்,
''ஆண்டவரைக் கல்லறையிலிருந்து யாரோ எடுத்துக்
கொண்டு போய்விட்டார்கள்; அவரை எங்கே வைத்
திருக்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியவில்லை''
என்று சொன்னாள். உடனே, பேதுருவும் மற்றச் சீடரும் 3
புறப்பட்டுக் கல்லறையை நோக்கிப் போனார்கள். அவ் 4
விருவரும் சேர்ந்தே ஓடினர். ஆனால், பேதுருவை மற்றச்
சீடர் முந்திக்கொண்டு விரைந்து ஓடி முதலில் கல்
லறையை அடைந்தார். அவர் குனிந்து உள்ளே பார்த்த 5
போது துணிகள் கிடக்கிறதைக் கண்டார். ஆனால்
உள்ளே போகவில்லை. அவருக்குப் பின் வந்த சீமோன் 6
பேதுரு நேரே கல்லறைக்குள் நுழைந்தார். அங்கே
துணிகள் கிடக்கிறதைக் கவனித்தார். இயேசுவின் 7
தலையை மூடியிருந்த துணி அந்தத் துணிகளோடு
இல்லாமல் தனியாய் ஓரிடத்தில் சுருட்டிக் கிடக்
கிறதையும் கவனித்தார். கல்லறைக்கு முதலில் வந்த 8
அந்த மற்றச் சீடரும் பிறகு உள்ளே நுழைந்தார்.
அதைப் பார்த்து, நடந்ததை விளங்கிக்கொண்டு
நம்பிக்கையுள்ளவரானார். ''அவர் இறந்தோரிடமிருந்து 9
எழுந்திருக்க வேண்டும்'' என்று வேதத்தில் சொல்லி
யிருப்பதை அவர்கள் அதுவரையிலும் விளங்கிக்கொள்
ளாமலிருந்தார்கள். பிறகு அந்தச் சீடர்கள் தங்கள் 10
இருப்பிடங்களுக்குத் திரும்பிப் போய்விட்டார்கள்.

இயேசு மகதலேனா மரியாளுக்குக் காட்சியளித்தல்

(மத். 16:9–11)

மரியாள் கல்லறைக்கு வெளியேவந்து அதனருகில் நின்று 11
அழுதுகொண்டிருந்தாள். அவள் அழுதுகொண்டே
குனிந்து கல்லறைக்குள் பார்த்தாள். இயேசுவின் உடல் 12
வைக்கப்பட்டிருந்த இடத்தில் வெண்ணுடை அணிந்
திருந்த இரண்டு தெய்வதூதர், தலைமாட்டில் ஒருவனும்
கால்மாட்டில் ஒருவனும் உட்கார்ந்திருக்கிறதைக்
கண்டாள். அவர்கள் அவளைப் பார்த்து, ''ஏன் அம்மா 13
அழுகிறாய்?'' என்று கேட்க, அவள், ''என் ஆண்டவரை
யாரோ எடுத்துக்கொண்டு போய்விட்டார்கள்; அவரை
எங்கே வைத்திருக்கிறார்கள் என்பதும் தெரியவில்லை''
என்றாள். இவ்வாறு சொல்லிவிட்டு அவள் தலையைப் 14
பின் பக்கம் திருப்பினாள்; இயேசு நிற்கிறதைக் கண்டாள்;
ஆனால் அது இயேசு என்பது அவளுக்குத் தெரியாது.

15 இயேசு அவளைப் பார்த்து, ''அம்மா, ஏன் அழுகிறாய்?
யாரைத் தேடுகிறாய்?'' என்று கேட்டார். அவளோ
அவரைத் தோட்டக்காரன் என்று நினைத்து அவரிடம்,
''ஐயா, நீர் அவரைத் தூக்கிக்கொண்டுபோயிருந்தால்,
அவரை எங்கே வைத்தீர் என்று எனக்குச் சொல்லும்,
நான் அவரை எடுத்துக்கொள்ளுகிறேன்'' என்றாள்.
16 இயேசு அவளை நோக்கி, ''மரியாளே'' என்றார். அவள்
அவர் பக்கமாகத் திரும்பி எபிரேய மொழியில், ''ரபூனி''
என்றாள். அதற்குப் போதகரே என்பது பொருள்.
17 இயேசு அவளைப் பார்த்து, ''என்னைப் பற்றிக்கொண்
டிருக்க முயலாதே; நான் இன்னும் தந்தையாரிடம்
ஏறிச் செல்லாமலேதான் இருக்கிறேன். ஆனால், என்
தந்தையாரும் உங்கள் தந்தையாரும், என் கடவுளும்
உங்கள் கடவுளுமாயிருக்கிறவரிடம் நான் செல்லப்
போகிறேன். இதை நீ என் சகோதரரிடம் போய்ச்
18 சொல்'' என்றார். மகதலேனா மரியாள் சீடரிடம் போய்,
''நான் ஆண்டவரைக் கண்டேன்'' என்று அறிவித்தாள்;
அவர் தன்னிடம் சொன்ன இந்தச் செய்தியையும்
அவர்களுக்குத் தெரிவித்தாள்.

இயேசு சீடர்களுக்குக் காட்சியளித்தல்

(மத். 28:16–20; மாற். 16:14–18; லூக். 24:36–49)

19 வாரத்தின் முதல் நாளாகிய அன்று மாலை நேரத்தில்,
சீடர்கள் ஓர் அறையில் கூடியிருந்தார்கள். யூதரைப்
பற்றிய அச்சத்தினால் கதவுகள் தாழிடப்பட்டிருந்தன.
அப்பொழுது இயேசு வந்து அவர்களிடையே நின்று,
''உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக'' என்றார்.
20 இவ்வாறு சொல்லி, அவர் தம் கைகளையும் விலாவை
யும் அவர்களுக்குக் காட்டினார். சீடர்கள் ஆண்டவரைக்
21 கண்டு பெருமகிழ்ச்சியடைந்தார்கள். இயேசு மறுபடியும்
அவர்களிடம், ''உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக;
தந்தையார் என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை
22 அனுப்புகிறேன்'' என்று சொன்னார். இப்படிச் சொல்லி
அவர்கள்மீது ஊதி, ''தூய ஆவியைப் பெற்றுக்
23 கொள்ளுங்கள். யாருடைய பாவங்களை நீங்கள் மன்னிக்
கிறீர்களோ அவை அவர்களுக்கு மன்னிக்கப்பட்ட
வையே. யாருடைய பாவங்களை நீங்கள் மன்னியாதிருக்
கிறீர்களோ அவை அவர்களுக்கு மன்னிக்கப்படாத
வையே'' என்றார்.

இயேசுவும் தோமாவும்

பன்னிருவருள் ஒருவரான திதிமு எனப்படும் தோமா, 24
இயேசு வந்திருந்தபோது அவர்களோடில்லை. எனவே, 25
மற்றச் சீடர், ''ஆண்டவரைக் கண்டோம்'' என்று
அவரிடம் சொல்ல, அவர் அவர்களைப் பார்த்து, அவ
ருடைய கைகளில் ஆணிகளினுலுண்டான தழும்பை நான்
பார்த்து, ஆணி இருந்த இடத்தில் என் விரலை இட்டு,
அவர் விலாவில் என் கையை வைத்துப் பார்த்தாலன்றி
நம்பவேமாட்டேன்'' என்று சொன்னுர்.

எட்டு நாளுக்குப்பின் அவருடைய சீடர்கள் முன் 26
போலவே வீட்டிற்குள் இருந்தார்கள்; அவர்களோடு
தோமாவும் இருந்தார். கதவுகள் தாழிடப்பட்டிருந்தன;
அப்பொழுது இயேசு வந்து அவர்களிடையே நின்று,
''உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக'' என்ருர்.
பிறகு அவர் தோமாவைப் பார்த்து, ''உன் விரலை இங்கே 27
நீட்டி என் கைகளைத் தொட்டுப் பார்த்துக்கொள்; உன்
கையை நீட்டி என் விலாவிலே வை; இன்னும் நம்பிக்கை
யற்றவனுயிராதே, நம்பிக்கையுள்ளவனுயிரு'' என்று
சொன்னுர். அதற்குத் தோமா, ''என் ஆண்டவரே, 28
என் கடவுளே'' என்ருர். இயேசு அவரிடம், ''என்னைப் 29
பார்த்ததனுலேதானே நம்புகிருய்? பார்க்காமலே நம்பு
கிறவர்கள் நற்பேறு பெற்றவர்கள்'' என்று சொன்னுர்.

இந்த நூலை எழுதியதன் நோக்கம்

தெய்வ ஆற்றலுக்கு அடையாளமான வேறு பல 30
செயல்களையும் இயேசு தம்முடைய சீடரின் கண்ணெதிரே
செய்தார். அவை இந்த நூலில் எழுதப்படவில்லை.
எனினும், இதிலுள்ளவை, இயேசு கடவுளின் மைந்த 31
ராகிய கிறிஸ்து என்று நீங்கள் நம்புவதற்காகவும், நம்பி
அவருடைய திருப்பெயரால் மெய்வாழ்வை அடைவதற்
காகவும் எழுதப்பட்டிருக்கின்றன.

இயேசு ஏழு சீடருக்குக் காட்சியளித்தல்

21 பிறகு இயேசு திபேரியா கடலருகில் மறுபடியும்
சீடருக்குக் காட்சியளித்தார். அவர் காட்சியளித்த
வகை இதுவே: சீமோன் பேதுருவும், திதிமு எனப்பட்ட 2
தோமாவும், கலிலேயா நாட்டுக் கானூர் நாத்தான்
வேலும், செபெதேயுவின் மைந்தரும், அவருடைய
சீடருள் வேறு இருவரும் ஒன்ருய்க் கூடியிருந்தனர்.

3 சீமோன் பேதுரு மற்றவர்களைப் பார்த்து, ''நான் மீன்
பிடிக்கப் போகிறேன்'' என்று சொன்னார். அதற்கு
அவர்கள், ''நாங்களும் உம்மோடு வருகிறோம்''
என்றார்கள். அவர்கள் போய்ப் படகில் ஏறினார்கள்.
அன்று இரவு முழுவதும் அவர்கள் ஒன்றும் பிடிக்கவில்லை.
4 பொழுது விடியும் வேளையில் இயேசு கரையில் வந்து
நின்றார். ஆனால், அங்கே நின்றவர் இயேசு என்பது சீடர்க
5 ளுக்குத் தெரியாது. இயேசு அவர்களைப் பார்த்து,
''பிள்ளைகளே, மீன் ஒன்றும் கிடைக்கவில்லையா?'' என்று
கேட்டார். அதற்கு அவர்கள், ''இல்லை'' என்று சொன்
6 னார்கள். அப்பொழுது அவர், ''படகின் வலப்புறம்
வலையை வீசுங்கள், கிடைக்கும்'' என்றார். அவர்கள்
அவ்வாறே வீசினார்கள்; ஏராளமான மீன்கள் அகப்பட்டன.
ஆகையால் அவர்களால் வலையை இழுக்க இயலவில்லை.
7 இயேசு நேசித்த அந்தச் சீடர் அதைக் கண்டு பேதுரு
விடம், ''அவர் ஆண்டவரே'' என்று சொன்னார்.
அவர் ஆண்டவரே என்று சொன்னதைக் கேட்டதும்
சீமோன் பேதுரு, தம் ஆடையைக் களைந்திருந்ததால்
மேலாடையை அரையில் கட்டிக்கொண்டு கடலில்
8 குதித்து நீந்திவந்தார். ஆனால், மற்றச் சீடர்களோ
படகில் இருந்தவாறே மீன் நிறைந்திருந்த அந்த வலையை
அப்படியே இழுத்துக்கொண்டு வந்தார்கள். அவர்கள்
கரையிலிருந்து நெடுந்தொலைவிலன்று, ஏறக்குறைய இரு
நூறு முழத்தொலைவிலேதான் இருந்தார்கள்.

9 அவர்கள் கரையில் இறங்கினபோது, கரியினால் நெருப்பு
மூட்டியிருப்பதையும், அதன்மேல் மீன் வேகவைத்திருப்
பதையும், அங்கே அப்பம் இருப்பதையும் கண்டார்கள்.
10 இயேசு அவர்களிடம், ''நீங்கள் இப்போது பிடித்த மீன்
களுள் சிலவற்றைக் கொண்டுவாருங்கள்'' என்று
11 சொன்னார். சீமோன் பேதுரு படகில் ஏறி வலையைக்
கரைக்கு இழுத்தார். வலை நிறையப் பெரிய மீன்கள்
இருந்தன, மொத்தம் நூற்றைம்பத்துமூன்று. அத்தனை
12 மீன்கள் இருந்தும் வலை கிழியவில்லை. இயேசு அவர்
களிடம், ''சாப்பிட வாருங்கள்'' என்று சொன்னார்.
அவர் ஆண்டவரே என்பதை அறிந்துகொண்டதால்,
சீடருள் ஒருவராவது, ''நீர் யார்?'' என்கிற கேள்வியை
13 அவரிடம் கேட்கத் துணியவில்லை. இயேசு அவர்களருகில்
வந்து அப்பத்தை எடுத்துக் கொடுத்தார், மீனையும்
14 அப்படியே கொடுத்தார். இயேசு தாம் இறந்தோரிட
மிருந்து உயிரோடெழுந்தபின் தம் சீடருக்குக் காட்சி
யளித்தது இது மூன்றாம் முறையாகும்.

இயேசுவும் பேதுருவும்

அவர்கள் சாப்பிட்டு முடிந்தபின் இயேசு சீமோன் 15
பேதுருவைப் பார்த்து, ''யோவான் மகனுகிய சீமோனே,
இவர்களைவிட நீ என்னிடம் அதிகமாக அன்புகூர்
கிருயா?'' என்று கேட்டார். அதற்கு அவர், ''ஆம்,
ஆண்டவரே, நான் உம்மை நேசிக்கிறேன் என்பது
உமக்குத் தெரியும்'' என்று சொன்னுர். அவர், ''என்
ஆட்டுக்குட்டிகளை மேய்த்துவா'' என்ருர். இரண்டாம் 16
முறை அவர் அவரிடம், ''யோவான் மகனுகிய சீமோனே,
நீ என்னிடம் அன்புகூர்கிருயா?'' என்று கேட்டார்.
அதற்கு அவர், ''ஆம், ஆண்டவரே, உம்மை நேசிக்கிறேன்
என்பது உமக்குத் தெரியும்'' என்று சொன்னுர். அவர்,
''என் ஆடுகளுக்கு மேய்ப்பனுயிரு'' என்ருர். மூன்ரும் 17
முறையும் அவர் அவரைப் பார்த்து, ''யோவான் மகனுகிய
சீமோனே, என்னை நீ நேசிக்கிருயா?'' என்று கேட்டார்.
''என்னை நீ நேசிக்கிருயா?'' என்று அவர் தம்மிடம்
மூன்ரும் முறை கேட்டதால், பேதுரு வருத்தமுற்று,
''ஆண்டவரே, எல்லாம் உமக்குத் தெரியும், நான் உம்மை
நேசிக்கிறேன் என்பதையும் நீர் அறிவீர்'' என்ருர். இயேசு
அவரிடம், ''என் ஆடுகளை மேய்த்துவா. நீ இளைஞு 18
யிருந்தபோது, உனக்கு விருப்பமான இடத்துக்கு நீ
வரிந்து கட்டிக்கொண்டு போவதுண்டு, ஆனுல் நீ வயது
முதிர்ந்தவனுயிருக்கும்போது, உன் கைகளை நீட்டுவாய்,
வேருெருவன் உன்னைக் கட்டி உனக்கு விருப்பமில்லாத
இடத்துக்குக் கொண்டுசெல்வான் என்று உனக்கு மிகவும்
திட்டமாகச் சொல்லுகிறேன்'' என்று சொன்னுர். அவர் 19
எவ்வாறு மரணமடைந்து கடவுளின் மாட்சிமையை
வெளிப்படுத்துவார் என்பதைக் குறிப்பிடுவதற்காக
இப்படிச் சொன்னுர். இப்படிச் சொன்னபின் அவர்
அவரிடம், ''என்னைப் பின்பற்றி வா'' என்ருர்.

இயேசுவால் நேசிக்கப்பட்ட சீடன்

பேதுரு திரும்பிப் பார்த்து, இயேசுவால் நேசிக்கப் 20
பட்ட சீடரும் பின்பற்றி வருகிறதைக் கண்டார். கடைசி
இராப்பந்தியில் இயேசுவின் மார்பருகில் சாய்ந்து,
''ஆண்டவரே, உம்மைக் காட்டிக்கொடுப்பவன் யார்?''
என்று கேட்டவர் அவரே. அவரைக் கண்டு பேதுரு 21
இயேசுவினிடம், ''ஆண்டவரே, இவனுக்கு என்ன
நடக்கும்?'' என்று கேட்டார். அதற்கு இயேசு, ''நான் 22
வருமளவும் இவன் உயிரோடிருக்க வேண்டுமென்று நான்

திருவுளங்கொண்டால் உனக்கென்ன? நீ என்னைப்
23 பின்பற்றி வா'' என்று சொன்னார். ஆகையால், அந்தச்
சீடர் இறக்கமாட்டார் என்ற பேச்சு சகோதரரிடையே
பரவிற்று. ஆனால், அவர் இறக்கமாட்டார் என்று இயேசு
சொல்லவில்லை; "நான் வருமளவும் இவன் உயிரோடிருக்க
வேண்டுமென்று நான் திருவுளங்கொண்டால் உனக்
கென்ன?'' என்றுதான் சொன்னார்.

24 அந்தச் சீடரே இவற்றிற்குச் சாட்சியாயிருக்கிறார்.
அவரே இவற்றை எழுதிவைத்தவர். அவருடைய
சாட்சியம் உண்மை என்பது எங்களுக்குத் தெரியும்.
25 இயேசு செய்த வேறு பல காரியங்களும் உண்டு;
அவற்றை ஒவ்வொன்றாக எழுதினால், எழுதப்படும்
நூல்களை உலகமே கொள்ளாது என்று நினைக்கிறேன்.